இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 115 | வள்ளுவர் ஆண்டு 2048 | பங்குனி 08 செவ்வாய்க்கிழமை 21.03.2017

அமெ. வேவு வானூர்தி தாக்குதலில்

## இலங்கை அணி மீது சூடு நடத்தியவர் சாவு

காபூல், மார்ச் 21
ஆப்கானிஸ்தானில், அமெரிக்க ஆளில்லா வானூர்திகள் மேற்கொண்ட வான் வழித் தாக்குதலில் இலங்கைக் கிரிக்கெட் அணி மீது தாக்கு >> 24



காணாமற்போனோர் உயிருடன் இல்லை என்று

# துணிவிருந்தால் கோத்தபாய எம் முன் சொல்லட்டும் பார்ப்போம்

போராடும் உறவினர்கள் ஆவேசம்

யாழ்ப்பாணம், மார்ச் 21
எங்கள் பிள்ளைகளை நாங்கள்தான் இராணுவத்திடம் கையளித்தோம். அவர்கள் சரணடைந்ததைக் கண்ட சாட்சியாக இன்னமும் நாங்கள் உயிருடன்தான் இருக்கின்றோம். இராணுவத்திடம் ஒப்படைத்த பிள்ளைகள் இறந்துபோனார்கள் என்று எப்படிச் சொல்லுவீர்கள். துணிவிருந்தால் நேரில் எங்கள் முன்வந்து சொல்லுங்கள் பார்க்கலாம். >> 24

## ஹர்ச டி சில்வா தலைமையில் ஜெனிவாவில் அரச தரப்பினர்

கொழும்பு, மார்ச் 21
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மானம் மீது நாளை விவாதம் நடைபெறும்போது, அரசதரப்புக் குழுவுக்குத் பிரதி அயலுறவுத்துறை அமைச்சர் ஹர்ச டி சில்வா தலைமை தாங்குவார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.
இலங்கை தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹூசைன் சமர்ப்பித்துள்ள அறிக்கை மீதான விவாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நாளை இடம்பெறவுள்ளது. >> 24

முகத்தார் மூலி



மோடிக்கு 'லேடி' தொடர்ந்து பிரச்சினைதான் பாருங்கோ !

மோடி சக்திமிக்க தலைவரெனில்

# ஜெனிவாவில் இலங்கைக்கு இந்தியா ஆதரவு வழங்கக்கூடாது

நாடாளுமன்றத்தில் நேற்று அ.தி.மு.கவினர் போர்க்கொடி

யாழ்ப்பாணம், மார்ச் 21
மோடி உலகின் சக்தி வாய்ந்த தலைவர் என்றால், இலங்கைக்குக் கால அவகாசம் வழங்கும் தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு வழங்கக் கூடாது.
இவ்வாறு இந்திய நாடாளுமன்றத்தில் அ.தி.மு.கவினர் வலியுறுத்தியுள்ளனர்.
இலங்கைக்கு 2 வருட கால அவகாசம் வழங்கும் தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நாளை மறுதினம் 23 ஆம் திகதி கொண்டு வரப்படவுள்ளது. இதனை இந்தியா எதிர்க்கவேண்டும் என்று தமிழகத் தலைவர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.
இந்த விடயம் இந்திய நாடாளுமன்றத்திலும் நேற்று எதிரொலித் >> 24

## இலங்கை விவகாரங்களில் முடிவெடுக்கும் அதிகாரம் வில்லியம் ஈ றொட்டுக்கு

நியமித்தது அமெரிக்கா

கொழும்பு, மார்ச் 21
இலங்கை விவகாரம் தொடர்பாக முடிவுகளை எடுக்கும் அதிகாரம், அமெரிக்காவின் தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான முதன்மைப் பிரதி உதவிச்செயலர் வில்லியம் ஈ றொட்டுக்கு வழங்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.
ஜெனிவாவில் இலங்கை விவகாரங்களைக் கையாள்வதற்கான முழு அதிகாரத்தையும், அமெரிக்க இராஜாங்கச் செயலர் றெக்ஸ் ரில்லர்சன், தெற்கு மத்திய ஆசியப் >> 24

## தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேள்விக்கு அரையும் குறையுமாக பதிலளிக்கிறது வடக்கு அமைச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 21
வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பில், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு உரிய பதில் வழங்கப்படவில்லை. >> 23

## வாள் வெட்டுக் கும்பலின் அச்சுறுத்தலால் கோவிலில் தஞ்சமடைந்தனர் மக்கள்

வடமராட்சியில் நேற்றிரவு சம்பவம்

வடமராட்சி, மார்ச் 21
வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்கள் கைது செய்யப்படும் வரை, பாதுகாப்புக்காக ஆலயத்தில் படுத்துறங்குவோம் என்று தெரிவித்த வடமராட்சிப் பகுதியை சேர்ந்த பத்துக்கும் >> 22

## கூரிய ஆயுதத்தால் தலையில் தாக்கியே லசந்த படுகொலை

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, மார்ச் 21
ஊடகவியலாளர் லசந்த துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்படவில்லை என்றும், அவர் தலையில் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு மூளை சிதறடிக்கப்பட்டே கொல்லப்பட்டார் என்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றில் நேற்றுத் >> 24

கால அவகாசம் வழங்கப்பட்டால்

## தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியும்

ஜெனிவாவில் நல்லிணக்க செயலணி நம்பிக்கை

ஜெனிவா, மார்ச் 21
"இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்குவதன் மூலமே தீர்மானத்தில் உள்ள ஏனைய விடயங்களையும் நடைமுறைப்படுத்த முடியும். அரசுக்கு இந்தக் காலப் பகுதியில் அழுத்தங்களைப் பிரயோகித்து பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த முடியும்" இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் சிறப்புக் கூட்டத்தில் தெரிவித்தார் >> 04

ஐ.நா. தீர்மானத்துக்கு இணை அனுசரணை

# கூட்டு அரசுக்குள் பெரும் குழப்பம்

கொழும்பு, மார்ச் 21
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப் பட்டுள்ள தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்க இலங்கை அரசு எடுத்துள்ள முடிவு தொடர்பாகக் கூட்டு அரசுக்குள் கடும் பிடுங்குப்பாடுகள் எழுந்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டுக் கூட்டு அரசில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமயவே போர்க் கொடி தூக்கியுள்ளது. இந்தக் கட்சியின் சார்பில் அமைச்சரவையில் இடம்பெற >> 24

## குமாரபுரம் படுகொலை வழக்கு குறித்து ஜெனிவாவில் அறிக்கை

ஜெனிவா, மார்ச் 21
குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தண்டனையில் இருந்து தப்புவதற்கான வாய்ப்புக்கள் இலங்கையின் நீதித்துறையில் உள்ளன என்று எடுத்துரைக்கும் அறிக்கை நேற்று ஜெனிவா மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப் பட்டது. குமாரபுரம் படுகொலை வழக்கு உள்ளிட்ட முக்கிய வழக்குகளின் தீர்ப்புக்கள் அதில் >> 04

# நாடு கடந்த தமிழீழ அரசு - மகிந்த அணி இடையே ஜெனிவாவில் கடும் சொற்போர்

## ஏற்பாடு செய்த விளக்கக் கூட்டத்தையும் கலைத்துவிட்டு வெளியேறினார் சரத் வீரசேகர

ஜெனிவா, மார்ச் 21
மகிந்த அணியின் குழுவினருக்கும், நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதிநிதிகளுக்கும் இடையே ஜெனிவாவில் நேற்று கடும் மோதல் இடம்பெற்றது.
இந்த மோதல் காரணமாக, சரத் வீரசேகர ஏற்பாடு செய்திருந்த பக்க நிகழ்வு இறுதியில் அவராலேயே கலைக்கப்பட்டது.
தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான போர்க் குற்றச்சாட்டு ஆதாரங்களுடன், மகிந்த அணியினர் ஜெனிவாவை வந்தடைந்துள்ளனர். முன்னாள் கடற்படைத் தளபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரியல் அட்மிரல் சரத் வீரசேகர இந்தக் குழுவுக்குத் தலைமை தாங்குகின்றார்.
மகிந்த அணியால் ஒழுங்கமைக்கப்பட்ட பக்க நிகழ்வு ஜெனிவாவில் நேற்று நடைபெறவிருந்தது. இதற்கு முன்னதாக, நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதிநிதி மணிவண்ணன் சரத் வீரசேகர போர்க்குற்றவாளி என்றும், அவனை சுவிஸ் அரசு கைது செய் வேண்டும் என்றும் கோ னார். இதனால் ரியல் அ மிரல் சரத்வீரசேகரவுட அவருக்கு மோதல் உ வானது. >> 23

## பிரபா உயிருடன் உள்ளார் எனக் கூறப்படும் கருத்தால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

எனவே படை முகாம்களை அகற்றவேண்டாம் என்கிறது ஜாதிக ஹெல உறுமய

கொழும்பு, மார்ச் 21
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரோடு உள்ளதாக பழ.நெடுமாறனும், அமைச்சர் ப.டெனிஸ்வரனும் அடித்துக் கூறுகின்றனர். இவர்களின் கருத்து தேசிய பாதுகாப்புக்கு >> 24

# போராட்டத்தில் ஈடுபடும் காணாமற்போனோரின் உறவுகளுக்கு அச்சுறுத்தல்

## பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி மார்ச் 21

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரித் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கிளிநொச்சி மக்களுக்கு இனம் தெரியாத நபர்களால் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.

பொலிஸார் தமக்குப் போதிய பாதுகாப்பை வழங்கவேண்டும் எனவும் அந்த மக்கள் கோரியுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டுபிடித்துத் தருமாறும், அவர்கள் பற்றிய உண்மையை வெளிப்படுத்துமாறும் கோரிக் கிளிநொச்சியைச் சேர்ந்த உறவுகள் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமான இந்தப் போராட்டத்துக்குப் பல்வேறு தரப்பினரும் ஆதரவு வழங்கி வருகின்றனர். இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கே அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

"கடந்த சில நாள்களாக இனந்தெரியாத சிலர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள எங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் தகவல்களைச் சேகரிக்க முற்படுவதும், புகைப்படங்களை எடுப்பதுமாக உள்ளனர். அவர்களிடம் யார் எனக் கேட்டால் அங்கிருந்து வருகின்றோம், இங்கிருந்து வருகின்றோம் எனத் தெரிவிக்கின்றனர். களவுக்காக இவர்கள் வருகிறார்களா என்றுகூடத் தெரியவில்லை. இதனைக் கருத்திற் கொண்டு பொலிஸார் எமக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டும்" எனப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கூறினர். (த-216)



# 60 பில்லியனை அடுத்த ஆண்டு இறைவரியாக திரட்டவேண்டும்

## உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

60 பில்லியன் ரூபாவை அடுத்த ஆண்டு இறைவரியாக பெற்றுக் கொள்ள நாம் உழைக்கவேண்டும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் கல்யானி தகநாயக்க தெரிவித்தார்.

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின், இணைய மூலமான வரி செலுத்துதல் தொடர்பான கருத்தரங்கு யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள செல்வ மஹால் மண்டபத்தில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு நடைபெற்றது. இதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார் , அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டில் வரியைச் செலுத்துதல், வரி தொடர்பான ஆவணங்களை உரிய முறையில் சமர்ப்பித்தல் போன்ற செயற்பாடுகளை உரிய கால நேரத்தில் சரியாகச் செய்து முடிப்பது வட பிராந்திய இறைவரி அலுவலகமே என்று சொல்வதில் நான் பெருமை அடைகின்றேன். எமது நாட்டின் வளர்ச்சியில் முதுகெலும்பாக அமைவது இந்த வரிப் பணமே ஆகும். ஆகவே அடுத்த ஆண்டு 60 பில்லியன் ரூபாவை வரியாகப் பெற நாம் உழைக்கவேண்டும் என்றார்.

இந்த நிகழ்வில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய ஆணையாளர் பந்துல ஹப்புதந்திரிகே தெரிவிக்கையில்,

நாம் அனைவரும் ஒன்றாகச் செயற்பட்ட காரணத்தால் நாட்டின் சிறந்த இறைவரித் திணைக்கள அலுவலகமாக யாழ்ப்பாணம் திகழ்வதையிட்டுப் பெருமையடைகிறேன். யாழ். பிராந்திய அலுவலகம் வீரசிங்கம் மண்டபத்தின் மூன்றாம் மாடியில் அமைந்துள்ளது. லிப்ற் இல்லாத காரணத்தால் நாம் பெரும் இன்னல்களை எதிர் நோக்குகின்றோம்.

அதற்கான மாற்று வழிகளை அமைத்துத் தருவதற்கான வழிகளைச் செய்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

குருநகரில் உள்ள எமது அலுவலக அமைப்புக்கான காணி ஒதுக்குப்புறமாகக் காணப்படுவதால் வேறு காணியைப் பெற வழிவகை செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரம் உரையாற்றுகையில், வெளிமாவட்ட நிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர்கள் உரிய வரி விதிகளைப் பின்பற்றாமல் யாழ்ப்பாண மாவட்டத்தில் வர்த்தகம் செய்வதால் எமது மாவட்டத்தில் உள்ள முதலீட்டாளர்கள் தொழிற்சாலைகளை நிறுவுவதில் பின்வாங்குகின்றனர். இதனை உரிய முறையில் மேற்கொண்டால் நாமும் அதிகமாக வரியைச் செலுத்த வாய்ப்பாக அமையும் என்றார். (த)

# ஊர்காவற்றுறை கர்ப்பிணிப் படுகொலை

# கணவன், அயலவரின் குருதி மாதிரிகளை மரபணுச் சோதனைக்குட்படுத்த அனுமதி

ஊர்காவற்றுறை, மார்ச் 21

ஊர்காவற்றுறையில் படுகொலை செய்யப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணின் கணவன் மற்றும் அயலவரின் குருதி மாதிரிகள் , மரபணுப் பரிசோதனைக்காக எடுப்பதற்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஏ. எம்.எம். றியால் முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுக் காலை விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 2 சந்தேக நபர்களும் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவன் மற்றும் அவர் வசித்த வீட்டின் அயலவர் ஒருவரும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். மரபணுப் பரிசோதனைக்காக அவர்கள் இருவரின் குருதி மாதிரிகளை எடுப்பதற்கு ஊர்காவற்றுறைப் பொலிஸார் மன்றில் அனுமதி கோரினர்.

"குருதி மாதிரிகள் வழங்க சம்மதமா ?" என்று இருவரிடமும் மன்று கேட்டது. இருவரும் சம்மதம் என்று தெரிவித்தனர். யாழ். போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையில் அவர்களது குருதி மாதிரிகளை இன்று பெற்றுக்கொள்ளுமாறு மன்று கட்டளையிட்டது.

வழக்கு விசாரணைகளை எதிர்வரும் 23ஆம் திகதிவரை ஒத்திவைத்த நீதிவான், அதுவரையில் சந்தேக நபர்கள் இருவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, கடந்த தவணையின் போது இரண்டாவது சந்தேக நபரின் குருதி மாதிரியை சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையில் இன்று வழங்குமாறு நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது.

**பின்னணி**

ஊர்காவற்றுறைப் பகுதியில் கடந்த ஜனவரி மாதம் 24ஆம் திகதி ஒரு பிள்ளையின் தாயும் எட்டு மாத கர்ப்பிணியுமான ஞானசேகரன் ஹம்சிகா (வயது 27) எனும் பெண் கொடூரமாக அடித்துக் கொலை செய்யபட்டார். படுகொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சகோதரர்கள் இருவர் அன்றைய தினம் மாலை மண்டைதீவு சந்தியில் உள்ள ஊர்காவற்றுறைப் பொலிஸாரின் காவலரணில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். (வ-37)

## மருத்துவரின் தங்கச் சங்கிலியை அறுத்தவர்கள் மீது பொலிஸ் சூடு

கொழும்பு.மார்ச் 21

ஆயுர்வேத மருத்துவர் ஒருவரின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அறுத்த இருவர் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடுநடத்தினர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை ஆராச்சிக்கட்டுப் பகுதியில் இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

ஆராச்சிக்கட்டுப் பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்த ஆயுர்வேத மருத்துவர் ஒருவரின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அறுத்த இருவர், மோட்டார் சைக்கிளில் தப்பிச் செல்ல முற்பட்டுள்ளனர். அந்தச் சந்தர்ப்பத்தில் அந்தப் பகுதியில் இருந்து மோட்டார் வாகன பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் சந்தேகநபர்களை நோக்கித் துப்பாக்கியால் சுட்டனர். இதில் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய நிலையில், அவர்கள் அங்கிருந்து தப்பியோடினர். பின்னர் அந்த மோட்டார் சைக்கிள் பிறிதொரு யுவதி மீது மோதி விபத்துக் குள்ளானது. தாம் பயணித்த மோட்டார் சைக்கிளை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு சந்தேகநபர்கள் தப்பி ஓட முற்பட்டுள்ள னர்.

எனினும், அவர்களைத் தொடர்ந்து சென்ற பொலிஸார் இருவரையும் கைது செய்துள்ளனர். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவரும், விபத்தால் மற்றொருவரும் காயமடைந்தனர். அவர்களையும், விபத்துக்குள்ளான பெண்ணையும் பொலிஸார் வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். படுகாயமடைந்த குறித்த பெண் மேலதிக சிகிச்சைகளுக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (த-ஐ)

# வன்னி பட்டதாரிகள் சங்கம் ஆரம்பிப்பு

வவுனியா, மார்ச் 21

வன்னி பட்டதாரிகள் சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தைப் போன்றல்லாது கட்சி பேதமின்றிச் செயற்படஇருப்பதாகவும் இதன்போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது எனச் சிறிலங்கா சுதந்திரப் பட்டதாரிகள் சங்க வன்னி இணைப்பாளர் ம. அனந்தராஜ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா சிறிலங்கா சுதந்திரப் பட்டதாரிகள் சங்க இணைப்பாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடலில் வன்னி பட்டதாரிகள் சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வேலையற்ற மற்றும் வேலையிலுள்ள பட்டதாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும், எதிர்காலத்தில் வேலையில்லா ப்பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பது பற்றியும் இதில் கலந்துரையாடப்பட்டது.

இதில் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா போன்ற பகுதிகளிலிருந்து பட்டதாரிகள் கலந்து கொண்டனர். இதன் செயற்பாடுகளுக்காக வடக்கு மாகாண முதலமைச்சர் சி. வி. விக்கினேஸ் வரனுடனும்,

எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனுடனும் ஒரு மாத காலத்துக்குள் கலந்துரையாடுவதாக தீர்மானிக்கப் பட்டது. அத்துடன் வன்னியில் உள்ள பட்டதாரிகளுக்கு முதற்கட்டமாக வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்காக 45நாள்களுக்குள் வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடுவது என்றும், மூன்று மாத காலத்தில் அரச தலைவரைச் சந்திப்பது என்றும் இதன்போது முடிவெடுக்கப்பட்டது. கடந்த காலத்தில் செயற்பட்டதுபோல குறிப்பிட்ட ஒரு அமைச்சருக்குக் கீழ் செயற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளவதெனவும் தீர்மானிக்கப்பட்டது என்றார். (த-21)

# 40 வருடப் போரில் ஊறிய மக்களை ஒன்றிணைப்பது இலகுவான விடயமல்ல

## கூறுகிறார் தலைமை அமைச்சர்

கொழும்பு, மார்ச் 21

40 வருடங்கள் போர் புரிந்த இந்த நாட்டு மக்களை ஒன்று சேர்ப்பது இலகுவான காரியமல்ல. அரசியல் தீர்வொன்றினால் மாத்திரம் அவர்களை ஒன்றுபடுத்த முடியாது. அரசியல்வாதிகள் என்ற வகையில், அனைவரும் ஒன்று சேர்ந்தே தீர்வொன்றைப் பெற முடியும்.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வீரகெட்டிய விகாரையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது: எமக்குப் பன்னாட்டுச் சட்டம், பன்னாட்டு நீதிமன்றம் தேவையில்லை. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாமே பொறுப்பெடுத்துள்ளோம். எமக்கு வேறு நபர்கள் தேவையில்லை. எமக்குத் தற்பொழுது தேவைப்படுவது நல்லிணக்கத்துக்கான பாதையைக் கண்டு



பிடிப்பதாகும். புதிய அரசியல் சாசனத்தில் பௌத்த மதத்துக்கான முக்கியத்துவம் குறையாது. சில அடிப்படைவாதிகள் செய்து வரும் போலிப் பரப்புரைகளில் எவ்வித உண்மையும் கிடையாது.

புதிய அரசியல் சாசனத்தில் அவ்வாறான எவ்வித பாதிப்புக்களும் ஏற்படப் போவதில்லை. தங்களது மத வழிபாடுகளை மேற்கொள்ள உதவுமாறு அனைத்துத் தரப்பினரும் கோருகின்றனர். இதனையே மகாநாயக்க தேரர்களும் கூறுகின்றனர். தற்போதைய அரச ஆட்சியில் நாட்டின் ஐக்கியத்துக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்றார். (த-5)

சிறைப் பேருந்து மீது தாக்குதல்;

# துப்பாக்கிதாரிகளுக்கு உதவியவர் காவலில்

களுத்துறை - எத்தனமடல பிரதேசத்தில் சிறைச்சாலை பேருந்து மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட பாதாள உலகக் குழுவினருக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட பாணந்துறை பிரதேசவாசியான துலாஜ் நிரோஷன் சில்வா என்ற சந்தேகநபரை 48 மணித்தியாலங்களுக்குத் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்யுமாறு களுத்துறை பிரதம நீதிவான் திருமதி பாரதி விஜேரத்ன அனுமதி வழங்கியுள்ளார்.

அத்துடன், இந்தச் சம்பவத்தில் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் பெண்ணொருவரை, இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தப் பெண்ணின் மகளொன்று சுகவீனமுற்றிருப்பதைக் கவனத்தில் கொண்டே அவருக்குப் பிணை வழங்கப்பட்டிருப்பதாக நீதிவான் தெரிவித்தார். (த-ஐ)

# அம்பாந்தோட்டைத் துறைமுக புதிய ஒப்பந்தம் நாளை வரும்

கொழும்பு, மார்ச் 21

அம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சீனாவுக்கு ஒப்படைப்பது தொடர்பான புதிய ஒப்பந்தம் நாளை அமைச்சரவையின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஒப்பந்தம் கடந்த வாரம் இடம்பெற்ற அரசின் பொருளாதார முகாமைத்துவக் குழுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், அங்கிருந்து அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அந்த வட்டாரங்கள் கூறின.

இந்தத் துறைமுகத்தைச் சைனா மேர்ச்சண்ட் நிறுவனத்துக்கு ஒப்படைப்பதற்காக, முதலில் தயாரிக்கப்பட்ட ஒப்பந்தத்தில் பல நிபந்தனைகள் மீளாய்வு செய்யப்பட்டுப் புதிய ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சொத்தொன்றை வெளிநாட்டு நிறுவனமொன்று பொறுப்பேற்க விரும்பினால், அந்த நிறுவனம் முதலில் இலங்கையில் வர்த்தக நிறுவனமாகப் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும் என்ற சர்ச்சை ஏற்கனவே எழுந்திருந்தது. அதன் பிரகாரம் சைனா மேர்ச்சண்ட் நிறுவனம் இப்போது இலங்கையில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. இந்தத் துறைமுகத்தின் முதலீடுகளில் 80 வீதத்தைசீனாநிறுவனமும் எஞ்சிய 20 வீதத்தை இலங்கை அரசும் பொறுப்பேற்கவுள்ளன எனவும் தெரியவருகிறது. (த-ஐ)

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட பெண் சாவு

கொழும்பு, மார்ச் 21

அவிசாவளை - ஜஹல்வத்த பகுதியில் இளம் பெண் ஒருவர் கூரிய ஆயுதமொன்றால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார். குறித்த சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் 25 வயதுடைய குறித்த பெண்ணின் காதலன் எனக் கூறப்படும் இளைஞர் ஒருவர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளார். (த-ஐ)

# மீனவரையா? சுமந்திரனையா? விமர்சிக்கிறார் சிவாஜிலிங்கம்

## வடக்கு மாகாணக் கடற்றொழில் இணையம் கேள்வி

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடபகுதிக் கடல் வளங்களைப் பெரிதும் பாதித்து வரும் இழுவை மடியைத் தடை செய்தல் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் கொண்டுவரப்பட்ட சட்டவரைவை வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் விமர்சித்திருந்தார். சிவாஜிலிங்கம் விமர்சிப்பது கடற்றொழிலாளர்களையா? அல்லது சுமந்திரனையா? என வடக்கு மாகாணக் கடற்தொழிலாளர் இணையத்தினர் கேள்வியெழுப்பியுள்ளனர்.

வடக்கு மாகாணக் கடற்றொழிலாளர் இணையமும், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும் இணைந்து வடபகுதி மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நேற்று யாழ். பாடி விருந்தினர் விடுதியில் நடத்தினர்.

இந்தச் சந்திப்பில் மன்னார் மாவட்டக் கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் ஆலம், கடற்றொழிலாளர் இணையத்தின் யாழ். மாவட்ட செயலாளர் ஏ.பி.சுப்பிரமணியம், கடற்றொழிலாளர் இணையத்தின் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர் யோசப் பிரான்சிஸ், கடற்றொழிலாளர் இணையத்தின் வடக்கு - கிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாஸ், இணையத்தின் யாழ்.மாவட்ட உறுப்பினர் என். இன்பன் ஆகியோர் பங்கேற்றனர்.

இதில் அவர்கள் தெரிவித்ததாவது:

இந்திய மீனவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். யார் இதைச் செய்தாலும் அதை நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம். இதை இலங்கைக் கடற்படை செய்தது என நாம் கூறமாட்டோம்.

**எல்லை மீறல் தொடர்கிறது**

இலங்கை மீனவர்களின் வலைகளை இந்திய மீனவர் தற்போது வரை எடுத்துச் சென்றே வருகின்றனர். இந்தச் சூட்டுச் சம்பவத்துக்குப் பிறகும் இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய மீனவர் எல்லை மீறி வருகின்றனர்.

கடந்த 12 ஆம் திகதி வவுனியாவில் பத்திரிக்கையாளர் சந்திப்பு இடம் பெற்றது. இதில் எமது பொதுச் சபையின் 50 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் இதில் கலந்து கொண்டார். இழுவை மடி தொடர்பில் கொண்டு வரப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் அதனைத் தடை செய்வது என்ற கருத்தை அவர் முன்வைத்திருந்தார்.

இந்தக் கருத்தை வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் கடுமையாக விமர்சித்திருந்தார். கடற்றொழிலாளர் சமூகத்தைப் பற்றி நன்கு தெரிந்த அவர், சில வாக்குகளைச் சம்பாதிக்கும் நோக்குடன் இந்தச் சட்டவரைவை எதிர்த்து வருகின்றார். இழுவை மடியால் நாம் பாதிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான மீனவர் குடும்பங்கள் நீர்க்கதியான நிலைமையில் உள்ளன.

**அமைச்சரை மாற்றவிடோம்**

கடற்றொழிலாளர் அமைச்சரை மாற்றும் செயற்பாடு தொடர்பில் அரச தலைவர் வெளிப்படையான கருத்தை முன்வைத்துள்ளார். ஆனால் அமைச்சர் மகிந்த அமரவீர வடக்கு மாகாண மீனவர்களின் துன்ப நிலைமையை நன்கு அறிந்தவர். இந்தியப் படகுகளை விடுவிப்பது தொடர்பிலும் வட பகுதி மீனவர்களின் சம்மதம் இன்றிச் செயற்பட மாட்டேன் எனக் கூறியிருந்தார். இன்று வரை உறுதிமொழியை மீறவில்லை. மாதாந்தம் கூட்டங்களை நடத்தி எமது பிரச்சினைகளை கேட்டு வருகின்றார். அப்படிப்பட்ட அமைச்சரை மாற்ற என்ன காரணம்? யாருடைய அழுத்தம் இருக்கின்றது? இந்தியாவின் தலையீடா? எனத் தெரியவில்லை. எனவே அமைச்சரை மாற்றும் நடவடிக்கையை நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம் .

இந்திய மீனவர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் தமிழ் நாடே கொந்தளிக்கின்றது. அவர்களுடைய அரசியல் தலைவர்கள், முதலமைச்சர் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இந்திய அரச தலைவருக்குக் கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. ஆனால் இந்தியத் தொழிலாளிகள் ஆயிரக்கணக்காக இங்கு வந்து எமது வளங்களை அழித்து வலைகளைச் சேதப்படுத்தியும் எமது மாகாண சபையினர் முதுகெலும்பில்லாதவர்கள் போன்று செயற்படுகின்றனர்.

இன்று வரை ஒரு கடிதம்கூட அரச தலைவருக்கு அனுப்பியதாக இல்லைஎன்றார். (த)



# ராணுவ முகாமாக இருந்த வவுனியா பாடசாலையில் குண்டுச் சிதறல்கள் மீட்பு

வவுனியா, மார்ச் 21

போர்க்காலத்தில் இராணுவ முகாமாகச் செயற்பட்டு வந்த வவுனியா பாடசாலை ஒன்றிலிருந்து நேற்று மாலை 3.30 மணியளவில் குண்டுச் சிதறல்கள் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா - தாண்டிக்குளம் பிறமண்டு பாடசாலையைப் போர்க் காலத்தில் இராணுவத்தினர் தமது முகாமாகப் பயன்படுத்தினர். போர் நிறைவுற்ற பின்னர் பாடசாலை நிர்வாகத்தினரிடம் அது ஒப்படைக்கப்பட்டது. தற்போது இந்தப் பாடசாலையில் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்போது நேற்றுக் காலை 9மணியளவில் பாடசாலையில் மதில் ஒன்றை அமைப்பதற்கு கிடங்கு வெட்டியபோது அதற்குள் வெடி குண்டுச் சிதறல்கள் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டன. இதையடுத்து பாடசாலை அதிபருடாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டதுடன், சிறப்பு அதிரடிப் படையினருக்கு தகவல் வழங்கினர். பாடசாலைக்குச் சென்ற சிறப்பு அதிரடிப் படையினர் அப் பகுதியில் மேலும் தோண்டினர். இதன்போது, மேலும் பல குண்டுச்சிதறல்கள் மீட்கப்பட்டன. எனினும் இதனால் ஆபத்துக்கள் எதுவும் இல்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-21)

# கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் நேற்று கைது

கொழும்பு,மார்ச் 21

இந்தியாவிலிருந்து எடுத்து வரப்பட்ட கேரளக் கஞ்சாவுடன் வான் ஒன்றில் பயணித்த ஒருவர், வனாத்தவில்லு பிரதேசத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

குறித்த வானிலிருந்து, 1.19 கிலோகிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாகவும், சந்தேகநபர் புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவிலிருந்து படகு மூலம் எடுத்துவரப்பட்டதாகக் கூறப்படும் குறித்த கேரளக் கஞ்சா, வனாத்தவில்லு கரதிவ் பிரதேசத்தில் வைத்து கைமாற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்ப விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன் சந்தேகநபர் புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-ஐ)

# 50 சதொச நிலையங்கள் ஒரே நாளில் திறக்கப்படும்

## அமைச்சர் ரிசாத் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

நாடு முழுவதிலும் ஒரே நாளில் 50 சதொச விற்பனை நிலையங்களை திறந்து வைக்கும் நிகழ்வு எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ளது எனக் கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

கூட்டுறவுத்துறைக்கான கொள்கையைத் தயாரிக்கும் வகையிலான இறுதிக்கட்ட மாநாடு நேற்று பண்டாரநாயக்கா பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வருட இறுதிக்குள் 500 சதொச விற்பனை நிலையங்கள் திறந்து வைக்கும் அரசின் இலக்கு நிறைவு பெற்ற பின்னர். சதொச கிளைகள் திறந்து வைக்கப்படுவதை நிறுத்தி அங்கீகரிக்கும் முகவர்கள் ஊடாக சதொசவுடன் இணைந்து நாடு முழுவதிலும் அத்தியாவசியப் பொருள்களை ஒரே விலையிலும் மற்றும் சாதாரண விலையிலும் நுகர்வோருக்கு வழங்க நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். சதொச நிறுவனத்தை இன்னும் 2 மாதங்களுக்குள் முழுமையாக கணினி மயப்படுத்தி வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களையும் நிர்வாகத்தையும் இலகுபடுத்துவதற்கான திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. நட்டத்தில் தொடர்ந்து இயங்கி வரும் கூட்டுறவுத்துறைக்கு புத்துயிரூட்டும் வகையிலேயே அதற்கான கொள்கையொன்றை உருவாக்கும் முயற்சிகள் தற்போது இறுதிக்கட்டத்துக்கு வந்தாலும் மாகாண அமைச்சர்கள், மாகாண ஆணையாளர்கள் ஆகியோரின் கருத்துக்களுடன் நாடு முழுவதிலுமுள்ள கூட்டுறவு அங்கத்தவர்களின் நன்மைகளையும் கருத்தில் கேட்டு ஒரு தீர்க்கமான கொள்கையொன்றை உருவாக்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. அந்த வகையில் இந்தக் கொள்கையை முழுமைப்படுத்தி முறையான வடிவமாகக் கொண்டு வருவதற்கு உங்களுக்கு கால அவகாசம் வழங்குவதோடு, தேவையேற்படின் இன்னுமொரு கலந்துரையாடலை மேற்கொண்டு இறுதி வடிவம் மேற்கொள்ளப்படும்.

கூட்டுறவுத்துறைக்கென ஒரு சிறந்த வரலாறு உண்டு. எனினும் கடந்த காலங்களில் இந்தத் துறையில் ஏற்பட்ட சீரழிவுகளினாலேயே சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் இதற்கான கொள்கையொன்று வகுக்கும் திட்டம் ஆரம்பமானது. நேர காலம், பண விரயம், மனித வளங்கள் பெருமளவில் செலவிடப்பட்டு மேற்கொண்ட இந்த முன்னெடுப்பை குப்பைத் தொட்டிக்குள் போடாது அதனை நிறைவு செய்வதற்காக 6 மாதங்களுக்கு முன்னர் நாம் எடுத்த முயற்சி இப்போது இறுதித் தறுவாய்க்கு வந்துள்ளது. பன்னாட்டு தொழிலாளர் ஒன்றியத்தின் அனுசரனையில் மேற்கொள்ளப்பட்டுவந்த புதிய கூட்டுறவுக்கொள்கை



உருவாக்கம் தொடர்பில் எவருக்கும் சந்தேகம் வர வேண்டிய அவசியமில்லை.

மாகாண கூட்டுறவு அதிகாரங்களைக் கொழும்பு அரசின் வசம் கையகப்படுத்தும் எந்த உள்நோக்கமும் எமக்குக் கிடையாது. கொழும்பு அரசும் மாகாண அரசும் ஒன்றிணைந்து இந்தத் துறைக்குப் புத்துயிர் ஊட்ட புதிய கொள்கை வழி வகுக்கும் என்றார். (த-21)

# போர்க் காலத்தில் சீனா வழங்கிய பங்களிப்புக்கு மைத்திரி பாராட்டு

## படைகளுக்குத் தொடர்ந்தும் பயிற்சியளிக்கவும் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 21
இலங்கைப் படையினருக்குத் தேவையான பயிற்சிகளைச் சீன அரசு தொடர்ந்தும் வழங்கவேண்டும் என்று அந்த நாட்டுப் பாதுகாப்பு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சீனப் பாதுகாப்பு அமைச்சரும் அரச ஆலோசகருமான ஜெனரல் சேன்ங் வான் குவாங், அரச

>> 24



# 14 பேரின் சாவுக்கு காரணமான விபத்தில் பேருந்து சாரதிக்கு 37 1/2 ஆண்டுகள் சிறை


## குருநாகல் மேல் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

குருநாகல், மார்ச் 21
பொறுப்பற்ற சாரத்தியத்தால் 14 பேரின் உயிரிழப்புக்கும் 19 பேர் படுகாயமடையவும் காரணமாக இருந்தார் என்ற குற்றச்சாட்டில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துச் சாரதிக்கு 450 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார் குருநாகல் மேல் நீதிமன்ற நீதிபதி மேனகா விஜயசுந்தர.
2003ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4ஆம் திகதி மடகல்ல குருநாகல் சாலையில் கும்புக்கெட்டே தியாவ சந்தியில் விபத்து இடம்பெற்றது. இலங்கை போக்குவரத்துக்குச் சபைக்குச் சொந்தமான பேருந்து பாதையைவிட்டு விலகி தடம்புரண்டது. சம்வத்தில் 14 பேர் உயிரிழந்தனர். 19 பேர் படுகாயமடைந்தனர்.
பேருந்துச் சாரதியான எச். எம். பிரேமரத்ன (வயது 48) என்பவருக்கு எதிராக குருநாகல் மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
வழக்கு விசாரணைகள் நிறைவடைந்து நேற்று குருநாகல் மேல் நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியது.
"14 பேரின் உயிரிழப்புக்கு காரணமாகினார் என்ற குற்றச்சாட்டுக்கு சாரதிக்கு 28 ஆண்டுகள் (உயிரிழப்பு ஒன்றுக்கு 2 ஆண்டுகள் என்ற அடிப்படையில்) சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. 19 பேர் படுகாயமடையக் காரணமாகவிருந்தார் என்ற குற்றச்சாட்டுக்கு சாரதிக்கு 9 ஆண்டுகளும் 6 மாதங்களும் (ஒருவருக்கு ஆறு மாதங்கள் என்ற அடிப்படையில்) சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது" என்று நீதிபதி தண்டனைத் தீர்ப்பை அறிவித்தார். (வ)

# சுகவீனமான பெண்ணுக்கு சிகிச்சையளிக்க அசமந்தம்

## நானாட்டான் வைத்தியசாலை மருத்துவர் மீது குற்றச்சாட்டு

மன்னார், மார்ச் 21
திடீர் மூச்சுத் திணறல் காரணமாகப் பெண் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும், அவருக்குச் சிகிச்சை வழங்காது மருத்துவர் அசமந்தமாக நடந்துகொண்டார். இதனால் குறித்த பெண் அங்கிருந்து மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் எனக் குறித்த பெண்ணின் உறவினர்கள் கவலை தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம், நேற்று மன்னார், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நானாட்டான் பிரதேச வைத்தியசாலையில் இடம்பெற்றது.
இது குறித்து உறவினர்கள் தெரிவித்ததாவது:
திடீர் சுகவீனம் காரணமாகப் பேச்சு,மூச்சற்ற நிலையில் குறித்த பெண்ணை நேற்றுத்திங்கட்கிழமை பிற்பகல் 1.35 மணியளவில் நானாட்டான் பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றோம். அங்கிருந்த தாதியர்களால் அவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். வைத்தியசாலையின் மருத்துவர் தனது விடுதிக்குச் சென்றிருந்தார். குறித்த மருத்துவர் சிறிது நேரத்தில் வந்து விடுவார் எனக் கடமையில் இருந்த தாதி கூறினார். மருத்துவர் வரவில்லை. தாதியர் நாடித்துடிப்பு அளக்கும் கருவியின் மூலம் நாடித் துடிப்பை அளந்தார். பின்னர் மருத்துவரின் அறைக்குச் சென்றார். வைத்தியர் உணவருந்துவதாகவும், உணவருந்தி முடிந்த பின்பே அவர் வந்து நோயாளியைப் பார்ப்பதாகவும் தாதி கூறினார். பிற்பகல் 2.10 மணியாகியும் மருத்துவர் வரவில்லை. இதனால் நோயாளியான பெண்ணை உடனடியாக நானாட்டான் பிரதேச வைத்தியசாலையில் இருந்து முச்சக்கர வண்டியில் ஏற்றி மன்னார் பொது வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றோம். தற்போது அவர் மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். நானாட்டான் பிரதேச வைத்தியசாலை வைத்தியரின் அசமந்தப் போக்கு வேதனை தருகின்றது. உயரதிகாரிகள் இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றனர்.
"நானாட்டான் பிரதேச வைத்தியசாலையில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளதாக நான் அறிகின்றேன். எனினும் பொது மக்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களினூடாக இது வரை எனக்கு எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கப் பெறவில்லை. முறைப்பாடுகளை மேற்கொண்டால் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். தற்போதைய பிரச்சினை குறித்து உரிய விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்வேன்" என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் திருமதி யூட் ரதனி தெரிவித்தார்.
(த-21-56)



கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் புதிய கட்டடத் தொகுதி வடக்கு மாகாண சபை உறுப்பினர் வி.சிவயோகனால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. பாடசாலை அதிபர் அ.பவானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. புஸ்பலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான கே. தர்மலிங்கம், எம். கே. சிவாஜிலிங்கம், எஸ். சுகிர்தன், எஸ்.அகிலதாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ-422)

# மகிழ்ச்சியான நாடுகள் வரிசையில் இலங்கை 120ஆவது இடத்தில்

நியூயோர்க், மார்ச் 21
ஐ.நாவால் அங்கீகரிக்கப்பட்ட உலக மகிழ்ச்சி தினம் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலும் வெளியிடப்பட்டது. இதில், இலங்கை இந்த வருடமும் 120ஆவது இடத்தை பிடித்தது.
இந்தியா 122ஆவது இடத்தையும் அமெரிக்கா 14 ஆவது இடத்தையும் பிடித்துள்ளன. கடந்த வருடம் நான்காவது இடத்தைப் பிடித்திருந்த நோர்வே இந்த வருடம் முதலாவது இடத்தை எட்டியுள்ளது. முதலாவது இடத்தில் இருந்த டென்மார்க் இரண்டாம் இடத்துக்குப் பின்தள்ளப்பட்டது.
உலக மகிழ்ச்சி தினத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போதே மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் முதலாம் இடத்தை நோர்வே பிடித்துக் கொண்டது. முறையே, ஐஸ்லாந்து, சுவிட்சர்லாந்து, பின்லாந்து, நெதர்லாந்து, கனடா, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் சுவீடன் ஆகியன 3 தொடக்கம் 10ஆம் இடங்களைப் பிடித்துள்ளன. (வ-5)

# நீதிமன்றையும் மீறியதாகவுள்ளது அரச அதிகாரிகளின் நடவடிக்கை

## கொக்கிளாய் மீனவர் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, மார்ச் 21
முல்லைத்தீவு, கொக்கிளாய் சென் அன்ரனீஸ் மீனவர் சங்கத் தொழிலாளர்களுக்கு வாடி அமைப்பதற்கு நீரியல் வளத்திணைக்களம் அனுமதி வழங்க மறுப்பதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வர

>> 24

### தீர்மானத்தை,,,

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து.
ஜெனீவா வளாகத்தில் நேற்று நடைபெற்ற நல்லிணக்க செயலணியின் அறிக்கை தொடர்பான சிறப்பு உபக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
இந்தச் சிறப்பு உப குழுக் கூட்டத்தில் நிமால்கா பெர்ணான்டோ உள்ளிட்ட மனித உரிமை செயற்பாட்டாளர்கள், தமிழ்த் தரப்பு பிரதிநிதிகள், புலம்பெயர் அமைப்பின் பிரதிநிதிகள், பன்னாட்டு மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவன மற்றும் சிவில் சமூக தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் கலந்தாலோசனை செயற்பாட்டில் ஈடுபட்ட ஜே.மஜித் உப குழு கூட்டத்தில் உரையாற்றுகையில்,
கலந்தாலோசனை அமர்வுகளை நடத்திய போது மக்கள் மத்தியில் நம்பிக்கையின்மை காணப்பட்டது. கசப்பான அனுபவங்கள் அவர்கள் மனதில் இருந்தன. கடந்த காலங்களில் ஆணைக்குழுக்களின் அறிக்கைகளுக்கு எதுவும் நடக்காமையே இதற்குக் காரணமாகும்.
முஸ்லிம் மக்களின் நிலைமையை எடுத்து பார்த்தால், அவர்கள் இந்தப் போரில் இணையாவிட்டாலும் முஸ்லிம்களுக்கான நீதி நிலைமாற்று கால நீதியில் வராது என்றதொரு கருத்து நிலவுவதை நாங்கள் பார்க்கக் கூடியதாக இருந்தது. இறுதியில் நாங்கள் அறிக்கையை கொண்டுவந்தோம். எவ்வாறெனினும் இந்த காலப்பகுதியில் சில தடைகளை நாங்கள் அவதானித்தோம்.
கலந்தாலோசனை செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போது நாடாளுமன்றத்தில் காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது இது மக்கள் மத்தியில் சிக்கலான நிலையை தோற்றுவித்தது. எமது அறிக்கை வெளிவந்ததும் மக்கள் அதில் திருப்தியடைந்தனர் என்றார்.
(வ-21)

### குமாரபுரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள் என.
இலங்கையின் மக்களின் சமத்துவம் மற்றும் பேர்ல் அமைப்பால் இந்த அறிவிக்கை தயாரிக்கப்பட்டு ஐ.நாவில் முன்வைக்கப்பட்டது.
காணமற்போனோர், தமிழர் படுகொலைகள் உள்ளிட்ட பெரியளவிலான மனித உரிமைச் சம்பவங்களைத் தொகுத்து அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளது. குமாரபுரம் படுகொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவத்தினர் தண்டனையிலிருந்து தப்பித்தமை குறித்து அந்த வழக்கு விசாரணையை விரிவாக எடுத்துரைத்து அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
(வ-5)



# வீடு புகுந்த கொள்ளைக் கும்பல் 3 பெண்கள் மீது வாள்வெட்டு

## *இணுவிலில் ஞாயிறன்று அதிகாலை சம்பவம்*

யாழ்ப்பாணம், மார்ச் 21

இணுவில் சிவகாமி அம்மன் கோவிலடியில் வீடு புகுந்து கொள்ளையிட முயற்சித்த கொள்ளையருக்கு பெறுமதியான பொருள்கள் எவையுமே கிடைக்கவில்லை. இதனால் வீட்டில் இருந்த 3 பெண்கள் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டுக் கொள்ளைக் கும்பல் தப்பித்தது என்று தெரிவிக்கப்பட்டது.

இணுவில் சிவகாமி அம்மன் கோவிலடியில் உள்ள ஆண் தாதிய உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டிலேயே இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வேளையில் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"தாதிய உத்தியோகத்தர் இரவுக் கடமைக்குச் சென்றுவிட்டார். அதிகாலை 2 மணியளவில் ஓட்டைப் பிரித்து வீட்டுக்குள் கொள்ளையர்கள் உள் நுழைந்தனர். வீட்டின் சகல அறைகளிலும் நகைகள் மற்றும் பணம் உள்ளனவா என்று அவர்கள் தேடினர். சமையலறையலிருந்த பாத்திரங்களையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. சங்கிலி ஒன்றும், மோதிரம் ஒன்றும், இரு அலைபேசிகளையும் அவர்கள் கொள்ளையிட்டனர்.

தாதிய உத்தியோகத்தரின் மாமியார் இரத்தினம் சாந்தினி (வயது-55) என்பவரை தட்டியெழுப்பி கழுத்தில் கத்தியை வைத்து அச்சுறுத்தி நகை, பணம் எங்கிருக்கின்றன என்று கொள்ளையர்கள் கேட்டனர். அவருக்கு அருகில் படுத்துறங்கிய அவரது மகள் கார்த்திகா எழுந்து கூக்குரலிடவே அவரின் தலையில் கத்தியால் பலமாக தாக்கினர் கொள்ளையர்கள். இருப்பினும் இவர்கள் வாய் திறக்காத காரணத்தால் இருவர் மீதும் பலமான தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு சத்தம் கேட்கும் நிலையில் மற்றொரு அறையில் இரு சிறுபிள்ளைகளுடன் ரூபா (வயது-35) என்பவர் தூக்கத்தி லிருந்தார். அவர் விழித்து தாயாரும் சகோதரியும் உறக்கத்தில் இருந்த அறையை நோக்கிச் சென்றவேளையில் அவரின் கழுத்திலும் வாளை வைத்து கொள்ளையர்கள் அச்சுறுத்தினர். நகை, பணம் அனைத்தையும் கொடுத்துவிட்டால் உயிர் பிழைப்பீர்கள் என்று கொள்ளையர்கள் அச்சுறுத்தினர். எம்மிடம் எந்த நகைகளும் இல்லை அனைத்தும் வங்கியில் அடைவு வைத்தே புதிய வீட்டைக் கட்டுகின்றோம் எம்மை ஒன்றும் செய்யாதீர்கள் என்று அவர்கள் கத்தியுள்ளனர்.

மூவர் மீதும் சுமார் அரை மணித்தியாலத்துக்கும் மேலாக கொள்ளையர்கள் பலமாகத் தாக்கியுள்ளனர். இதனால் அபயக் குரலெழுப்பவே அயலில் உள்ள வீடுகளில் மின் விளக்குகள் ஒளிரச் செய்யப்பட்டன. அதனையடுத்தே கொள்ளையர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இருப்பினும் வீட்டில் இருந்த மூன்று பெண்கள் மீதும் வாள் வெட்டு இடம்பெற்றது" என்று பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு வாள்வெட்டுக்கு இலக்காணவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியில் இருந்த கணவருக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு நடந்த சம்பவத்தைக் கூறியதனையடுத்து அவரே அயலில் உள்ளவர்களுக்கும் பொலிஸாருக்கும் தகவல் வழங்கியுள்ளார். இதனையடுத்து அயலில் உள்ளவர்கள் அவர்களை மீட்டனர். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் காயமடைந்த மூவரையும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-101)

# நெடுந்தீவுச் சிறுமி படுகொலை விசாரணை ஏப். 3இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

நெடுந்தீவில் 13 வயதுச் சிறுமியை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திக் கொலை செய்த வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 3ஆம் திகதிவரை ஒத்திவைத்தது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம்.

எதிரி நீதிமன்றில் நேற்று முற்பட்டார். எனவே அவருக்காக ஆள் பிணை முறியில் கையொப்பமிட்டவர்கள் தம்மை வழக்கிலிருந்து விடுவிக்கும்படி மன்றில் கோரிக்கை முன்வைத்தனர். அவர்களை வழக்கிலிருந்து விடுவிக்க மன்று அனுமதியளித்தது.

2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி யாழ்.தீவகம் நெடுந்தீவு 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜேசுதாசன் லக்சினி என்ற 13 வயதுச் சிறுமி பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார். சிறுமியைப் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் கந்தசாமி ஜெகதீஸ்வரன் (வயது -31) என்பவர் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் மேல் மன்றுக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. அரச சட்டத்தரணி நாகரட்ணம் நிஷாந் முன்னிலை யாகியிருந்தார். எதிரி சார்பில் மன்றினால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி முன்னிலையாகினார். எதிரிக்கு குற்றப்பத்திரிகை தமிழ்மொழியில் வாசித்துக்காட்டப்பட்டது. எதிரி தான் சுற்றவாளி என்று மன்றில் தெரிவித்தார்.

இதன்போது எதிரிக்கு ஆள் பிணை முறியில் கையொப்பமிட்டவர்கள் தம்மை வழக்கிலிருந்து விடுவிக்குமாறு கேட்டுக்கொண்டனர். அவர்களைப் பிணை முறிவில் இருந்து விடுவிக்க மன்று அனுமதி வழங்கியது.

"எதிரிக்கு 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் திகதி பல நிபந்தனைகளின் அடிப்படையில் பிணை வழங்கப்பட்டுள்ளது. அந்த நிபந்தனைகளுக்குள் நீதிமன்றின் மறுகட்டளை வரை தினமும் காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிக்கும் இடையே யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையத்தில் சமூகமளித்து ஒப்பமிடுதல் வேண்டும் என்ற நிபந்தனையும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதனடிப்படையில் குறித்த சந்தேகநபர் 2016ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ஆம் திகதியில் இருந்து மேற்கூறிய பிணை நிபந்தனையை பின்பற்றவில்லை என்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் 2016ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ஆம் திகதி மன்றுக்கு அறிவிக்கப்பட்டது. இதன்மூலம் எதிரி மேல் நீதிமன்ற கட்டளையை மீறியுள்ளார்.

எனவே எதிரிக்கு வழங்கப்பட்ட பிணை நீக்கப்படுகிறது" என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் கட்டளையிட்டார். வழக்கு தொடர் விசாரணைக்காக எதிர்வரும் 3ஆம் திகதி வரை மன்றினால் ஒத்திவைக்கப்பட்டது.

(வ-ரி)

**பண்ணை உதவியாளர்கள் தேவை**

கிளிநொச்சி வட்டகச்சியில் இயங்கும் பண்ணை ஒன்றிற்கு உதவியாளர்கள் தேவை. மேற்படி பண்ணைக்கு மாடு வளர்ப்பில் அனுபவமுள்ள 40 வயதிற்கு மேற்பட்ட ஆண் உதவியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. தங்குமிட வசதி சம்பளம் 22, 000 இற்கு மேல். தகுதிக்கேற்ப மேலதிக வேதனம் வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு - 076 918 6603

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

செல்வி. தாரணி சுடர்சன்




சென்ற ஆண்டு முன்பள்ளிகளுக்கான ஆங்கிலப்பாடல், நடனப்போட்டியில் குடும்ப மட்டம், வலையமட்டம், மாகாணத்திலும் முதலிடமும் மற்றும் தனியார் ஆங்கிலப் பரீட்சையிலும் சித்தி பெற்று 11.03.2017 அன்று கொழும்பில் விருதும் சான்றிதழும் கிடைத்ததற்கு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
தாத்தா - சி.சுந்தரலிங்கம்,
ஜெயபால் மாமா, அத்தை மேனகா,
காதேவ், காமேஸ்
நிகரை வீதி, சங்கானை.

Best Wishes

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

இன்று (21.03.2017) பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் விருது பெறும் எமது (Softlogic Life Insurance PLC - Jaffna Metro) கிளையின் சாதனை நாயகர்களான

| செல்வி ஸ்ருதிகா நாகராஜா | திரு சிவநேசன் சுகந்தன் |
|---|---|
| MDRT, Platinum Award | Silver Award |

ஆகியோரை பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்துடன் எமது நிறுவனத்தில் Senior Business Executive ஆக பதவி உயர்வு பெற்ற செல்வி. ஸ்ருதிகா நாகராஜா மற்றும் Business Executive ஆக பதவி உயர்வு பெற்ற திரு.ஜெயகீதன் அலெக்ஸ்சாந்தன் ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துபவர்கள்
Softlogic Life Insurance PLC
Jaffna Metro Staff's

**Professional Diploma in QUANTITY SURVEYING**



Apply now for New Intake 2017

**Entry Criteria:**
- NDT(Civil)
- NDES(Civil)
- HNDE(Civil)
- ARICS (non QS)
- ICIOB(non QS)
- ACIOB
- Ad. Dip(PM)NIBM, NCT, NDQS, ACTA QS (NVQ Level 5) (OUSL) Dip Civil with Relevant Working Experience/ Any other qualification equivalent to IVQ Level 5 and acceptable to the University

PD QS
PROFESSIONAL DIPLOMA IN QUANTITY SURVEYING

MSc QS or MSc Construction Project Management — RICS
BSc (Hons) Quantity Surveying — RICS

BIRMINGHAM CITY University

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

EQAA

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector
www.icbt.lk



## மாணவனின் கையில் கர்ப்பூரம் கொளுத்திய ஆசிரியைக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு.மார்ச் 21

மாணவனின் கையில் கர்ப்பூரம் கொளுத்திய ஆசிரியையை இடமாற்றக்கோரி றொப்கில் தோட்ட மக்கள் நேற்று ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட பொகவந்தலாவ றொப்கில் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 3 இல் கல்வி பயிலும் மாணவன் ஒருவரின் வலது கையில் வகுப்பு ஆசிரியை கர்ப்பூ ரத்தைக் கொளுத்திய சம்பவம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றதாகப் பொகவந்தலாவப் பொலிஸார் தெரிவித்தனர்.

வகுப்பறையில் மாணவி ஒருவரின் 20 ருபா பணம் காணாமல் போனாமை குறித்து, குறித்த ஆசிரியை ஆறு மாணவர்களை அழைத்து பணத்தை எடுத்தவர்கள் திருப்பி கொடுக்குமாறு கூறியுள்ளார். மாணவர்களுக்குப் பயம் காட்டுவதற்காக ஆசிரியர் கர்ப்பூரத்தைக் கொளுத்திய போது, பரமேஸ்வரன் பவித்திரன் என்ற மாணவனின் கையில் காயம் ஏற்பட்டது என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் குறித்த ஆசிரியையை அழைத்து விசாரணை செய்வதற்காக ஹற்றன் கல்வி வலயத்தில் இருந்து குழு ஒன்று றொப்கில் தமிழ் வித்தியாலயத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று ஹற்றன் வலயக்கல்விப் பணிமனையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

## தரமற்ற இறக்குமதிப் பொருள்களுக்கு தடை

கொழும்பு.மார்ச் 21

சீனா, இந்தியா, தாய்வான், சிங்கப்பூர் போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தரம் குறைந்த பொருள்களை இலங்கையில் விற்பனை செய்வதைத் தடை செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இலாபத்தை மட்டும் இலக்காகக் கொண்டு தயாரிக்கப்படும் இத்தகைய பொருள்களுக்கு எதிராக சட்ட வரைவு ஒன்றைக் கொண்டு வருவதற்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். அந்தச் சட்ட வரைவின் ஊடாக தரமற்ற இலத்திரனியல் பொருள்கள் முதல் வாகனங்கள் வரை சகல தயாரிப்புகளையும் இலங்கையில் விற்பதற்குத் தடை விதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தரமற்ற பொருள்களால் இலங்கை மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படக்கூடாது என்ற நோக்கத்திலேயே இந்தச் சட்டம் கொண்டுவரப்படவுள்ளதாகவும் தலைமை அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

## உதவிகளைப் பெறுமதியானவையாக பயனாளிகள் மாற்றவேண்டும்

### *சங்கானை பிரதேச செயலாளர் வலியுறுத்து*

சங்கானை, மார்ச் 21

வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தில் வழங்கப்படும் உபகரணங்களைப் பயனாளிகள் முழுமையாக முழுமனதோடு பயன்படுத்த வேண்டும்

இவ்வாறு வலி. மேற்கு பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் தெரிவித்தார்.

வாழ்வாதார உதவித் திட்டத்தில் தையல் இயந்திரம் மற்றும் குளிர்சாதனப்பெட்டி வழங்கும் நிகழ்வு சங்கானை வேள்ட்விசன் அபிவிருத்தி நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஜி.ஏ.அனுராஜ் தலைமையில் இடம்பெற்றது.

இதில் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வலி.மேற்கில் உள்ள 25 கிராம அலுவலர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட முன்னுரிமை பயனாளிகள் 29 பேருக்கு சங்கானை பிரதேச அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வேள்ட்விசன் நிறுவனத்தால் 26 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களும் 3 பயனாளிகளுக்கு குளிர்சாதனப் பெட்டிகளும் இன்று வழங்கப்படுகின்றன.

ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான மிகப் பயனுறுதி வாய்ந்த உபகரணங்களை சுய தொழிலை மேம்படுத்தும் பொருட்டுப் பெற்றுக் கொள்கின்றீர்கள்.

இந்தத் திட்டத்தை உங்கள் கைகளில் வழங்குவதற்காக திட்ட முகாமையாளர் அனுராஜ், திட்டவளவாளர்களான வென்சஸ், ஆதித்தன் ஆகியோர் அதிக நேரத்தைச் செலவழித்து, கருத்திட்டங்களை முன்வைத்து இன்று தையல் இயந்திரங்களாகவும் குளிர்சாதனப் பெட்டிகளாகவும் வழங்கியுள்ளனர்.

இந்தப் பயனுறுதி வாய்ந்த உபகரணங்களை சுயதொழிலுக்குப் பயன்படுத்தி வருமானம் உழைக்கும் உபகரணங்களாக மாற்றுங்கள் என்றார்.

நிகழ்வில் பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வலி.மேற்கு, பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் வலி.மேற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி சண்முகலிங்கம் ஆகியோர் இணைந்து உதவிப் பொருள்களை வழங்கினர். (வ-50)

## பிரச்சினைகளுக்குத் தீர்வில்லையெனில் கறுப்புக்கொடிப் போராட்டம் நடத்துவோம்

### தனியார் பேருந்து உரிமையாளர் சம்மேளனம் எச்சரிக்கை

"தனியார் பேருந்து உரிமையாளர்கள் முகம் கொடுத்து வரும் பல்வேறு பிரச்சினைகளுக்குப் போக்குவரத்து அமைச்சர் எதிர்வரும் சிங்கள, தமிழ் புது வருடப்பிறப்புக்கு முன்னர் தீர்வு வழங்கத் தவறினால், பேருந்துகளில் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டுப் போராட்டம்நடத்துவோம்" இவ்வாறு ஐக்கிய இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சம்மேளனம் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சம்மேளனத்தின் இணைத்தலைவர் ரூபன் சில்வா தெரிவித்ததாவது:

தனியார் பேருந்து உரிமையாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாட போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வாவுடன் சந்தர்ப்பமொன்றை வழங்குமாறு கேட்டுள்ளோம். புதுவருடத்துக்கு முன்பு அது நடைபெறாவிட்டால் கறுப்புக்கொடிப் போராட்டத்தை நடத்தவுள்ளோம். எமது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாட கடந்த ஒருவருட காலமாகப் போக்குவரத்து அமைச்சரிடம் சந்தர்ப்பமொன்றைக் கேட்டு வந்த போதிலும், இது வரை அது கிடைக்காத காரணத்தாலேயே இந்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் - என்றார். (ஐ)

**தேவை**

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு கணினி இயக்குனர், கணக்காளர் தேவை. (பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)

**தகைமைகள்:**

**கணக்காளர் (உதவியாளர்)**
- க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்.
- ஆங்கிலம் எழுத, பேச தெரிந்திருக்க வேண்டும்.
- வருமான வரி கணக்குகள் தொடர்பான அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
- முன் அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
- கணினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 21-30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**கணினி இயக்குனர்**
- க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்.
- MS Office நிறைவு செய்தவராக இருத்தல் வேண்டும்.
- MS Excel முன் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 21-30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிவரக்கோவை, அடையாளஅட்டை போட்டோபிரதி, சான்றிதழ்களின் போட்டோபிரதி ஆகியவற்றை இணைத்து 05.04.2017 இற்கு முன்னதாக கீழ் குறிப்பிட்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல- 5526
மே.பா- உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (AJA/2142) (22)

**அருள்மிகு கைதடி வீரகத்தி பிள்ளையார் கோயில் நித்திய குருக்கள் தேவை**

மேற்படி ஆலயத்துக்கு நித்திய கடமை செய்யக் குருக்கள் தேவை. வேதனம் அபிஷேகங்களுக்கான விசேட படிகள் அர்ச்சனைப் பங்கு உள்ளிட்ட அதிகூடிய வருமானம் மாதாந்தம் பெறக்கூடிய ஆலயம். கடமை செய்ய விரும்பும் குருமார் முன்னர் கடமை செய்த ஆலயங்களினையும் குறிப்பிட்டு பிரபல்யமான குருமாருடைய சிபாரிசுடன் **தலைவர் / செயலாளர், கைதடி வீரகத்தி பிள்ளையார் கோயில், கைதடி.** என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் 27.03.2017 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

தொடர்புகளுக்கு : 077 408 0512
மாலை 6.00 - இரவு 9.00 வரை

ந.ஜெயகாந்தன்,
கௌரவ செயலாளர்.

**2017 இற்கான புதிய வேலை வாய்ப்புக்கள்**

மலரும் புதுவருடத்தை உங்களுக்கான நிரந்தர வேலையுடன் ஆரம்பிக்க Granton Company யுடன் இணையுங்கள். விடாமுயற்சியும், கடின உழைப்பும் கொண்டவர்கள் பின்வரும் பதவிகளுக்கு உங்கள் விண்ணப்பங்களைப் பதிவு செய்யலாம்.

- **விற்பனை விநியோகஸ்தர்**
- **மேற்பார்வையாளர்**
- **உதவி முகாமையாளர்**
- **முகாமையாளர்**

தகைமை (O/L , A/L வயது 18 - 30) பயிற்சியின்போது 18.000 /= வரை. பயிற்சியின் பின் 50.000/= + EPF, ETF உடன் உணவு தங்குமிட வசதி. Insurance, Foreign tours.

076 989 5016, 077 999 4807

## தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் எதிர்வரும் 29இல் ஆரம்பம்

நாடெங்கும் டெங்கு நோய் தீவிரமாகி வருவதால் எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் ஒரு வாரத்துக்கு தேசிய மட்டத்தில் டெங்கு ஒழிப்புப் பணிகள் முன்னெடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

பொலிஸார், முப்படைகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இணைந்து முன்னெடுக்கவுள்ள இந்த நடவடிக்கையின் போது அரச, கூட்டுத்தாபன, தனியார் நிறுவனக் கட்டடங்கள், பாடசாலைகள், வீடுகள், தொழிற்சா லைகள் உட்பட சகல இடங்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, சுத்திகரிப்புப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

அத்துடன், டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு வாய்ப்பான இடங்களை வைத்திருப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படும். டெங்கு ஒழிப்புக்காக அண்மையில் நியமனம் பெற்றுப் பயிற்றுவிக்கப்பட்ட 500 பேர் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்படுவர் எனவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

**தெய்வத்தின் திருப்பாதத்தில்!**

**ஆசீர்வாத பெருவிழா!**

அனுமதி இலவசம்

**இயேசு ஜீவிக்கிறார் பணியின் 39 ஆவது சுவிசேஷ மாநாடு**

அன்புடையீர்,

அண்டசராசரத்தை ஆளுகை செய்யும் கடவுள் ஒருவர் இருக்கிறார். அவருடைய வல்லமையை அளவிட முடியாது, அவரே தொடக்கமும் முடிவுமானவர். ஜீவியத்தில் நோய், துன்பம், கண்ணீர், சஞ்சலம், தோஷங்களிலிருந்தும், விடமுடியாத பழக்கவழக்கம், பாவ வாழ்க்கை, பொல்லாத ஆவிகளின் கட்டுகள், செய்வினை, மாந்திரீகம், பில்லிசூனியத்திலிருந்தும் விடுதலை பெற இதோ ஓர் அரிய சந்தர்ப்பம் உங்களை நோக்கி வருகிறது. இச் சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள். இன்றே அற்புதத்தின் நாள் இன்றே இரட்சண்ணியத்தின் நாள், இன்றே அநுக்கிரகத்தின் நாள், உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**2017 மார்ச் 24, 25, 26**
**மாலை 5.00 மணி**

தெய்வீக சுகத்தையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள வாருங்கள்!

**இடம்: மாநகரசபை மைதானம் வவுனியா**

செய்தி : கலாநிதி M.R.இராஜேந்திரம் மற்றும் C.V. இராஜேந்திரம்

39 ஆவது அகில இலங்கை வேதாகம கருத்தரங்கு

**மார்ச் மாதம் 19 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிவரை தினமும் காலை 8.30 முதல் 3.00 மணிவரை**

**இடம்: இல.18, டேங்க் ஒழுங்கை, இரம்பைக்குளம், வவுனியா.**

மேலதிக தொடர்புகளுக்கு: இயேசு ஜீவிக்கிறார் ஆலயம் 401, அளுத்மாவத்தை வீதி கொழும்பு - 15. தொ.இ.011 252 2608

**பணிப்பெண் தேவை**

மல்லாகத்தில் வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

*உரிமையாளரை மிரட்டிவிட்டு*

## புகைப்பொருள்களை பறித்துச் சென்றவர் விளக்கமறியலில்

தென்மராட்சி மார்ச். 21

வியாபார நிலையத்துக்குள் புகுந்து வணிகரை அச்சுறுத்தி அங்கிருந்து சிகரட் மற்றும் பீடி ஆகியவற்றை எடுத்துச் சென்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

வணிகர் செய்த முறைப்பாட்டையடுத்து சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்தனர்.

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள வியாபார நிலையம் ஒன்றுக்குள் நேற்று முன்தினம் புகுந்த சந்தேகநபர், உரிமையாளரை மிரட்டிவிட்டு 2 ஆயிரம் ரூபா பெறுமதியான சிகரட் மற்றும் பீடிகளை எடுத்துச் சென்றார் என்று பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான், சந்தேகநபரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(வ-9)

## குடித்துவிட்டு அடாவடியில் ஈடுபட்டவருக்கு 100 மணிநேர சமூகப் பணி செய்ய உத்தரவு

ஊர்காவற்றுறை, மார்ச் 21

நெடுந்தீவுப் பிரதேசத்தில் மது போதையில் குழப்பம் ஏற்படுத்தி அநாகரிகமாகச் செயற்பட்ட குற்றத்துக்காக ஒருவரை 100 மணித்தியாலம் சமூகப் பணியில் ஈடுபடுமாறு ஊர்காவற்றுறை நீதிவான் உத்தரவிட்டார்.

ஊர்காவற்துறை நீதிமன்றில் நீதிவான் ஏ.எம். எம். றியால் முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. குற்றச்சாட்டை சந்தேகநபர் ஒப்புக்கொண்டார்.

அவருக்கு ஒருவருட கால கடூழியச் சிறைதண்டனை விதித்து நீதிவான் கட்டளையிட்டார்.

அவரது குடும்ப நிலமையைக் கருத்திற் கொண்டு தண்டனையை ஒத்திவைத்த சிறை தண்டனையாக மாற்றுமாறு குற்றவாளி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

அதனைப் பரிசீலித்த நீதிவான் , குற்றவாளி ஒரு வருட காலத்துக்குள் 100 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபட வேண்டும் என்று உத்தரவிட்டார். அவரை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு ஆள்ப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது.

(வ-37)

## திருமலை வளாகத்தில் நேற்றுக் குழப்பம்

கிழக்கு பல்கலைக்கழக திருகோண மலை வளாகத்தில் நேற்றுக் காலையில் வகுப்பறை அடித்து சேதமாக்கப்பட்டது. இதனால் அங்கு பதற்றநிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு பல்கலைக்கழக திருகோண மலை வளாகத்தில் குழப்பம் விளைவித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் அண்மையில் சில மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டது. அவர்களை பரீட்சைக்கு அனுமதிக்குமாறு தெரிவித்தே இந்த குழப்பநிலை ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-21)

## தென் சூடான் வானூர்தி விபத்தில் 44 பேர் சாவு?

ஜூபா, மார்ச் 21

தென் சூடானில் சுப்ரீம் எயர்லைனர் வானூர்தி விபத்துக்குள்ளாகியது. இதில் பயணம் செய்த 44 பேர் உயிரிழந்திருக்க லாம் என அஞ்சப்படுகிறது. விமானம் ஓடுபாதையில் தரையிறங்கும் போது திடீரென தீப்பிடித்தது. இதனை தொடர்ந்து அங்கு மீட்புப் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது

ஜூபா நகரிலிருந்து, வானூர்தி நிலையத்துக்கு வந்த வானூர்தியிலேயே இவ்வாறு தீப்பற்றியது. வானூர்தியின் வால்பகுதி மட்டும் தெரியும்படியும், மற்ற பகுதிகள் எரிந்த நிலையில் சிதறிக்கிடக்கும் படங்களை அந்நாட்டு தொலைக்காட்சிகள் வெளியிட்டுள்ள தோடு, அதில் பயணித்த 44 பயணிகளும் உயிரிழந்திருக்கலாமென சந்தேகம் வெளியிட்டுள்ளது.

(வ-21)


## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



பிறப்பு 09 . 03 . 1997

இறப்பு 05 . 02 . 2017

## நடராஜா தர்ஷினி

(மாணவி - திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி)

காரைநகரைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நடராஜா (முன்னாள் முகாமையாளர் - மக்கள் வங்கி திருகோணமலை) - திருமதி நாகேஸ்வரி நடராஜா (மருத்துவப் பொறுப்பதிகாரி - ஆயுர்வேத வைத்தியசாலை, உப்புவெளி) தம்பதியரின் பாசமிகு மகளும், கணேசனின் அன்புச் சகோதரியுமான தர்ஷினி 05.02.2017 ஞாயிற்றுக்கிழமை அன்று அகால மரணமடைந்தார்.

எமது அன்பு மகளின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்துகொண்டும், தொலைபேசி மூலமும், மலர்வளையம், கண்ணீர் அஞ்சலி துண்டுப் பிரசுரம் மூலமும் அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் சகல உதவி புரிந்தவர்களுக்கும், ஆறுதல் கூறியவர்களுக்கும், ஆறுதல் கூறிக்கொண்டு இருப்பவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

156/33, டொக்கியாட் வீதி,
திருகோணமலை.

(AJA CS 2189) (13

சு.நடராஜா
(தந்தை)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 19.03.1952

இறப்பு 02.04.2016

அமரர்
சிவபாதசுந்தரம் இராஜேஸ்வரன்

அன்பின் திருவுருவே நினைவு அழியா மாணிக்கமே!
தந்தையாய் இருந்து எமக்குத் தகுதியாய் தலைமை தாங்கி
சுந்தர வாழ்வில் எம்மை சுடர்விடும் வழியும் காட்டி
அகரமாய் எம்மை வழிநடத்தி சிகரமாய்த்திகழ்ந்து நீங்கள்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தது போதும் என்றோ வாஞ்சையுடன்
அம்பாள் உம்மை தன்னடியில் அழைத்து
ஆண்டு ஒன்று ஆனதுவோ!
ஆயிரம் ஆண்டுகள் பாரினில் சென்றாலும்
அழிந்திடுமோ எம் சிந்தையில் அன்பான உங்கள்நினைவு

279/1, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் அழியா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் பண்டாரி வேலாயுதம்

(மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி, வேரற் கேணியடி)

அன்னை மடியில் 31.03.1923

அம்மன் மடியில் 12.04.2004

திதி : 21.03.2017

தலை நிமிர்ந்து வாழ வைத்த தந்தையே!
இந்த நாளில் தலை சாய்த்து வணங்குகிறோம்
ஆண்டுகள் பதின்மூன்று ஆகிவிட்டதே அப்பா!
ஆனாலும் நீங்காத நினைவுகளை இதயத்தில் சுமந்து
நீர் ததும்பும் விழிகளுடன் நினைவு கூருகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(ஏ.ஜே.ஏ. 2082) (13.18)

## நினைவஞ்சலி

31ஆம் நாள் நினைவஞ்சலியும்
ஆத்ம சாந்தி பிரார்த்தனை அழைப்பும்

4ஆம் ஆண்டு
நினைவஞ்சலி





குமாரு விமலநாதன்
(தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவு சங்கம்)
பிறப்பு 08.06.1962
இறப்பு 19.02.2017

சின்னத்துரை குமாரு
(ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)
பிறப்பு 24.01.1929
இறப்பு 17.05.2013

கடந்த 19.02.2017 சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் குமாரு விமலநாதன் அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (21.03.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு : அன்னார் நோயுற்று இருந்தகாலம் தொடக்கம் உறுதுணையாக நிற்கவேண்டியவர்களால் கைவிடப்பட்டபோது இறுதிவரை எம்மோடு நின்று பலவழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் நன்றிகள்.

கந்தரோடை,
சுன்னாகம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
தாய், சகோதரர்கள்.

## மரணஅறிவித்தல்கள்

### வெலிச்சோர்ப்பிள்ளை வில்லியம்

(இளைப்பாறிய அதிபர்
(St. Marv's O.L.R)



யாழ். நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கனடா winnipeg ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட வெலிச்சோர்ப்பிள்ளை வில்லியம் 16.03.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றோசலின் அருமைநாதர் (VC-chairman), அந்தோனிப்பிள்ளை, இராசேந்திரம் மற்றும் அல்பிறட் (நாட்டுக் கூத்து கலாநிதி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் திருப்பலி கனடாவில் christ the parish இல் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

55, Barrington Ave, Winnipeg, MB R2M 2A4, Canada.

தகவல்:
திரு.திருமதி.அல்பிறட்
076 617 0874

### சிவப்பிரகாசம் சுந்தரலிங்கம்

(ஓய்வுபெற்ற நீதிமன்ற பதிவாளர், சமாதானநீதிவான்)



தும்பளை, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் சுந்தரலிங்கம் நேற்று (20.03.2017) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், யோகராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தில்லைநாதன் - வேலாசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், விஜயாவின் (ஆசிரியை, யா/கற்கோவளம் மெ. மி. த. க.பாடசாலை) அன்புத் தந்தையும், ஜெயசீலனின் (பொறியியலாளர்) அன்பு மாமனாரும், விதுசன், விதுசா, விதுசனா ஆகியோரின் அன்புப் பேரனும், இராசநாயகம் (சுவீடன்), காலஞ்சென்றவர்களான இராஜேந்திரம், இராஜகுலசிங்கம், சீவரத்தினம், சாரதாதேவி, விஜயலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2017) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோந்திரம்பற்றை,
தும்பளை, பருத்தித்துறை.

தகவல்
குடும்பத்தினர்.

(AJA/N/290)(11.17)
021 205 6033

# சீரமைப்புப் பணிக்காக சாலைக்குத் தடை போட்ட அதிகாரி மீது கற்கள் வீச்சு

தென்மராட்சி, மார்ச் 21
சாலைச் சீரமைப்பு வேலைகள் நடைபெற்ற வேளையில் வாகனங்களைப் போகவிடாமல் தடுத்த அதிகாரி மீது கற்களால் வீசி கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது..

இந்தச் சம்பவம் மீசாலை வடக்கு வேம்பிராயில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வேம்பிராய் பகுதியிலுள்ள சாலையின் சீரமைப்புப் பணிகள் இடம்பெறுகின்றன. இதனால் சாலையின் குறுக்கே கயிறு கட்டப்பட்டு மாற்றுவழியைப் பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டது. அந்தச் சாலை ஊடாக மோட்டார் சைக்கிளில் வந்த கும்பல் கயிற்றை அப்புறப்படுத்தி உட்செல்ல முற்பட்டது. அங்கு நின்ற அதிகாரி கும்பலின் முயற்சியைத் தடுத்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த கும்பல் அவர் மீது கற்களால் வீசி தாக்குதல் நடத்தியது. கல் முகத்தில் தாக்கி அதிகாரி படுகாயமடைந்தார். அவர் சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (வ -9)

## செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், மார்ச் 21
திக்கம் மத்திய சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் திக்கம் பாலர் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

தலைவர் க.திருவரங்கன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானமும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தில்லைநாதனும், கௌரவ விருந்தினர்ாக ஆசிரியர் ப.சுரேந்திரன் , பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணியின் பொருளாளர் இ.தனேந்திரராஜா ஆகியோர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## மாணவர்கள் அறிமுக நிகழ்வுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21
யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தால் நடத்தப்படும் வணிகமாணி (அரையாண்டு) 2013 /2014 (வெளிவாரி) கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்பட்டு பதிவு செய்தவர்களுக்கான அறிமுக நிகழ்வு முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்திலுள்ள முகாமைத்துவ மண்டபம் 'II இல் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பதிவு செய்யப்பட்டவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் தபாலில் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் பா.நிமல தாசன் கேட்டுள்ளார். (வ)

## வவுனியா விபத்தில் சாரதி பரிதாபச் சாவு



வவுனியா, மார்ச் 21
அரிசி மூடைகளை ஏற்றி வவுனியா நோக்கி வந்த படி வானம் ஒன்று மரத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளானது. அதன் சாரதி சம்பவ இடத்திலேயே சாவடைந்தார் என்று மதவாச்சிப் >> 22

## கள் வைத்திருந்த மூவருக்குத் தண்டம்

ஊர்காவற்றுறை, மார்ச் 21
ஊர்காவற்றுறைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் உடைமையில் கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 3 பேருக்கு தலா ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்து ஊர்காவற்றுறை நீதிவான் மன்றம் உத்தரவிட்டது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஏ. எம். எம். றியால் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மதுவரி திணைக்களத்தால் மன்றில் முற்படுத்தப்பட்ட 3 பேரும் தமது குற்றத்தை ஏற்றுகொண்டனர். அவர்கள் மூவருக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்து நீதிவான் கட்டளையிட்டார். (வ-37)

## வண்ணை வைத்தீஸ்வரன் கொடியேற்றம் நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 21
வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய பெருந்திருவிழா நாளை புதன்கிழமை மு.ப.10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 19 தினங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

திருவிழாவின் 18ஆம் நாளான எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 5 மணிக்கு நடேசர் முழுக்கும் மு.ப.10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.


சிறப்புத்திருவிழாக்கள் தவிர்ந்த ஏனைய திருவிழா நாள்களில் தினமும் வசந்த மண்டப வழிபாடு காலை 9 மணிக்கும் மாலை 6 மணிக்கும் நடைபெறும் என்று ஆலய தர்மகர்த்தா அறிவித்தார். (வ)

## சாயி பக்தர்களின் அனுபவப் பகிர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 21
சத்தியசாயி சேவா நிறுவனத்தின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு சாயி பக்தர்களின் அனுபவப்பகிர்வுத் தொடர், சாயி சமர்ப்பணம் தொடர் 2 இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5மணி தொடக்கம் 6 மணிவரை யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு முன்னாள் இலங்கை சத்திய சாயி பன்னாட்டு நிறுவனத்தின் வடபிராந்தியத் தலைவரும், சாயி மார்க்கம் சஞ்சிகையின் முதன்மை ஆசிரியரும், யாழ்ப்பாண சாயி நிலைய முன்னாள் தலைவரும் யாழ். போதனா வைத்தியசாலை ஓய்வுநிலை மயக்க மருந்தியல் நிபுணருமான மருத்துவர் இ.கணேசமூர்த்தியின் சாயியுடனான அனுபவப் பகிர்வு இடம்பெறும் என்று சத்தியசாயி சேவா நிலையத்தினர் தெரிவித்தனர். (வ)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
12 . 02 . 1950

உதிர்வு
16 . 03 . 2012

அமரர்
### சுப்பிரமணியம் விக்கினேஸ்வரன்

திதி: அபரபக்கநவமி

கைபிடித்தநாள் முதலாய் என்னைக்
கண்கலங்காமல் பாதுகாத்தீர் நீவிர்
உற்றார் போற்றும் வண்ணம் உவகையுடன் வாழ்ந்திட்டோம்

அப்பா என்று நாம் அழைத்தபோதெல்லாம்
சிரித்தமுகத்துடனே அன்புக் கரம் நீட்டினீர்
பாரினிலே நாம் சிறப்புடன் வாழ வழி காட்டி
பறந்து தான் சென்றீரோ தவிக்கின்றோம் நாம் இங்கு

மாமா என்று நாம் மகிழ்ந்தபோதெல்லாம்
மலர்ச்சியுடன் இன்முகம் காட்டினீர்
மருமக்கள் என்றுவாய் நிறைய அழைத்து
எம்மை மெய்சிலிர்க்கவைத்தீர் அழுகின்றோம் நாம் இங்கு

தாத்தா என்று கூப்பிட்டபோதெல்லாம்
திரும்ப திரும்ப கூப்பிடச் செய்து மகிழ்ந்தீரே
தேற்றுவாரின்றி தேம்பித் தேம்பி அழுகின்றோம்
ஓடிவராயோ தாத்தா எம்மைப் பார்ப்பதற்கு

ஆண்டுகள் ஐந்துசென்றபோதும்
ஆறவில்லை ஐயா எம் துயரம்
உங்களது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(ஏ.சி.எச். கி.எல்)
84) (13.17)

குடும்பத்தினர்.

## ஆறாத்துயரில் ஓராண்டு நினைவுகள்...



மண்ணில்
14 . 01 . 1933

விண்ணில்
01 . 04 . 2016

கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் திருமதி நாகமுத்து அருளையா

திதி: நவமி

நெஞ்சம் கனக்கிறது விழிகள் சொரிகிறது சொல்ல வார்த்தைகளே இல்லை அம்மா
தாங்க முடியாத சோகத்தை எமக்களித்து எமைவிட்டு எங்கு சென்றுவிட்டீர்கள்?

ஆலமரமாய் நீங்கள் அரவணைத்தீர்கள் விழுதுகளாய் நாம் இருந்தோம் அம்மா
காலமது செய்த கொடுமையிது தனித்துவிட்டோம் நாம் இங்கே

ஆயிரம் உறவுகள் இருந்தென்ன இங்கே உங்கள் அன்புக்கு யாரம்மா ஈடாகுவர்
நிரப்ப முடியாத வெற்றிடத்தை உருவாக்கி எம்மை நிலைதடுமாற வைத்தீர்களே அம்மா

அடுத்த பிறவியிலும் உங்களுக்கே நாங்கள் பிள்ளைகளாகப் பிறக்க வேண்டும்
தெய்வமாகிவிட்ட நீங்கள் எங்களுக்கு என்றென்றும் வழிகாட்ட வேண்டும் அம்மா

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி! சாந்தி

கைதடி கிழக்கு, கைதடி.

(AJA/CS/2486)(11,17)

பாசமிகு குடும்பத்தினர்.



# கவனிப்பாரற்று முள்ளிவாய்க்கால் நினைவாலயம்

## பொதுமக்கள் கவலை

முல்லைத்தீவு, மார்ச் 21
முள்ளிவாய்க்கால் நினைவாலயம் கவனிப்பாரற்று உள்ளது. நினைவு நாளில் மட்டும் அதை வணக்கத்துக்குரிய இடமாகக் கருதாது இனப் படுகொலை நடைபெற்றது என்பதை வெளிப்படுத்தும் இடமாக அதை மாற்ற வேண்டும்.
இவ்வாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.
"இறுதிப் போரில் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்கள் முள்ளிவாய்க்காலில் புதைக்கப்பட்டனர். போராட்ட காலத்தில் உயிரிழந்த அனைத்துஉறவுகளையும்நினைவு கூரும் வகையில் முள்ளிவாய்க்காலில் நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. மே 18ஆம் திகதி அங்கு சென்று மக்கள் உறவுகளை அஞ்சலிக்கின்றனர்.
அன்றையதினம்மட்டுமேவணக்கத்துக்குரியஇடமாகஅதுவணங்கப்படுகின்றது. அதன்பின்னர்கவனிப்பாரற்று பராமரிப்பற்றுக் காணப்படுகின்றது.
நேற்றுமுன்தினம் கனடாவின், ரொறோன்ரோநகரமுதல்வர், உறுப்பினர்கள், ஈழத்தமிழரானநவநீதன் சண்முகராஜா ஆகியோர் முள்ளிவாய்க்கால் நினைவாலயத்துக்குச் சென்று அஞ்சலித்தனர். அவர்கள் வருவதற்குச் சில மணி நேரம் முன்னதாகவே முல்லைத்தீவு மாவட்ட வடக்குமாகாணசபைஉறுப்பினர்களால் அவசர அவசரமாக நினைவாலயம் துப்புரவு செய்யப்பட்டது.
இந்த நிலமை மாற வேண்டும். முள்ளிவாய்க்கால் நினைவாலயம் அமைந்துள்ள பகுதியில் மண்டபம் அமைக்கப்பட்டு உயிரிழந்த பொதுமக்களின்பெயர்கள்அதில்பொறிக்கப்படவேண்டும். அப்போதுதான்இங்கு இனப்படுகொலைநடந்ததுஎன்பதை இங்கு வருபவர்கள் புரிந்து கொள்வார்கள்" என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.
அதேவேளை, முள்ளிவாய்க்கால் நினைவாலயம் அமைப்பதற்கு வடக்குமாகாணசபைகுழு ஒன்றை 2015ஆம் ஆண்டளவில் அமைத்தது. (ற-7)

## களஞ்சியசாலை உடைத்து பணம், காசோலை திருட்டு

வவுனியா, மார்ச் 21
வவுனியா, குட்செட் வீதியிலுள்ள தனியார் வர்த்தக நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான களஞ்சியசாலை உடைக்கப்பட்டு பணம், காசோலைகள்திருடப்பட்டுள்ளன என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
கடந்த சனிக்கிழமை இரவு 8.30 மணியளவில் களஞ்சியசாலையைமூடிவிட்டு பணியாளர்கள் சென்றுள்ளனர். ஞாயிற்றுக்கிழமை விடுமுறையாதலால் யாரும் வரவில்லை. நேற்றுக் காலை7.30மணிக்குகளஞ்சியசாலையைத் திறக்கச் சென்றஊழியர்அதுஉடைக்கப்பட்டிருப்பதைஅவதானித்தார். அதன்பின்னர் எமக்கு அறிவித்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
களஞ்சியசாலையில் தேயிலைமற்றும்பால்மைக் கற்றுக்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. களஞ்சியசாலையில் இருந்து பணமும், காசோலைகளுமே திருடப்பட்டுள்ளன என்று முறையிடப்பட்டுள்ளதுஎன்றும்பொலிஸார் தெரிவித்தனர். (ற-5)



## இனந்தெரியாதோரால் மோ. சைக்கிள் எரிப்பு

வவுனியா, மார்ச் 21
ஓமந்தை, விளக்குவைத்தகுளத்தில் உள்ள வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் இனந்தெரியாதவர்களால் தீயிட்டு எரிக்கப்பட்டது. இந்தச் சம்வம் நேற்று அதிகாலை 3 மணியளவில் நடந்துள்ளது.
வீட்டு உரிமையாளர்கள் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தபோது வீட்டு வளவுக்குள் நுழைந்தஇனந்தெரியாதநபர்கள்மோட்டார் சைக்கிளுக்குத்தீயிட்டுவிட்டுச்தப்பிச்சென்றுள்ளனர். மோட்டார்சைக்கிள் பெற்றோல் தாங்கிவெடித்துஎரிந்தசத்தம் கேட்டுஎழுந்த வீட்டிலிருந்தவர்கள்தீயைக்கட்டுப்படுத்த முயன்றபோதும்அது பயனளிக்கவில்லை.
இது தொடர்பாகஓமந்தைப்பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அவர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ற-9)

## புற்றுநோய் விழிப்புணர்வு 19

வாய்ப்புற்றுநோய் தவிர்த்து வளமாக வாழ்வோம்!!
வாய்ப்புற்றுநோய் வரக்கூடிய ஆபத்துள்ளோர்;
தினமும்வெற்றிலைமெல்லுவோர்.
புகைப் பிடிப்போர்.
புகையிலை, மற்றும் பாக்கு சப்புவோர்.

## பொலிஸாரின் சோதனையில் சிக்கியது கசிப்பு

கிளிநொச்சி, மார்ச் 21
கிளிநொச்சி, இராமநாதபுரம் பொலிஸ் பிரிவில்பொலிஸார்மேற்கொண்டதிடீர்ச்சோதனையில் 9 ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது. மூன்று சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர் என்று இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி சுபேசன் தெரிவித்தார்.
நேற்றுமுன்தினம் இராமநாதபுரம் கல்மடு நகரில் மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில்வீடொன்றுசோதனையிடப்பட்டது. அங்கிருந்து 7 ஆயிரத்து 750 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது. சந்தேநகர்ஒருவர்கைது செய்யப்பட்டார்.
அழகாபுரிக்கிராமத்தில்பொலிஸ்குழுவினர் மேற்கொண்டதிடீர்சோதனையில்இருவீடுகளில் ஆயிரம் மற்றும் 750 மில்லிலீற்றர் கசிப்புகைப்பற்றப்பட்டது. இருசந்தேகநபர்கள்கைது செய்யப்பட்டனர்.
கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-6)

## நுண் கடன் நெருக்குதலால் இளம்தாய் தவறான முடிவு!

### அயலவர்களால் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் சேர்ப்பு

வவுனியா, மார்ச் 21
நுண்கடனைமீளச்செலுத்தமுடியாதநிலையில் தாயும், பிள்ளையும் தவறான முடிவு எடுத்திருந்த நிலையில் ஏனையோரால் காப்பற்றப்பட்டுவைத்தியசாலையில்சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை நெடுங்கேணியில் நடந்தது.
"30 வயதான இளம் குடும்பப் பெண், நுண் கடன் திட்டத்தின் கீழ் கடன் பெற்றுள்ளார். பெற்றகடனைஅதிகவட்டியின்காரணமாக செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பணத்தை வழங்கிய நிறுவனத்தினர் பகலில் மாத்திரன்றி இரவு வேளைகளிலும் வீட்டுக்குச் சென்று பணத்தைக் கோரி நெருக்குதல் கொடுத்துள்ளனர். இதன் காரணமாக குடும்பத்தில் கணவன், மனைவி இடையில்தகராறுஏற்பட்டுள்ளது. கணவன் வீட்டில் இருந்து வெளிச் சென்ற நேரம் மனைவிதனது4வயதுஆண்பிள்ளையையும் தூக்கி கொண்டு அருகில் உள்ள வயல் வெளிக்குச் சென்று கிருமி நாசினியைப் பிள்ளைக்கும் பருகக் கொடுத்ததோடு தானும் அருந்தியுள்ளார். அந்த வயலுக்குப் பணிக்காகச் சென்ற ஏனைய விவசாயிகள் இதனை அவதானித்து உடனடியாக வைத்தியசாலைக்குகொண்டுசென்றனர்." என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.
நெடுங்கேணி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட தாயும் பிள்ளையும் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். தற்போது தாயும் பிள்ளையும்உடல்நலம்தேறிவருகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-5,101)

## வன்முறையிலிருந்து மீள நம்பிக்கை மிக அவசியம்

### ரொறன்ரோ நகர முதல்வர் முல்லைத்தீவில் தெரிவிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 21
வன்முறையிலிருந்து மீண்டு வருகின்ற மக்கள் நம்பிக்கையைநிச்சயமாக வளர்த்துக்கொள்ளவேண்டும். நம்பிக்கையில்லாவிட்டால் மீண்டு எழுவது என்பது சிரமமாகிவிடும்.
இவ்வாறு கனேடிய நாட்டின் ரொறன்ரோ நகர முதல்வர்ஜோன் ரொரிமுல்லைத்தீவில்வைத்துநேற்று முன்தினம்தெரிவித்தார்.
ஜோன்ரொரிபோரின்பாதிப்புக்களைஅனுபவித்தமுல்லைத்தீவு மக்களை, முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் சந்தித்தார். அங்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"தென்பகுதிமீனவர்களின்அத்துமீறிய வருகையினால் நாம் பாதிக்கப்பட்டுள்ளோம். கடலில் தொழில் செய்ய முடியாத நிலமையை அவர்கள் உருவாக்குகின்றனர். எமது வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கும் செயற்பாடுகள் தொடர்கின்றது" என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியராசா சந்திப்பில் சுட்டிக்காட்டினார்.
"எங்களின் காணிகள் மகாவலி எல் வலயத்தினுள் உள்வாங்கப்படுவதால், காணிகளை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பௌத்த மக்கள் வாழாத இடங்களில் விகாரைகள் அமைக்கப்படுகின்றன' என்று கொக்கிளாய் பிரதேசமக்கள் கூறினர்.
"வன்னிப் பகுதியின் கலை, கலாசாரம் திட்டமிட்டு சீரழிக்கப்படுகின்றது. அவற்றைப் பாதுகாக்க. வேண்டிய நிலையில் உள்ளோம். கல்வியும் பின்தங்கியுள்ளது" என்று வன்னி கலாசார பேரவையினர் சுட்டிக்காட்டினர்.



"பாடசாலைகளுக்கு உரிய தளபாடவசதிகள் இல்லைஎனவும், ஆசிரியர் வளமும் ஒழுங்காக இல்லை." என்று பாடசாலை மாணவர்கள் குறிப்பிட்டனர்.
மக்களின்கருத்துக்களைக்கேட்டறிந்த பின்னர் நகர முதல்வர் கருத்துரைத்தார்.
"இங்கிருந்து வருகை தந்த மக்கள் கனடாவில் எமக்கு முன்னுதாரணமாகநடந்துகொள்கின்றனர். வன்முறையிலிருந்து மீண்டு வருகின்ற மக்கள் நம்பிக்கையை நிச்சயமாக வளர்த்துக்கொள்ளவேண்டும். நம்பிக்கையில்லாவிட்டால் மீண்டு எழுவதுகடினம். பிரச்சினைக்கு மூலகாரணமான விடயங்கள் தீர்க்கப்படும்போதுதான் நம்பிக்கை வலுவாகும்." என்றார்.
நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து. ரவிகரன், க. சிவநேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ற-5,7)

## முதலில் கடைப்பிடி! பின்பு கற்பி

"என்மகன் எப்போதும் அலைபேசியில் மூழ்கிக் கிடக்கிறான். அவனைக் கண்டியுங்கள் என்று கேட்டுக் கொண்ட அன்னையிடம் ஒரு பெரியவர் "எனக்கும் அது தான் பிரச்சினை முதலில் நான் திருந்துகிறேன். பின்பு உன் மகனிடம் பேசுகிறேன் என்றாராம். ஒருவரது சொல்லுக்கும் செயலுக்கும் ஏற்படும் பாரதூர இடைவெளி யாராலும் இரசிக்கப்படுவதில்லை. அதையும் மீறி ஒருவர் பேசும்போது அவரது உள்ளத்தினுள் எழும். "நீ யோக்கியமா?என்ற உள்மனம் குரலுக்குச் செவிமடுத்து தன்னைப்புடமிட்டு திருத்திக் கொண்டபின்பே பிறருக்கு அறிவுரை கூறலாம்.

இயேசுவின் காலத்தில் சமயத் தலைவர்களில் பலர் எழுதப்பட்ட சட்டங்களையும், பாரம்பரியங்களையும் மக்களின் மேல் திணித்துவிட்டு அவர்கள் தான்தோன்றித்தனமாகத் திரிந்த அவல நிலை இயேசுவுக்கு அறச்சீற்றத்தை ஏற்படுத்தியது. நாம் எவ்வாறு வாழ்கின்றோம்?



இன்றைய அரசியல்வாதிகள், தலைவர்கள், அருட்பணியாளர்கள் துறவிகள், அதிகாரிகள் மற்றும் பெற்றோரில் எத்தகைய மனநிலை தூக்கலாக இருக்கிறது? கடைப்பிடித்து கற்பிக்கும் மன நிலையா? அறிவுரைகளை மட்டும் அள்ளித்தெளிக்கும் அறிவீனமா? மற்றவர்களின் கண்களில் உள்ள துரும்பைப் பார்ப்பதற்குப்பதிலாக நம் அறிவுக் கண்களை மறைக்கும் மரக்கட்டைகளை நீக்குவோம்.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை.

# 3 வாரங்கள் கடந்தும் முடிவேதும் இல்லை

## கேப்பாப்பிலவு மக்கள் விரக்தி

முல்லைத்தீவு, மார்ச் 21

எமது நிலங்களை விடுவிக்க வலியுறுத்தி நடத்தும் அறவழிப் போராட்டம் 3 வாரங்களைக் கடந்துள்ளது. இதுவரை அரச அதிகாரிகள் எமது பிரச்சினைகளைக் கேட்டறியவில்லை. எமது காணிகளை விடுவிப்பதற்காக அவர்கள் முன்னெடுத்த நடவடிக்கைகள் தொடர்பாகவும் எமக்குத் தெரியாது.

இவ்வாறு கேப்பாப்பிலவில் அறவழிப் போராட்டம் நடத்தும் மக்கள் விரக்தியுடன் தெரிவித்தனர்.



"எங்கள் அகதி வாழ்க்கை 2008ஆம் ஆண்டு ஆரம்பித்தது. நாம் எமது காணிகளுக்குச் செல்ல வேண்டும் என்று பல அமைதிப் போராட்டங்களை நடத்தினோம். எங்கள் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதில் அக்கறை இருப்பதாகவே பலரும் காட்டிக் கொள்கின்றனர். ஆனால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை முன்னெடுக்கப்பட வில்லை.

கடந்த 20 நாள்களாக இரவு, பகலாக இந்த இடத்தில் இருந்து போராட்டம் நடத்துகின்றோம். இதுவரை எந்த அதிகாரியும் வந்து எம்மைச் சந்திக்கவில்லை. எமது பிரச்சினை களைக் கேட்கவும் இல்லை. எமது போராட்டத்துக்கு சமூக மட்ட அமைப்புகளினதும், மக்களி னதும் ஆதரவை வேண்டி நிற்கின்றோம்.

நாம் முன்னெடுத்துள்ள அமைதி வழிப் போராட்டத்துக்கு அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் குரல் கொடுக்க வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிக்க வலியுறுத்த வேண்டும். அனைவரும் கேப்பாபிலவுக்கு வந்து ஆதரவு தாருங்கள்." என்று அந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ற -7)

## சாந்தபுரம் பெண் மீது கத்திக் குத்து: 3ஆம் திகதி அடையாள அணிவகுப்பு

கிளிநொச்சி, மார்ச் 21

கிளிநொச்சி, சாந்தபுரத்தில் கடந்த 3ஆம் திகதி பெண்ணொருவர் கத்திக் குத்துக்கு இலக்கான சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் மீது குற்றஞ் சாட்டப்பட்டதால், அந்தச் சிப்பாயை எதிர்வரும் சித்திரை மாதம் 3ஆம் திகதி அடையாள அணிவகுப்புக்கு முற்படுத்த வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நேற்று உத்தர விட்டார்.

நேற்று கிளிநொச்சி பொலிஸார் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையை ஆராய்ந்த நீதிவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார்.

சம்பவத்தில் காயமடைந்த பெண் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் கடந்த ஒன்பதாம் திகதி சம்பவம் தொடர்பான அறிக்கை பொலிஸாரால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. முறைப்பாட்டை விசாரணைசெய்த நீதிவான் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண்ணை கடந்த 13ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தி திறந்த வாக்குமூலம் பெற வேண்டும் என்று பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்ட பெண்ணை 13ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியிருந்தனர். சம்பவத்தில் காயமடைந்த பெண்ணும், அவரது மகனும் சுமார் ஒரு மணிநேரம் நீதிவான் முன்னிலையில் வாக்குமூலமளித்தனர்.

"குளத்திலிருந்து வந்து கொண்டிருந்த என்மீது காட்டுக்குள் இருந்துவந்த ஒருவர் தாக்குதல் நடத்தி என் சங்கிலியை அபகரிக்க முற்பட்டார். நான் கூச்சலிட்டு எதிர்ப்புக் காட்ட அவர் எனது கழுத்தில் கூரிய ஆயதத்தால் தாக்கிவிட்டு இராணுவமுகாம் பக்கமாக தப்பிச்சென்றார். ஆனால் அவர் இராணுவச் சீருடையில் இருக்கவில்லை. அவர் இராணுவத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம். என்னால் அவரை அடையாளம் காட்டமுடியும்." என்று அந்தப் பெண் வாக்குமூலமளித்தார்.

பெண்ணின் வாக்குமூலத்தைப் பதிவு செய்த நீதிவான் கடந்த 15ஆம் திகதி இராணுவத்தினரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்த வேண்டும் என்று உத்தரவிட்டார். அன்று அடையாள அணிவகுப்பு நடைபெறவில்லை.

சந்தேகநபர் தொடர்பான விசாரணைகள் முடிவடையாத நிலையில் அடையாள அணிவகுப்பை நடத்துவதிலுள்ள சிக்கல்நிலை தொடர்பாக பொலிஸார் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வந்ததை அடுத்து அணிவகுப்பு பிற்போடப்பட்டது.

**பின்னணி**

கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் கடந்த 3ஆம் திகதி மாலை இரணைமடுக் குளத்திற்கு நன்னீர் மீன்பிடித் தொழில் நடவடிக்கைக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்த பெண்மீது இனந்தெரியாத நபரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்குதல் நடத்தியதுடன் அவரது கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அபகரிக்க முற்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இரணைமடு இராணுவத் தலைமையகத்திற்கு பின்புறமாக உள்ள காட்டுக்குள் மறைந்திருந்த ஒருவரே தாக்குதல் நடத்தினார் என்றும் கூறப்பட்டது.

சம்பவம் இடம்பெற்ற வேளையில் குறித்த பெண்ணுக்கு முன்னால் சுமார் ஐம்பது மீற்றர்தூர இடைவெளியில் சென்று கொண்டிருந்த அவரது மகன், தாயின் அலறல் சத்தம்கேட்டு திரும்பிப் பார்த்துள்ளார். அப்போது அங்கு அவர்தான் ஏற்கனவே பற்றைக்குள் அவதானித்த நபர் தனது தாயாரைத் தாக்கிவிட்டு இராணுவமுகாம் பக்கம் வேகமாக ஓடியதைக் கண்டேன் என்று கூறியுள்ளார். அவர் ஊதா நிற மேலாடை அணிந்திருந்ததாகவும், சந்தேகநபரை அடையாளம் காட்ட முடியும் என்றும் கூறினார். (ற - ய)

# கேப்பாபிலவு போராட்டத்துக்கு அனைவரும் ஒத்துழையுங்கள்

## சிவமோகன் எம்.பி. வேண்டுகோள்

முல்லைத்தீவு, மார்ச் 21

கேப்பாபிலவு மக்கள் போராட்டத்தை முடிந்து விரைவில் தமது காணிகளுக்குச் செல்வதற்கு அனைத்துக் கட்சிகளும், பொதுமக்களும், அமைப்புகளும் நூறு வீத ஆதரவை வழங்க வேண்டும்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முல்லைத்தீவு மாவட்ட இணைத் தலைவருமாறு சி.சிவமோகன் வேண்டுகோள் விடுத்தார்.

கேப்பாபிலவு மக்கள் போராட்டக் களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

கேப்பாபிலவு மக்களின் போராட்டம் 20 நாள்களைக் கடந்து நடைபெறுகின்றது. போராட்டம் நாளுக்கு நாள் வலுவடைகின்றது. காணி விடுவிப்புத் தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை இராணுவத் தலைமையகத்தில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் உட்பட செயலாளர்களையும் சந்தித்தேன்.

காணிகள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று உயர் தரப்புகள் ஏற்றுக் கொண்டுள்ளபோதும், இராணுவ அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு பேசியபோது அவர்கள் உடனடியாக காணிகளை விடுவிப்பதற்கான ஆக்கபூர்வமான பதிலை வழங்கவில்லை. அதிலிருந்து எமக்கு ஒரு விடயம் தெளிவாகப் புரிகின்றது. இராணுவம் தமிழ் மக்களின் வாழ்வியலுக்கு எதிரானவர்கள் என்பதே அது.

அரசியல் ரீதியில் அரசு தலையிட்டு இராணுவத்தை வெளியேற்றுவதற்கு உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும். அனைத்துக் கட்சிகளும் இணைந்து அதற்காகக் குரல் கொடுக்க வேண்டும். பொதுமக்களின் காணிகளை இராணுவம் தொடர்ந்தும் கையகப்படுத்தி வைத்திருக்க முடியாது. எமது மக்கள் வீதியில் வாழ்கின்றனர். மக்களின் காணிகளில் அவர்களால் அமைக்கப்பட்ட வீடுகளில் இராணுவத்தினர் உல்லாசமாக இருக்கின்றனர்.

மக்களின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் அடுத்த கட்டத்துக்கு அது நகரும்போது எங்கள் முழுமையான ஆதரவை வழங்குவோம். அனைத்து மக்களும் போராட்டத்தில் ஈடுபபட்டவர்களுக்கு ஆதரவு வழங்கினால் காணிகளை விரைவாக மீட்கலாம்." - என்றார். (ற - 7)



பங்குனித் திங்களின் முதலாம் திங்கள் உற்சவம் வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் நேற்று நடைபெற்றது. பக்தர்கள் அம்பாளுக்கு நேர்த்திக்கடன் செய்து வழிபட்டனர். (ற- 7)

## பீற்றூட் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்



அச்சுவேலி, மார்ச் 21

யாழ். மாவட்டத்தில்பீற்றூட் செய்கை அதிகரித்துள்ளது. பெரும்போகத்தில் 120 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் பீற்றூட் செய்கை செய்யப்படுகின்றது.

இவ்வாறு யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் ஏ.செல்வராசா தெரிவித்தார்.

பீற்றூட்டின் விற்பனை விலைதளம்பல்இல்லாமல் இருப்பதோடு அறுவடை செய்த உடன் வருமானத்தை பெறக்கூடியதாக இருப்பதும் உற்பத்திச் செலவு குறைவாக இருப்பதும் பீற்றூட் செய்கையில் விவசாயிகள் ஆர்வம் கொண்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்டத்தில்பீற்றூட் செய்கை கடந்த காலங்களில் வெளிமாவட்டங்களுக்கு அனுப்புவதைகருத்தில் கொண்டே மேற்கொள்ளப்பட்டது. தற்போது உள்ளூர் மக்களின் பாவனை அளவும் அதிகரித்துள்ளது. வெளிமாவட்ட வியாபாரிகள் தோட்டங்களில் வைத்தே பீற்றூட்டை கொள்வனவு செய்து கொண்டுசெல்கின்றனர். (ற-11)

# கூட்டு எதிர்க்கட்சியின் எதிர்ப்புக் கூட்டங்களால் அரசுக்குத் தலையிடி

## முன்னாள் அரச தலைவர் மகிந்த தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 21

நாடு முழுவதும் கூட்டு எதிர்க்கட்சியினர் ஆரம்பிக்கவுள்ள தொடர் எதிர்ப்புக் கூட்டங்களால், அரசுக்கு பெரும் தலையிடி காத்திருக்கிறது. இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது எதிர்வரும் 25ஆம் திகதி காலியில் ஆரம்பமாகவுள்ள இந்த எதிர்ப்புக் கூட்டத் தொடர், நாடு முழுவதும் பரவும். கூட்ட எதிர்க்கட்சியால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தக் கூட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, நாடு முழுவதும் உள்ள மக்கள் ஒன்றுதிரண்டு வருகின்றனர். அரசின் நடவடிக்கைகளால் அதிருப்தியடைந்துள்ள மக்கள், அரசை விட்டுத் தூரமாக ஆரம்பித்துள்ளனர்.

அரசு மக்களுக்காக எந்தவொரு நல்ல விடயங்களையும் செய்யவில்லை. இந்தக் கூட்டங்களின் மூலம், அரசுக்குத் தகுந்த பாடம் ஒன்றைப் புகட்டவுள்ளோம்". என்றார். (ஐ)

# கடற்படையைப் பலப்படுத்த ஆழ்கடல் ரோந்துக் கப்பல்கள் கட்டப்படவுள்ளன

கொழும்பு,மார்ச் 21

இலங்கைக் கடற்படையைப் பலப்படுத்துவதற்கு மூன்று ஆழ்கடல் ரோந்துக் கப்பல்கள் கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்தில் கட்டப்படவுள்ளன.

இதற்கான அமைச்சரவைப் பத்திரம், பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் அரச தலைவரால் அண்மையில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இந்த மூன்று ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களினதும் மொத்தப் பெறுமதி 180 மில்லியன் ரூபாவாகும்.

இந்தக் கப்பல்களைக் கட்டுவதற்கான செலவை ஜப்பான் வழங்கவுள்ளது. இலங்கையைச் சுற்றியுள்ள 5லட்சத்து 17 ஆயிரம் சதுர கி.மீ கடற்பகுதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலேயே கடற்படைக்கு இந்தக் கப்பல்கள் வழங்கப்படவுள்ளன. கரையோரப் பகுதி, இலங்கைக் கடல் எல்லைக்குட்பட்ட பகுதி, மற்றும் இலங்கையில் பொருளாதார வலயத்துக்குட்பட்ட ஆழ்கடல் பகுதியில் தேடுதல், மீட்பு, சட்டத்தை நடை முறைப்படுத்தல், ஆகிய வற்றுக்கு இந்தக் கப்பல்கள் பயன்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# பாதாளக் குழுக்களின் குற்றங்களை இனியும் மூடி மறைக்க வேண்டாம்

## பொலிஸ்மா அதிபரிடம் பசில் வேண்டுகோள்



கொழும்பு,மார்ச் 21

“பாதாள உலகக் குழுக்கள் இல்லை என்று அவர்களின் குற்றங்களை இனியும் மூடி மறைக்க வேண்டாம். அவர்களைப் பாதுகாக்கவும் வேண்டாம்.”

இவ்வாறு பொலிஸ் மா அதிபரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸ் மா அதிபர் நன்றாக வேடிக்கை செய்கின்றார். தற்போது பாதாள உலக குழுக்கள் இல்லை எனக் கூறுகின்றார். அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிலர் அடித்துக்கொண்டு சாகின்றனர் எனவும் அவர் கூறுகின்றார்.

அவ்வாறுதான் சிறைச்சாலைப் பேருந்தில் இருந்த ஏழு பேர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இன்றுவரை எத்தனை பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்? எத்தனை ஊழல்கள் இடம்பெற்றுள்ளன? பொலிஸார் என்ன செய்கின்றனர்?

பொலிஸ் மா அதிபர் குற்றங்களை மூடி மறைக்கின்றார். பாதாள உலகக் குழுவினரைப் பாதுகாக்கின்றார். பொலிஸாரின் கௌரவத்தைப் பாதுகாக்குமாறு பொலிஸ் மா அதிபரிடம் நான் கோரிக்கை விடுகின்றேன். பொலிஸில் உள்ள கீழ் மட்ட அதிகாரிகள் கஷ்டப்பட்டு, பாதாள உலகக் குழுவினரைக் கட்டுப்படுத்தும் நடைமுறை இலங்கையில் இருந்தது.

பாதாள உலகக் குழுவினரின் செயற்பாட்டால், சிறைச்சாலை அதிகாரிகள் இருவர் கொலை செய்யப்பட்டிருக்கின்றார். கொலை செய்யப்பட்ட அந்த இரண்டு அதிகாரிகளுக்கும் கௌரவம் அளிக்கும் வகையில், இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை செய்யுங்கள். - என்றார். (ஐ)

# மைத்திரியின் அரசியல் குரு சண்முகதாஸன்

கொழும்பு,மார்ச் 21

"எனது அரசியல் குரு தோழர் சண்முகதாஸன் ஆவார். அவரது பாசறைக்குள்ளேயே அவருக்கெதிராகக் கேள்வி கேட்டு, கட்சியை விட்டு வெளியேறியவன் நான்" இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

லெனின், கார்ல் மாக்ஸ், மகாத்மா காந்தியின் ஒளிப்படங்கள் எனது உத்தியோகபூர்வ இல்லத்தின் மாநாட்டு அறையில் இன்றும் உள்ளன எனவும் அரச தலைவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ஐ)

# பசுபிக் கூட்டுப்பயிற்சி நிறைவுற்று நாடு திரும்பியது அமெரிக்கக் கப்பல்

கொழும்பு,மார்ச் 21

இலங்கையில் இரு வாரங்கள் தரித்து நின்று கூட்டுப் பயிற்சிகளில் ஈடுபட்டு வந்த அமெரிக்க கடற்படையின் அதிவேகப் போக்குவரத்துக் கப்பலான யு.எஸ்.என்.எஸ். போல் ரிவர், கடந்த சனிக்கிழமை அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றது.

கடந்த மார்ச் மாதம் 6ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்த யு.எஸ்.என்.எஸ். போல் ரிவர் கப்பலில் அமெரிக்கா, ஆஸ்ரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் இராணுவ மற்றும் சிவில் அதிகாரிகள் இணைந்து மறுநாள் பசுபிக் கூட்டுப்பயிற்சியை ஆரம்பித்திருந்தனர். மனிதாபிமான உதவிகள் மற்றும் இடர் மீட்புப் பணிகளில் ஈடுபடுவது தொடர்பான இந்த ஒத்திகைகள், 12 நாள்கள் இடம்பெற்றன.

கடந்த சனிக்கிழமை இந்தக் கூட்டுப் பயிற்சிகள் நிறைவடைந்தன. இந்தக் கூட்டுப் பயிற்சியின்போது, பல்வேறு மருத்துவ முகாம்கள், சுகாதாரப் பணிகள், அபிவிருத்திப் பணிகளில் அமெரிக்க, ஜப்பான், ஆஸ்திரேலிய அதிகாரிகள் ஈடுபட்டனர். கூட்டுப் பயிற்சி நிறைவடைந்ததையடுத்து, யு.எஸ். என்.எஸ் .போல் ரிவர் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றது. அடுத்து மலேசியா, வியட்னாம் ஆகிய நாடுகளுக்கு இந்தக் கப்பல் செல்லவுள்ளது.

(ஐ)

# அரசில் இணையப்போவதில்லை

## சமல் ராஜபக்ச உறுதி

கொழும்பு,மார்ச் 21

எனக்கு மிகவும் பலம் பொருந்திய பதவி ஒன்று வழங்கப்பட்டுள்ளதாகவும், நான் அரசில் இணைந்து கொள்ளப்போவதாகவும் வெளிவந்துள்ள தகவல்களில் எவ்வித உண்மைகளும் இல்லை. நான் அரசில் இணைந்து கொள்ளப் போவதில்லை. இவ்வாறு நாடளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் மட்டுமே நான் பங்குபற்றினேன். அந்தக் கூட்டத்தில் பங்கேற்றமையானது அரசில் இணைந்து கொள்வதாக அர்த்தப்படாது–என்றார். (ஐ)

# விமல் வீரவன்சவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு,மார்ச் 21

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவுக்கு விளக்கமறியலில் நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், அவரை எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மகிந்த ராஜபக்ச அரசின் போது, அரச வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகச் சென்ற போது, நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விமல் வீரவன்ச கடந்த ஜனவரி மாதம் 10 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அரச தலைவர் செயலகத்துக்குச் சொந்தமான பல்வேறு வாகனங்களைத் தவறாக பயன்படுத்தியதாக விமல் வீரவன்ச மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கைது செய்யப்பட்ட விமல் வீரவன்ச நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுத் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# போரால் தமிழர்களை அழித்தார் மகிந்த கூட்டு அரசு மதுபானத்தால் அழிக்கிறது

## மட்டக்களப்பு எம்.பி. சீ.யோகேஸ்வரன் தெரிவிப்பு

செங்கலடி,மார்ச் 21

“மகிந்த ராஜபக்ச அரசு போரால் தமிழர்களை அழித்து, சிறுபான்மை மக்களின் ஆதரவுடன் கொண்டுவரப்பட்ட கூட்டு அரசு போதைவஸ்து மற்றும் மதுபானத்தால் தமிழ் மக்களை அழிக்க முற்படுகிறது. இதனை அனுமதிக்க முடியாது.”

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கோறளைப்பற்று சமூக நல மேம்பாட்டு அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு கும்புறு மூலையில் மெண்டிஸ் கம்பனியின் மதுபானம் தயாரிக்கும் தொழிற்சாலை தற்போது அமைக்கப்பட்டு வருகிறது. இந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசு பின்னணியாக உள்ளது. இந்தத் தொழிற்சாலைக்கு ரூ.450 கோடி செலவிடப்படுகிறது.

இதில் மத்திய வங்கியின் ஆளுநராக இருந்த அர்ஜுன் மகேந்திரனின் மருமகன் சுமார் ரூ.200 கோடி நிதி முதலீடு செய்துள்ளார். இந்த நிதி எங்கிருந்து வந்தது தொடர்பாக நான் கேள்வியெழுப்பியுள்ளேன்.

வாழைச்சேனையில் உள்ள தேசிய கடதாசித் தொழிற்சாலையில் சுமார் மூவாயிரம் பேர் தொழில் புரிந்தார்கள். அதனை மீள ஆரம்பிப்பதற்கு இந்த அரசு, எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

கடதாசித் தொழிற்சாலைக்குச் சொந்தமான 380 ஏக்கர் காணியில் ஒரு பகுதியைச் சுவீகரித்துக்கொண்டு செல்கிறார்கள். மீதியுள்ள காணியில்



சுற்றுலாத்துறைக்கு வழங்கி விளையாட்டுத் திடல் அமைக்க முற்படுகிறார்கள். குறித்த இடத்தில் தொழிற்சாலை அமைப்பதற்கு சீனக் கம்பனி தயாராக உள்ளது. ஆனால் அரசு கடதாசித் தொழிற்சாலையை மீண்டும் இயக்க மறுக்கிறார்கள்.

போர் முடிவடைந்ததன் பின்னர், ஒரு சில ஆடைத் தொழிற்சாலைகளைத் தவிர எந்தவொரு தொழிற்சாலைகளும் இங்கு அமைக்கப்படவில்லை.

1952ஆம் ஆண்டு தேசிய கடதாசி ஆலைக்கு காணி சுவிகரிக்கும் போது, தமிழ் மக்களின் காணியைத்தான் சுவீகரித்தார்கள். ஆனால் தற்போது அருகிலுள்ள பெரும்பான்மை இனத்தவர் சுவீகரிக்கின்றனர். பாசிக்குடாவில் பல ஹோட்டல்கள் இருந்தாலும், அத்தனையும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்தவர்களுடையதாகவே இருக்கின்றன.

அதில் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 60 சதவீதமானவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும். ஆனால் தென்பகுதியிலிருந்து தொழிலாளர்கள் அழைத்து வரப்பட்டதன் காரணமாக எமது பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு சாதாரண வேலைகள் மாத்திரம் வழங்கப்படுகின்றன - என்றார்.

(ஐ-45)

# கடந்த 2 மாதங்களில் மட்டும் 55 பேருக்கு எச்.ஐ.வி. தொற்று

## அவர்களில் ஆண்களே அதிகம்

கொழும்பு.மார்ச் 21
இலங்கையில் இந்த வருடத்தின் இரண்டு மாத காலப் பகுதிக்குள் மட்டும் 55 பேர் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளாகியிருப்பதுடன், அவர்களில் பலர் ஆண்கள் எனவும் கண்டறியப்பட்டுள்ளது என்று தேசிய பாலியல் மற்றும் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் சிசிர லியனகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எச்.ஐ.வி தொற்றுப் பரிசோதனைக்காக வைத்தியசாலைகளுக்கு வருகை தருவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. கடந்த இரு மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின்போது 55 பேருக்கு எச்.ஐ.வி. தொற்று இருப்பது கண்டறியப்பட்டது-என்றார்.

இந்த நிலையில் கனேமுல்ல பகுதியைச் சேர்ந்த தாய் ஒருவருக்கு எச்.ஐ.வி. தொற்று இருப்பதால், அவருடைய மகளைப் பாடசாலையில் இணைத்துக்கொள்ள பாடசாலை நிர்வாகம் மறுப்புத் தெரிவித்தது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பாக, குளியாபிட்டிய பகுதில் தாயாருக்கு எச்.ஐ.வி. தொற்று இருப்பதாகக் கூறி, அவரது மகனைப் பாடசாலையில் இணைத்துக்கொள்ளப் பாடசாலை நிர்வாகம் மறுத்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இணக்கப்பாடின்றி அமைச்சரவையை மாற்றியமைக்க இயலாது

## கூறுகிறார் சுசில் பிரேமஜயந்த



கொழும்பு,மார்ச் 21
நாட்டில் கூட்டு அரசின் ஆட்சி காணப்படும் நிலையில், இரு தரப்பும் இணங்காமல் அமைச்சரவையில் மாற்றம் கொண்டு வர முடியாது. இவ்வாறு அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இது குறித்து ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"அமைச்சரவையில் மாற்றம் கொண்டுவருவதற்குஇருதரப்பும் இணங்க வேண்டும். அரச தலைவரால் மாத்திரம் அதனைச் செய்ய முடியாது.

இதனை விளங்காத சில அமைச்சர்களே அமைச்சரவையில் மாற்றம் இடம்பெறப் போவதாகக் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

அத்துடன் அமைச்சரவை மாற்றம் குறித்து அரச தலைவர் மாளிகையில், அமைச்சர்கள் சிலருடன் சிறப்புப் பேச்சு இடம்பெற்றதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் அமைச்சர்களுடன் கூடிப் பேசி அமைச்சரவையில் மாற்றம் செய்வதற்கு 19 ஆவது அரசியல் யாப்புத் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் முடியாது. அதற்குத் தலைமை அமைச்சருடன், அரச தலைவர் கலந்துரையாட வேண்டும்.

இது தெரியாத ஒரு சிலரே, அமைச்சரவையில் மாற்றம் இடம்பெறப்போவதாகக் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்" - என்றார். (ஐ)

# பிள்ளையானுக்கும் சகாக்களுக்கும் மறியல் நீடிப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின்படுகொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 4 பேரினதும் விளக்கமறியல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் என்றழைக்கப்படும் பிள்ளையான், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்த ராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இரா ணுவப் புலனாய்வு உத்தியோகஸ்தர் எம்.கலீல் ஆகியோருக்கே விளக்கமறியல்நீடிக்கப்பட்டுள்ளது.

த.தே.கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், 2005ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் இடம்பெற்ற நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்து கொண்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களது வழக்கு மட்டக்களப்பு நீதிமன்றில் நேற்று இடம்பெற்றபோது, சந்தேக நபர்களுக்கு மீண்டும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அல் ஹுசைனின் அறிக்கை மீது நாளை ஜெனிவாவில் விவாதம்



கொழும்பு.மார்ச் 21
ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் சையிட் அல் ஹுசைன் இலங்கை தொடர்பாக முன்வைத்த எழுத்துமூல அறிக்கை தொடர்பான விவாதம் நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்த விவாதத்தின் ஆரம்பத்தில் இலங்கை தொடர்பான அறிக்கையை உத்தியோகபூர்வமாக வெளியிடவுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சையிட் அல் ஹுசைன், இலங்கை தொடர்பாக பிரதான உரையை நிகழ்த்தவுள்ளார்.

அதன்பின்னர் பதிலளிக்க உரிமை உள்ள நாடு என்ற வகையில் இலங்கையின் வதிவிடப்பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க ஹுசைனின் உரைக்குப் பதிலளித்து உரையாற்றுவார்.

தொடர்ந்து மனித உரிமை உறுப்புநாடுகளும், உறுப்புரிமை அற்றநாடுகளும் இலங்கை தொடர்பான தமது நிலைப்பாடுகளை வெளியிடவுள்ளன.

அதேவேளை நாளை புதன்கிழமை இலங்கை தொடர்பான உரையை நிகழ்த்தவுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சையிட் அல் ஹுசைன், இலங்கையானது நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விடயத்தில் விரைவான முன்னேற்றத்தை வெளிக்காட்ட வேண்டுமென வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக ஏற்கனவே இலங்கை தொடர்பான அறிக்கையை வெளியிட்டிருந்த சையிட் அல் ஹுசைன், இலங்கையானது நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலில் கவலைக்குரிய விதத்தில் தாமதமாகச் செயற்படுவதாகவும், விரைவான முன்னேற்றத்தை வெளிக்காட்ட வேண்டியது அவசியம் என்றும் குறிப்பிட்டிருந்தார். மேலும் பன்னாட்டு நீதிபதிகள் உள்ளடங்கிய கலப்புநீதிமன்றப் பொறிமுறையை முன்னெடுக்க, இலங்கை அரசு நாடாளுமன்றில் சட்டவரைவுகளை நிறைவேற்றவேண்டுமெனவும் ஹுசைன் குறிப்பிட்டிருந்தார். (ஐ)

# உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த மே மாதம் வரையே அரசுக்கு காலக்கேடு

## மகிந்த அணியினர் எச்சரிக்கை



கொழும்பு.மார்ச் 21
எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசு நடத்தாவிட்டால், உள்ளூராட்சி சபை அமைச்சரின் வீட்டையும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரது வீட்டையும் சுற்றிவளைப்போம். இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மாத்தறை பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதியுடன் உள்ளூராட்சி சபைத் தேர்தல் இடம்பெற்று 6 வருடங்கள் நிறைவடைகின்றது. இந்த நிலையில் அரசு தொடர்ந்தும் உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிற்போடும் நடவடிக்கையில் ஈடுபட்டால், உள்ளூராட்சி சபைக்குச்செலுத்தப்படும்சகல வரிகளையும் நாம்செலுத்தாது விடுவோம்-என்றார். (ஐ)



# உடல் உறுப்பு தானத்தால் 5 பேருக்கு சிறுநீரகங்கள்

கொழும்பு, மார்ச் 21

கடந்த இரண்டரை மாதங்களில் விபத்துகளால் அல்லது வேறு காரணங்களால் மூளை செயலிழந்தவர்களிடமிருந்து பெறப்பட்ட சிறுநீரகங்கள் ஐந்து சிறுநீரக நோயாளிகளுக்கு வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சின் தேசிய சிறுநீரக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் ரத்ன சிறி ஹேவகே தெரிவித்தார்.

"சாதாரணமாக வருடாந்தம் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மூளை செயலிழப்பால் உயிரிழக்கின்றனர். அவர்களிடமிருந்து குறைந்தபட்சம் ஆயிரத்து 500 ஆரோக்கியமான சிறுநீரகங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். மக்களின் அறியாமை காரணமாக அவற்றுள் பெருமளவு சிறுநீரகங்கள் வீணாகிப் போகின்றன. அகால மரணமடையும் போது சிறுநீரகங்கள் உட்பட ஏனைய முக்கிய உறுப்புகளைத் தானம் செய்வதற்கு மக்கள் முன்வரவேண்டும். இது தொடர்பில் சகல அரச வைத்தியசாலைகளிலும் விழிப்புணர்வு செயற்றிட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது." என்று அவர் குறிப்பிட்டார்.

(ற)

### காணாமல் ஆக்கப்பட்டவர்கள் வெளிப்படுத்தலை வலியுறுத்தி

# 5 மாவட்டங்களில் தொடர்கின்றன போராட்டங்கள்




யாழ்ப்பாணம், மார்ச் 21

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 5 மாவட்டங்களில் மேற்கொண்டுவரும் தொடர் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது.

வடக்கின் 4 மாவட்டங்களிலும், கிழக்கில் திருகோணமலை மாவட்டத்திலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டம் நடத்துகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வெளிப்படுத்தலையும், விடுதலையையும் வலியுறுத்தியே அவர்கள் போராட்டத்தைத் தொடர்கின்றனர்.

தமக்கு உறுதியான தீர்வு கிடைக்கும்வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை. எம்மை வீதியில் விட்டு வேடிக்கை பார்ப்பதை விடுத்து எமக்குத் தீர்வு பெற்றுத் தர வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த 20 ஆம் திகதி போராட்டத்தை ஆரம்பித்தனர். நேற்று 29ஆவது நாளாகவும் போராட்டம் தொடர்ந்தது.

வவுனியாவில் 25 நாளாக நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது. தகரக் கொட்டகை அமைத்து அதில் தங்கியிருந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் போராட்டம் நடத்தப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று 13ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

யாழ்ப்பாணத்திலும், வடமராட்சி கிழக்கிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் நேற்று அவர்களைச் சந்தித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டம் நேற்று 16ஆவது நாளாகத் தொடர்ந்தது. (ற - 5,6,7,26,34)

# அச்சுவேலி முக்கொலை வழக்கு: தொடர் விசாரணைகள் 27 அன்று

### சந்தேக நபரின் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

அச்சுவேலியில் மூன்று பேரை வெட்டிப் படுகொலை செய்த வழக்கு, தொடர் விசாரணைக்காக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் எதிர்வரும் 27ஆம் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. சந்தேகநபருக்கான பிணையும் நிராகரிக்கப்பட்டது.

அச்சுவேலியில் 2014ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் திகதி நித்தியானந்தன் அருள்நாயகி, நித்தியானந்தன் சுபாங்கன், யசோதரன் மதுஷா ஆகிய மூவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர். சம்பவத்தில் தனஞ்செயன் தர்விகா, தங்கவேல் யசோதரன் ஆகியோருக்குக் கத்தியால் குத்திக் காயமேற்படுத்தப்பட்டது.

இவற்றுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கோப்பாய், ஊரெழுமேற்கு அம்மன் கோவிலடியை சேர்ந்த பொன்னம்பலம் தனஞ்செயன் கைது செய்யப்பட்டார். இவர் காயமடைந்த தர்விகாவின் கணவர். அவர் 2 வருடங்களுக்கு மேலாக விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வழக்கு யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. எதிரிக்குக் குற்றப் பகர்வுப் பத்திரம் தமிழ் மொழியில் வாசித்துக் காட்டப்பட்டது.

குற்றப் பகர்வுப் பத்திரத்தில் உள்ள 5 குற்றச்சாட்டுக்களுக்கும் எதிரி சுற்றவாளி என்று மன்றுரை செய்தார். எதிரி தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி பிணை கோரியிருந்தார். பிணை விண்ணப்பம் மேல்நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டது.

இந்த வழக்கில் 14 சாட்சியங்கள் உள்ளன. சாட்சியங்களுக்கான தொடர் விசாரணைகள் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

இந்த வழக்குக்கான சில தடயப் பொருள்கள், இராசயானப் பகுப்பாய்வு நிலையத்தில் உள்ளன. அவற்றை மேல்நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என்று பொலிஸாருக்கு மேல்நீதிமன்று பணித்தது. இந்த வழக்கில் சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் அரச சட்டத்தரணி நிசாந் முற்பட எதிரி தரப்பில் சட்டத்தரணி வி. திருக்குமரன் முற்பட்டார்.

(ற - 4,ரி)

# மார்ட்டீன் வீதிக் கொலை; சந்தேக நபருக்கு மறியல்

### சாட்சியப் பதிவுகளுக்காக வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்.மார்ச் 21

யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதியில் வீட்டின் உரிமையாளரைக் கொன்று அவரை முற்றத்தில் புதைத்த கொலைச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. மேலதிக சாட்சிகளின் சாட்சியங்களுக்காக எதிர்வரும்31 ஆம் திகதி வரை வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு ஜெரோம் என்பவர் அவருடைய மனைவியுடன் யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதியில் உள்ள வீட்டில் வாடகைக்குக் குடியிருந்தார். வீட்டின் உரிமையாளரான பெண்ணுடன் அடிக்கடி முரண்பாட்டுள்ளார். முரண்பாடுகள் அதிகரிக்கவே அந்த வீட்டில் தங்கியிருந்த ஜெரோம் அந்த வீட்டின் உரிமையாளரை கொலை செய்து வீட்டின் முற்றத்தில் புதைத்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த வழக்குத் தொடர்பில் 3ஆம், 4ஆம், 5ஆம் சாட்சிகள் நேற்று மன்றில் சாட்சியமளித்தனர். சாட்சிகள் குற்றஞ்சாட்டப்பட்ட எதிரியான ஜெரோமால் விற்கப்பட்ட ஒன்றரைப் பவுண் மதிக்கத்தக்க தங்கச் சங்கிலி மற்றும் இரண்டு தோடுகள் தொடர்பில் சாட்சியமளித்தனர்.

எதிரியான ஜெரோம் சங்கிலி, தோடு போன்றவற்றை எமது நகைக்கடைகளில் கொண்டு வந்து தந்தார் என்றும் தாம் அவற்றுக்கு மாற்றுப் பொருள் கொடுத்தோம், மிகுதியைப் பணமாகக் கொடுத்தோம் என்று கூறினார்கள். 5ஆவது சாட்சி தன்னிடம் தோடு மற்றும் சங்கிலியை கொண்டு வந்த நபர் எதிரிக் கூண்டில் நிற்பவர் தான் என்று சுட்டிக்காட்டினார். எதிரியை எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டதுடன் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

(ற - ரி)



# UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BID

1. **The Chairperson, Procurement Committee of University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for the following work.

| No | Bid ID | Description of Work | Estimated Cost ( Rs. In million) | Contract Period (No of Calendar Days) | Minimum Required ICTAD Grade | Required Bid Security Amount |
|---|---|---|---|---|---|---|
| 1 | YA/CWP/RE/ 2017-03 | Construction of Warehouse at Faculty of Technology at Ariviyalnagar, Kilinochchi | 11.3 | 120 | C6 or above | Rs. 110,000.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction with the Institute for Construction Industry Development Authority (CIDA) as indicated in the above table.
4. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the above table.
5. Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.** Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna from 20th March, 2017** until **5th April, 2017** from **9.00 hrs to 15.00 hrs** upon payment of a non refundable fee of **rupees two thousand (Rs.2,000/-).**
7. Bids shall be delivered or sent by registered post to the **Chairperson, Procurement Committee of University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Registrar's office to reach on or before 14.00 hrs on the 6th April, 2017. Bids will be opened immediately thereafter on 6th April, 2017** in the Board room of the University in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be valid for a period for **90 days** from the date fixed for closing of Bids or any extend period.
9. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in Section 09 in the Bidding document.
   - For the amount as indicated in the above table.
   - Valid up to **4th August, 2017.**
   - In favour of "Vice Chancellor, University of Jaffna."
   - Issued by one of the agencies indicated in the clause 16 of ITB of the schedule.
10. Pre Bid meeting will be held at board room of the Faculty of Agriculture, Ariviyal Nagar, Kilinochchi at 10.00 hrs on the **29th March, 2017.**

**Chairperson,**
**Department Procurement Committee,**
**University of Jaffna,**
**17.03.2017**



அமெரிக்க அதிபர் ட்ரம்பின் கொள்கைகளையும், அவர் நடைமுறைப்படுத்தும் திட்டங்களையும் எதிர்த்து தனிநபர் ஒருவர், அமெரிக்க அதிபரின் உத்தியோகபூர்வ இல்லமான வெள்ளைமாளிகையின் முன்பு அமெரிக்கப் பழங்குடியினரைப் போன்று உடையணிந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார். (ம)

# அமெரிக்கத் தாக்குதலில் தலிபான் தளபதிகள் உயிரிழப்பு

காபூல், மார்ச் 21
ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் தலிபான் அமைப்பைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் இருவர் சாவடைந்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் உள்ள பக்திகா மாகாணம், பாகிஸ்தானின் தெற்கு எல்லையையொட்டி அமைந்துள்ளது. அங்கு தடை செய்யப்பட்ட தலிபான் உள்ளிட்ட அமைப்புக்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. பக்திகா மாகாணத்தின் நார் என்ற பகுதியில் ஒரு காரை இலக்கு வைத்து அமெரிக்காவின் ஆளில்லா விமானம் தாக்குதல் நடத்தியது. அந்தத் தாக்குதலில் அந்தக் காரில் பயணம் செய்த 2 பேர் சாவடைந்தனர். சாவடைந்த இருவரும் தலிபான் அமைப்பின் தளபதிகள் என்றும், அவர்களது பெயர்கள் ஹாரூண் சூய்கேல் வாசில், அஜ்மத் மசூத் என்றும் தெரியவந்துள்ளது.

இந்தத் தாக்குதல் கடந்த வெள்ளிக்கிழமை நடந்துள்ள போதிலும் நேற்றுத்தான் தகவல்கள் கசியவிடப்பட்டன. அந்தத் தளபதிகளின் நடமாட்டத்தைக் கண்காணித்து வந்து, அமெரிக்கா இந்த தாக்குதலைத் துல்லியமாக நடத்தி முடித்துள்ளது. உயிரிழந்த இருவரின் உடல்களும் லாமான் என்ற இடத்தில் புதைக்கப்பட்டன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



# தற்கொலை

மைடுகுரி, மார்ச் 21
நைஜீரியா நாட்டின் வடகிழக்குப் பகுதியி
உள்ள மைடுகுரி நகரின் அருகே நேற்
முன்தினம் நடத்திய தற்கொலைத் தாக்கு
லில் 7 பேர் உடல் சிதறி உயிரிழந்
னர்.
கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் சமஅ
வில் வாழ்ந்து வரும் நைஜீரியா நாட்டி
இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்கு உட்ப
ஆட்சியைக் கொண்டுவர வேண்டும் என்
போகோஹரம் அமைப்பை சேர்ந்த ஆய
தாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்
னர். வடக்கு நைஜீரியாவில் உள்ள சி
சிறிய நகரங்களைக் கைப்பற்றியுள்ள இந்
அமைப்பு, தற்போது, வடகிழக்கு மாநிலங்




# அமெரிக்காவி செயல்கள் பா

## நிதி குறைப்புத் தொடா குத்தேரஸ் கடும் அதிரு

வொஷிங்டன், மார்ச் 21
ஐக்கிய நாடுகள் சபைக்கு வழங்கும் நிதி உதவியைக் குறைக்க அமெரிக்கா முடிவுசெய்துள்ள நிலையில், அவ்வாறு குறைத்தால் அது ஐக்கிய நாடுகள் சபையின் பணியை மிகவும் பாதிப்படையைச் செய்யும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் குத்தேரஸ் அதிருப்தி தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபைக்கு வழங்கப்படும் நிதி உதவியில் அமெரிக்கா மட்டும் 22 சதவீதம் பங்களிப்புச் செய்கிறது. அதாவது இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட ஒரு லட்சத்து 50 ஆயிரம் கோடிக்கும் அதிகமான தொகையை

# பாம்பு மசாஜ்

பெர்லின், மார்ச் 21
ஜேர்மனின் டிரெஸ்டென் என்ற நகரில் உள்ள ஒரு சிகை அலங்கார நிலையத்தினர் வாடிக்கையாளர்களின் கழுத்தில் இருக்கும் வலிகளை மலைப்பாம்பு மசாஜ்ஜின் மூலம் சீர்செய்கின்ற விடயம் பன்னாட்டு ஊடகங்களின் கவனத்தைப் பெற்றுள்ளது.

குறித்த மலைப்பாம்புக்கு மாண்டி என்று பெயரிடப்பட்டுள்ளது. வாடிக்கையாளருக்கு முடி திருத்தம் செய்த பிறகு இறுதியில் அவரது கழுத்தில் மாண்டி மலைப்பாம்பு சுற்றப்படுகிறது. அது தனது தசையின் மூலம் லேசாக நெளிந்தபடி கழுத்துப் பகுதியில் மசாஜ் செய்கிறது. இத்தகைய மசாஜ் பணியில் மலைப்பாம்பு சுமார் 13 வருடங்களாக ஈடுபட்டுவருகிறது. மலைப்பாம்பு மசாஜை ஏராளமான வாடிக்கையாளர்கள் விரும்பிச் செய்கின்றனர். இந்த மசாஜுக்கு என்று தனியாகக் கட்டணம் வசூலிப்பதில்லையாம். (ம)





# நேற்றுமுன்தினம் 3,000 பேர் மீட்பு

## இத்தாலிக் கடற்பரப்பில்

உரோம், மார்ச் 21
இத்தாலிக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் மட்டும் 3 ஆயிரம் அகதிகள் மீட்கப்பட்டனர் என்று அந்த நாட்டின் கடலோரக் காவற்படை அறிவித்தது.

ஈராக், சிரியா நாடுகளில் நடைபெற்றுவரும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் காரணமாகவும், சூடான், சோமாலியா, எத்தியோப்பியா, சிம்பாப்வே, ஆப்கானிஸ்தான், ஈரான், ஏமன் உள்ளிட்ட நாடுகளில் நிலவும் உள்நாட்டுப் போர்ச் சூழல் மற்றும் வறுமை காரணமாகவும் பல்லாயிரக் கணக்கான மக்கள் லிபியாவுக்குச் சென்று அங்கிருந்து இத்தாலிக்கும் இத்தாலியின் கடற்பரப்பின் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கும் அகதிகளாகச் செல்கின்றனர். அவ்வாறு 22 படகுகளில் ஐரோப்பியாவுக்குச் செல்ல எத்தனித்த 3 ஆயிரம் அகதிகள் நேற்றுமுன்தினம் மட்டும் மீட்கப்பட்டனர் என்று இத்தாலிக் கடலோரக் காவற்படை அறிவித்தது.

ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் அகதிகளின் எண்ணிக்கை இதுவரை 25 லட்சத்தை எட்டியுள்ளது. கடந்த வருடம் மட்டும் கிட்டத்தட்ட 6 ஆயிரம் அகதிகள் இத்தாலிக் கடற்பரப்பில் பாதுகாப்பற்ற பயணங்கள் காரணமாகச் சாவடைந்துள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் முன்னைய அறிக்கையொன்று சுட்டிநிற்கிறது. (ம)

# காதலிக்குப் பரிசாக

சீனாவில் முன்வைக்கப்பட்ட திருமணக் கோரிக்கை ஒன்று வழக்கத்துக்கு மாறாக மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது.

சீனாவைச் சேர்ந்த லியு பெய் என்ற நபர், விண்கல் ஒன்றைப் பரிசாக அளித்து, காதலியிடம் திருமணக் கோரிக்கை வைத்திருக்கிறார். 95 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 33 தொன் எடை கொண்ட மிகப்பெரிய விண்கல்



# ட்ரம்புக்கு தொடர் அச்சுறுத்தல்

வொஷிங்டன், மார்ச் 21
அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கும் அவரது உத்தியோகபூர்வ இல்லமான வெள்ளை மாளிகைக்கும் தொடர்ந்து பயங்கரவாத அச்சுறுத்தல் விடுக்கப்படு கிறது என்று அமெரிக்க ஊடகங்கள் குறிப்பிட்டன.

வெள்ளை மாளிகையில் உள்ள கார் ஒன்றில் வெடிகுண்டு உள்ளது என்று அங்கு பணிபுரியும் அதிகாரி ஒருவருக்கு நேற்றுமுன்தினம் மிரட்டல் விடுக்கப்பட்டது. இதனையடுத்து மிரட்டல் விடுத்த நபரை பொலிஸார் கண்டுபிடித்து அவர் மீது வழக்குப் பதிவுசெய்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் வெள்ளைமாளிகையின் பாதுகாப்பு அரணைத் தாண்டிக் குதித்துவந்த ஒருவரையும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் கைதுசெய்தனர். இந்தச் சம்பவங்களால் பெரும் பாதுகாப்பு நிறைந்த கோட்டையான வெள்ளை மாளிகையின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டது. (ம)

# இரட்டை இலையை மீட்டெடுப்போம் எனத் தெ

அ.தி.மு. கழகத்தின் இரட்டையிலைச் சின்னத்தை மீண்டும் கைப்பற்றுவோம் என்று அந்தக் கழகத்தின் முன்னாள் முக்கியஸ்தரும் ஓ.பன்னீர்செல்வத்தின் தற்போதைய ஆதரவாளருமான பாண்டியராஜன் தெரிவித்தார்.


முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே பாண்டியராஜன் இவ்வாறு



# லத் தாக்குதலில் 7 பேர் உடல் சிதறிச் சாவு

பகுதியில்
நேற்று
தாக்குத
யிரிழந்த

சமஅள
நாட்டில்
உட்பட்ட
ம் என்று
த ஆயுத
வருகின்ற
ள்ள சில
ள இந்த
நிலங்க



ளின் தலைநகரான மைடுகுரியைக் கைப்பற்றும் நோக்கத்தில் அவ்வப்போது சில தாக்குதல்களை நடத்தி வருகிறது. இந்தப் பின்னணியில் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் 7 பேர் சாவடைந்தனர். பலர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கும் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)

## அல் சிசி - ட்ரம்ப் ஏப்ரலில் சந்திப்பு

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் எகிப்து அதிபர் பட்டா அல் சிசி இடையிலான சந்திப்பொன்று ஏப்ரலில் நடைபெறவுள்ளது என்று வெள்ளை மாளிகை உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

ட்ரம்புக்கும் உலகத் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்புக்களும் தொடர்சியாக நடைபெற்று வருகின்றன. இந்த வரிசையில் ட்ரம்ப் பட்டா-அல் சிசி இடையிலான சந்திப்பு ஏப்ரல் 3 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ம)



# வின் முடிவால் பாதிப்படையும்

டர்பில்
திருப்தி

அமெரிக்கா வழங்குகிறது. இந்தத் தொகையை ட்ரம்ப் குறைக்க முடிவு செய்துள்ளார். அயல்நாடுகளுக்கு வழங்கும் உதவித்தொகையையும் குறைத்து அமெரிக்க இராணுவத்துக்கு அதிகளவான தொகையை ஒதுக்க முடிவுசெய்துள்ளார். இதனையடுத் தே குத்தேரஸ் தனது அதிப்தியை வெளிப்படுத்தினார். அமெரிக்காவின் முடிவு கவலையளிக்கிறது. இந்த முடிவால் ஐக்கிய நாடுகள் சபையின் சீர்திருத்தப் பணிகள், அமைதிப் பணிகள், நீண்டகாலத் திட்டங்கள் ஆகியன வெகுவாகப் பாதிக்கும் என்று குத்தேரஸ் மேலும் தெரிவித்தார். (ம)

# தீபாவை முதல்வராக்கவே தனிக் கட்சியாம்

சென்னை, மார்ச் 21

தீபாவை முதல்வராக்கவே நான் தனிக்கட்சி தொடங்கத் திட்டமிட்டுள்ளேன் இவ்வாறு தெரிவித்தார் தீபாவின் கணவர் மாதவன்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் சாவின் பின்னர் அவரது அண்ணன் மகள் தீபா, தன்னை ஜெயலலிதாவின் அரசியல் வாரிசு என்று குறிப்பிட்டு வருகிறார். எம்.ஜி.ஆர். அம்மா தீபா என்ற பெயரில் தனிக்கட்சியும் தொடங்கியுள்ளார். அவரது கட்சிக்காக பரப்புரையில் ஈடுபட்டுவந்த கணவர் மாதவன் தனிக்கட்சி தொடங்கவுள்ளார் என்று அண்மைக்காலமாக ஏகப்பட்ட செய்திகள் வெளிவந்தன. இந்த நிலையில் தீபாவை முதல்வராக்கவே தான் தனிக்கட்சி தொடங்கவுள்ளார் என்று மாதவன் தெரிவித்தார்.

எனது கட்சியும் தீபாவை முதல்வர் அரியணையில் அமர்த்துவதற்காகவே செயற்படும் என்று மாதவன் மேலும் தெரிவித்தார். (ம)



# க விண்கல்



லைத்தான் பரிசாக அளித்திருக்கிறார். வீடு வாங்குவதற்காக வைத்திருந்த ஒருகோடி ரூபாயில் தான் அவர் அந்த விண்கல்லை வாங்கினாராம். தற்போது சீனாவின் மிகப்பெரிய விண்கல் பெய்யிடமே உள்ளது. வித்தியாசமான பரிசாக இருந்தாலும் அதைவைத்து என்ன தான் செய்வது. (ம)

# தெரிவித்தார் பாண்டியராஜன்



தெரிவித்தார்.

கட்சியின் பொதுச் செயலாளராக சசிகலா தெரிந்தெடுக்கப்பட்டது செல்லாது. இதனால் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நம்பிக்கையைப் பெற்ற அவைத்தலைவர் மதுசூதனன், பொருளாளர் பன்னீர்செல்வம் ஆகியோரின் தலைமையில் கட்சி ஒப்படைக்கப்படவேண்டும். இரட்டை இலைச்சின்னம் எமக்கே சொந்தம். அது எங்களுக்குக் கிடைக்கும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை உள்ளது என பாண்டியராஜன் மேலும் தெரிவித்தார். (ம)



# பெருந்தோட்டச் செய்கைக்கான உரமானியமாக ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

## தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை பயிரிடலை ஊக்குவிக்க அரசு தீர்மானம்



பயிரிடல் சார் அபிவிருத்தியை பெருந்தோட்டத்துறைக்குள் உள்ளீர்க்கும்வகையிலானசெயற்பாடுகளைஅரசுமுன்னெடுத்துள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை போன்ற பெருந்தோட்டப்பயிர்ச்செய்கைக்கானஉரமானியமாகஆயிரத்து500மில்லியன்ரூபாதொகைமதிப்பீடுடையநிதியினை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

குறிப்பாகசிறுதேயிலைத்தோட்டஅபிவிருத்திஅதிகாரசபைக்கு 900மில்லியன்ரூபாநிதியும், தென்னைசெய்கைக்காக500 மில்லியன்ரூபாநிதியும்மற்றும்இறப்பர்அபிவிருத்திதிணைக் களத்துக்கு100 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறு தேயிலைதோட்ட உரிமையாளர்கள் அதிகபட்சமாக ஒரு ஹெக்ரேயர் நிலப்பரப்புக்கு 15 ஆயிரம் ரூபாவையும், தென்னைச் செய்கைக்காக அதிகபட்சமாக 5 ஏக்கர் நிலப்பரப்புக்கு 9 ஆயிரம் ரூபாவையும், இறப்பர் செய்கைக்காக 2 ஹெக்ரேயர் நிலப்பரப்புக்கு அதிகபட்சமாக 5 ஆயிரம் ரூபாவையும் உரமானியமாகப் பெற்றுக்கொள்ளமுடியுமெனதெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த உர மானியங்களை எதிர்வருகின்ற ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பதாகவே தோட்ட உரிமையாளர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான ஆலோசனைகளை பெருந்தோட்ட அமைச்சு வழங்கியுள்ளமை நோக்கத்தக்கது.



"பெருந்தோட்ட அமைச்சர் நவீன் திஸாநாயக்கவின் வேண்டுகோளுக்கு இணங்கவே 2017ஆம் ஆண்டுக்கான உர மானியமாக ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நிதி வழங்கல் செயற்பாடுகளை முன்னெடுக்க அரசு தீர்மானித்துள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது."


# தொழிற் பயிற்சி நிறுவனங்களை நிறுவ அரசு நடவடிக்கை



அரசு பாகுபாடின்றிய தொழிற் கல்வியைஉயர்த்துவதற்குநடவடிக்கைகளை எடுத்துள்ளதாக கல்வியமைச்சர்அகிலவிராஜ்காரியவசம்தெரிவித்தார்.

குறிப்பாக, "நாட்டில் புதிய தொழிற் பயிற்சிநிறுவனங்களைநிறுவுவதன் ஊடே வினைத்திறனான கல்விச் சேவைகளை வழங்கி அதனூடாக தொழிற் சந்தைக்கு தேவையான அளவுதொழிலாளர்களைஉருவாக்கிக்கொள்ளமுடியும். அதற்கானமுன்னாயத்த நடவடிக்கைகளை அரசு தற்போதுமேற்கொண்டுள்ளது. எந்தவொரு நாடும் வளர்ச்சியடைந்தமைக்குக் காரணம் கல்வியில் ஏற்பட்டபுரட்சியேயாகும்"எனத்தெரிவித்தார்.

# சேவை விஸ்தரிப்பை மேற்கொள்ளும் 'அமேஷான்' நிறுவனம்




உலகிலே அதிகளவான இணைய வழிக் களஞ்சியசாலையை கொண்டுள்ளஅமேஷான்நிறுவனம்முன்னணிஇலத்திரனியல் வர்த்தகத்தை மேற்கொள்ளும் நிறுவனமாகவும் திகழ்ந்து வருகின்றது. அந்தவகையிலே தற்போது தனது பத்தாவது களஞ்சிய சாலையை அமெரிக்காவில் நிர்மாணிக்கவுள்ளதான தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன்தனதுசேவைவிஸ்தரிப்பினைஉலகளாவியரீதியிலே அதிகப்படுத்திக்கொள்ளும்விதமாகபுத்தகவிற்பனையில்இணையம்தாண்டிபௌதிகரீதியானகளஞ்சியசாலைகளை நிறுவி வருகின்றது. தனது முதலாவது புத்தக விற்பனைக்கான களஞ்சிய சாலையை 2015 ஆம் ஆண்டு நிர்மாணித்திருந்தமை நோக்கத்தக்கது.

# 'பொப் அப் சிஸ்டம்' பறக்கும் கார்

### சுற்றுச்சூழலுக்கு மாசற்ற வடிவமைப்பை பெற்றுக்கொண்டுள்ளது.

தொழில்நுட்பத்தின்வளர்ச்சிஅதீதங்கள்மனிதநடத்தைக் கோலங்களோடு இணைந்து பயணிக்கத் தொடங்கிவிட்டன.

அந்தவகையிலே தற்போது வெளிவந்துள்ளதான 'பொப் அப் சிஸ்டம்' (Pop. Up System) என்ற பெயர் கொண்டதான பறக்கும் காரின் வடிவமைப்புகள் வாடிக்கையாளர்களை வெகுவாகக் கவர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுவிட்சர்லாந்தின் தலைநகரான ஜெனீவாவில் அதிநவீன வாகனங்களை அறிமுகப்படுத்தும் கண்காட்சி அண்மையில் இடம்பெற்றிருந்தபோதே மேற்படிகாரின்அறிமுகமும்காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

சிறிய ரக காராக தோற்றமளிக்கும் இந்த 'பொப் அப் சிஸ்டம்' சுற்றுச்சூழலுக்கு மாசுகளை ஏற்படுத்தாத முறையிலே மின்கல சக்தியோடு இயங்கு நிலையை பெறுகின்றது. குறிப்பாக கணினியுடன் இணைக்கப்பட்டதான அதிநவீனதொழில்நுட்பத்துடன் இயங்கும் இந்தக் கார் ஓசையோ, புகையோ இல்லாமல்வீதிகளில்அழகாகவழுக்கிச்செல்கிறது. தவிரவீதிப்போக்குவரத்துநெரிசல்அதிகமாகஇருக்கும் வேளையிலும், செல்ல வேண்டிய தூரத்தை மிக வேகமாகக் கடந்து செல்ல வேண்டும் என்பதான சந்தர்ப்பங்கள் ஏற்படும் போதும் 'ட்ரோன்' எனப்படும் ஆளில்லா விமானம் மூலம் இந்தக் காரை குட்டி விமானமாக மாற்றிப் பறந்து செல்ல



முடிகிறது. வானத்தின்வழியாகபறந்துசெல்வதற்கு இலகுவான பாதை எது என்பதையும் இவையே தீர்மானித்துக்கொள்கின்றன.

விசேடத்துவமாகச் சொல்லப்படுகின்ற மேற்படி செயன்முறைக்காக வானத்தில் வட்டமடித்தபடி உலாவரும் ஆளில்லா விமானம் வீதியில் நிற்கும் 'பொப்அப்சிஸ்டம்'காரின்மேல்அமர்ந்துகொள்கிறது. இந்தக்காரின்மின்கலத்தை ஒருமுறைமின்னேற்றம்செய்வதன்மூலமாகஅண்ணளவாக60கிலோ மீற்றர் தூரத்தை கடந்துசெல்ல முடிகிறது.

மேலும் காரின் உடல் பகுதியை சக்கரங்களில் இருந்து தனியாக பிரித்தெடுத்து பறந்து செல்ல முடியும் என இந்தப் பறக்கும் கார்களைத் தயாரிக்கும் ஆராய்ச்சியில் கூட்டாக ஈடுபட்டுவரும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த எயார்பஸ் மற்றும் இத்தாலி நாட்டைச் சேர்ந்த இட்டால்டிசைன் ஆகிய நிறுவனங்களைச்சேர்ந்தபொறியியலாளர்கள்கூறுகின்றனர்.



# சுற்றுலா

த.கிருபாகரன்

இன்றைய காலகட்டத்தில் குடும்பங்களில் வெடிப்புக்களும், உடைவுகளும், அதிர்வுகளும்மிகையாகஆட்கொள்ளப்பட்ட சூழல் காணப்படுகின்றது. அவசரமான உலகத்தில் ஆர்ப்பரிப்புக்களும் அட்டகாசங்களும் ஆங்காங்கே புரையோடிப் போயுள்ள நிலையில் 'மனித அவலங்கள்' நிரந்தர வைப்பில் வைக்கப்படுகின்றன. இதன் விளைவாக மகிழ்ச்சி என்பது எட்டாத கனியாகப் போய்விட்டதோ என்ற எண்ணப்பாடு ஏங்க வைக்கின்றது. தினமும் நாங்கள் ஏதோ ஒன்றுக்காகஏங்குபவர்களாகஇருப்பது வேதனைகளை வலுப்படுத்தியுள்ளது.

இன்று திருமண வீடு, சாவு வீடு, பூப்புனித நீராட்டு விழா, புதுமனை புகுவிழா, பிறந்த நாள் வீடு, 31ஆவது நினைவுநாள் வீடு என அனைத்து நிகழ்வுகளும் முடிவில் சோகமாகவே முடிகின்றன. இதற்கு எழுச்சி பெறாமல், பகிரப்படாமல் அமுக்கத்தில் இருக்கும் குரூரமான உணர்வுகள் காரணமாகிக் கிடக்கின்றன. குறைந்தது யாரோ ஒருவர் வில்லனாக அல்லது வில்லியாக இருந்து இந்த நிலையை ஏற்படுத்தி விடுகின்றார்கள். "உர்" என்று முகத்தைத் தூக்கிவைத்துக் கொண்டு பிரச்சினைகளை உமிழ்ந்து தள்ளி விடுகிறார்கள். ஏதோ ஒன்றைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு சன்னதம் ஆடுகிறார்கள்.உண்மையில்மகிழ்வுக்காக செய்யப்படும் நிகழ்வுகள் ஏன் மகிழ்வாக வைத்திருக்க முடிய வில்லை என்பதை சிந்திப்பதற்கா கவே இந்த விடயங்கள்பகிரப்படுகின்றன. எங்களில் பலருக்கு மகிழ்வாக இருப்பதற்கே விருப்பம். அப்படியானால் இதைஎப்படிநிலைநிறுத்தலாம்என்றால் அதற்கு சில தயார்ப்படுத்தல்களை நாம் செய்ய வேண்டும்.

எல்லைகளைப் போட்டு, அயலவர்கள் கூட எட்டிப்பார்க்க முடியாத அளவுக்கு காவலரண்கள் அமைத்து தப்பித்தவறி கூட யாரும் வந்துவிடக்கூடாதுஎன்பதற்காககடிநாய்களைச் செல்லப்பிராணிகளாகவளர்த்துஒரு குடும்பக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு ஹலோ என்றோ காலை வணக்கம்என்றோசொல்ல முடியாத அளவுக்கு வார்த்தைகளுக்குவறுமையானநிலைஏற்படுத்தப்பட்டுள்ளது.

முதலில் மனிதர்கள் இந்த மாயையான நிலைக்குள்ளிருந்து உயிர்த்தெழுதல் வேண்டும். இதற்காக சுற்றுலாக்களை ஏற்படுத்துவது சிறந்த தீர்வாகக் கண்டறியப்பட்டுள்ளது. குடும்பங்கள் இணைந்து மேற்கொள்ளும் கூட்டுக்குடும்பச் சுற்றுலாக்கள் பலவிதமான தேடல்களுக்கும் மனநிலை மேம்பாட்டுக்கும் களம் அமைத்துக் கொடுத்துள்ளன. சுற்றுலாக்களின் போது மெய்மறந்துமகிழ்வானசூழல்ஏற்படுகின்றது. கைதடி அரச முதியோர் இல்லத்தின் மூத்தோர்கள் வாரத்தில் இருதடவைகள்வெளிமுதியோர்களுடன் இணைந்து சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகின்றனர். இதன் மூலம் மகிழ்வூட்டல் மற்றும் அனுபவங்களைப் பகிர்வதற்குரிய வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. புது இடங்கள், ரசனைக்குரிய இடங்களைப் பார்க்கும்போது பழைய நினைவுகள் மீட்டப்படுகின்றன. நடத்தையிலும்மனப்பான்மையிலும் மாற்றங்கள் நிகழ்ந்து, சமூக உண்மைகளை ஏற்று வாழக்கூடியமனப்பக்குவம்உணர்வாக்கப்பட்டுள்ளது. தென்பகுதியில் இருந்து வந்து செல்லும் மக்கள் கூட நாளாந்த வாழ்வியலில் இவற்றை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள. நாளாந்தம் வீடுகளில் கூட வெளியில் சென்று வருபவர் ஏகாந்தமாக இருக்க வீட்டில் இருப்பவர்தான்அன்றையபிரச்சினையின் பிரதானியாக இருப்பது கண்கூடாகத் தெரிகின்றது.



பாடசாலைகளில் சிறுவர்கள் ஆசிரியர்களுடன் இணைந்து மேற்கொள்ளும் சுற்றுலாக்களில் கூட அனைத்துப்பிள்ளைகளும்பங்குபற்றுவதில்லை. இதற்கு பெற்றோரின் அனுமதி கிடைக்காமையும் காரணமாகின்றது. "கற்றுணர்தல்"என்பதுமூளையில்நிலைத்திருக்கக்கூடியது. இதற்கானவாய்ப்பாக பாடசாலைச் சுற்றுலாக்கள் அமைகின்றன. கட்டுப்பாட்டுடனானசுற்றுலாஎன்பதுஅவசியம். ஒரு தலைமை வழிகாட்டுவதற்கு அமையும்போது தான் சிறப்பு குடியமர்ந்து கொள்ளும். இளைஞர்களின் சுற்றுலாக்களில் அதீதமான மகிழ்வூட்டல்போக்குகளைநோக்கிய நகர்வுகள் காணப்படுவது தான் பொருத்தப்பாடு அற்றதாகக் காணப்படுகின்றது. சுற்றுலாக்கள் எங்களது துயரங்களைத் துரத்துவதற்கும் அந்த் வெறுமைக்குள் மகிழ்வைக்குடியிருத்திவிடுவதற்கும் ஏற்பாடு செய்வதாக அமைய வேண்டும். இந்த நிலைக்கு ஒருவர் தலைமையேற்க வேண்டும். சுற்றுலாக்களின் காட்சிகள் தத்தமதுமனங்களைப்பேசவைக்கின்றன. சிறப்பான சிந்தனை ஓட்டங்களுக்குவடிகால்களாகஅமைகின்றன. மனங்களைவென்றெடுக்கக்கூடிய பல விடயங்களைக் கண்டுணரக்கூடியதாக சுற்றுலாக்கள் அமைந்து விடுகின்றன.

மூத்தோர்கள் ஆத்மீக சுற்று லாக்களில் 'மெய்மறந்து விடுகின்றார்கள் "மகிழ்வில் இனி நான் செத்தாலும் பரவாயில்லை' என்று மகிழ்வின் உச்சக் கட்டத்தில் கூறும் பொழுது உண்மையில் சுற்றுலாவின் தார்ப்பரியம் உணர்த்தப்பட்டு நிற்கின்றது. விலங்குகளில் சிரிக்கத்தெரிந்தபிராணிமனிதன் மட்டும் தான். இப்படியான மனிதன் மகிழ்வை சுற்றுலாவில் பெற்று வாய் நிறையச் சிரிக்கின்றான் என்ற உண்மை ஏற்றுக் கொள்ளப்படவேண்டியதொன்றாகும்.

பண்டைய காலங்களில் நாடோடி வாழ்க்கையில் மகிழ்வு கிடைத்தமையால் குடும்பங்கள் இடர்ப்படவில்லை. நாட்டுச் சூழலின் போர் வேளையில் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் கூட ஒரு வகையில் வலிந்த சுற்றுலாக்களாக அமைந்தன. அவ்வேளையில்கூடகுடும்பங்கள் குறிப்பிடத்தக்களவுக்கு மகிழ்வைக் காவு கொள்ளவில்லை. நிரந்தர வீடமைக்க நேரமில்லை என்று எப்போது நாகரிகமாக கூறத் தொடங்கப்பட்டதோ அன்று முதல் மகிழ்வுக்கு குடும்பங்களில் ஆப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆப்பு நிலை நீங்கி "மூப்பு" நிலை அடைவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதும் காலத்தின் தேவையாக உள்ளது மூத்தோர்கள், சிறுவர்கள், இளைஞர்கள் அனைவருமே சமூகத்தின் காத்திரமானபங்குதாரர்கள். இவர்கள் "குடும்பம்" என்ற கட்டமைப்புக்குள் வட்டமடிக்கும் போதுதான் கனதியான சுமைகள் குடியேறிக் கொள்கின்றன. பார்ப்பது, ரசிப்பது, சிரிப்பது, மகிழ்வது இவை சுற்றுலாக்களின் பிரசவிப்புக்களாக இருக்கின்றன. இவற்றின் தரிசிப்புக்கள் தான் நிஜ மகிழ்வூட்டலுக்கு திடசங்கற்பமானவைஆகின்றன. குடும்பக் கட்டமைப்பிலிருந்து தற்காலிக வெளியேறுகை, உள்வருகை, செயற்பாட்டுக்காக "சுற்றுலா" என்ற கருவி உருவாக்கப்பட்டுள்ளது.

மனிதனுக்குஓய்வுதேவை. ஓய்வு வேறு சூழலில் ஏற்படுத்தப்படும் போது முழுமையான நிம்மதி கிடைக்கின்றது. ஒவ்வொரு குடும்பமும் வெளியில் போய்வருவது தேவையான ஒன்று. இதற்காகத்தான் பல காலங்களில் பல வித திருவிழாக்கள் என ஆலயங்களில் நிகழ்வுகள் மூதாதையர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திருவிழாக்களுக்காக சுற்றுலா போவதுஎன்பதுஎல்லாம்ஆரோக்கியமான விடயங்கள்.

ஒருவர் ஆடலாம், பாடலாம், கதைக்கலாம். ஆனால், சிரிக்கின்றாரா என்பதே முக்கியமானது அழும்போது இயங்கும் நரம்புகளை விட சிரிக்கும்போது பல நரம்புகள் வேலை செய்கின்றன. இது கூட உடலியல் ரீதியில் ஆரோக்கியமானதே. காட்டுப்பிரதேசம், மலைப்பிரதேசம், கடற்கரைப்பிரதேசம், பாலைவனப்பிரதேசம் இவற்றைநோக்கியநாடல்களில்சுற்றுலாக்களின்தேடல்கள் காணப்படுகின்றன. அண்மையில் சினிமாப்பாடல்களை துவிச்சக்கர வண்டியில் ஒலிக்கவிட்டபடி ஊர் சுற்றியாக வலம் வரும் ஓர் அன்பரைச் சந்தித்தேன். "அலங்கரித்த துவிச்சக்கர வண்டியில்சுற்றுவதுதான்பிரதானமல்ல. இறை பணிக்காகப் பயணிக்கின்றேன். இரவுவேளைகளில்பொது இடங்களிலும் தெரிந்தவர்களுடனும்தங்குகின்றேன்" என்று அவரது வார்த்தைகள் கனதியாகிக் கொள்கின்றன. முகத்தில்மிகப்பெரியபிரகாசமும்தெரிகின்றது.

இவ்வாறாக சுற்றுலாக்கள் ஏழ்மையிலும்நேர்மையை தந்து கோபத்திலும் பொறுமையை வென்று தோல்வியிலும் விடாமுற்சியைத் தந்து, வறுமையிலும் உதவி செய்யும் மனதை ஏற்படுத்தி, துன்பத்திலும் துணிவுதந்து, செல்வத்திலும்எளிமையாக வாழும் நிலையுடன் பதவியிலும் பணிவைக் காத்திடும் கைங்கரியத்தை ஏற்படுத்தும். குடும்பங்களில் மகிழ்ச்சியைத் தேடிக்கொண்டிருக்கும் நாங்கள் இயற்கையை நேசித்தால், இறுக்கமாக கட்டப்பட்டிருக்கும் எங்களது தற்பெருமைகள் இல்லாமல் போகலாம். இதன் மூலம் யதார்த்தங்களை உள்வாங்கும் கொள்கைகளும் மறுபரிசீலனைக்கு உட்படுதப்படலாம் என்ற நம்பிக்கையில் இனியேனும், ஏன் முன்னேறிப்பாய்ச்ச லில் ஈடுபடக் கூடாது.

*கட்டுரையாளர்: அத்தியட்சகர், அரச முதியோர் இல்லம், கைதடி.*

> மூத்தோர்கள் ஆத்மீக சுற்றுலாக்களில் மெய்மறந்து விடுகின்றார்கள் "மகிழ்வில் இனி நான் செத்தாலும் பரவாயில்லை என்று மகிழ்வின் உச்சக் கட்டத்தில் கூறும் பொழுது உண்மையில் சுற்றுலாவின் தார்ப்பரியம் உணர்த்தப்பட்டு நிற்கின்றது. விலங்குகளில் சிரிக்கத் தெரிந்த பிராணி மனிதன் மட்டும் தான். இப்படியான மனிதன் மகிழ்வை சுற்றுலாவில் பெற்று வாய் நிறையச் சிரிக்கின்றான் என்ற உண்மை ஏற்றுக்கொள்ளப் பட வேண்டியதொன்றாகும்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# ராப்பின் பரிந்துரைகள் ஐ.நா. தீர்மானத்தில் சேர்க்கப்படவேண்டும்

ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நாளை மறுதினம் நிறைவேற்றப்படவுள்ளது. இந்தத் தீர்மானம், 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இலங்கையை வலியுறுத்துவதாக மட்டுமே பெரும்பாலும் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்காக மீண்டும் ஒரு தடவை இலங்கைக்கு 2 வருட கால அவகாசம் வழங்கப்படவுள்ளது.

கொழும்புக்கு மீண்டும் கால அவகாசம் வழங்கப்படுவதாக இருந்தால் கடும் நிபந்தனைகள் விதிக்கப்படவேண்டும் என்று தமிழர்கள் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த அழைப்பு மனித உரிமைகள் சபை உறுப்பு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதேபோன்று 30/1 தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தவுள்ளதற்போதையதீர்மானத்தில் இருந்து “முழுமையாக” என்ற சொல்லை நீக்குவதற்குக் கொழும்பு எடுத்த முயற்சியும் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பின் அந்தக் கோரிக்கையை நிராகரிப்பதற்காகவே தமிழர்கள் சார்பில் முன்வைக்கப்பட்ட கடும் நிபந்தனைகள் என்ற கோரிக்கை பலியிடப்பட்டதாக ஜெனிவாத் தகவல்கள் கூறுகின்றன. “முழுமையாக” என்ற வாசகத்தை நீக்குவதாக இருந்தால் தமிழர் தரப்புக் கேட்கும் கால அட்டவணை மற்றும் நெருக்கமான கண்காணிப்பு என்பவற்றையும் தீர்மானத்தில் உள்ளடக்க வேண்டி வரும் என்று கொழும்புடன் ஜெனிவாவில் பேரம் பேசப்பட்டுள்ளது. அதன் பின்னரே தீர்மானம் அனேகமாக மாற்றங்கள் ஏதுமின்றி நிறைவேற்றப்படும் என்பது உறுதியாகி இருக்கிறது. அதற்குக் கொழும்பு மீண்டும் இணை அனுசரணையும் வழங்கவுள்ளது.

ஆனால், தீர்மானத்தில் உள்ளடக்கக்கேட்டு தமிழர்கள்தரப்பால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் எவ்வளவு நியாயமானவை என்பதையும் அவற்றின் அவசியத்தையும் எடுத்தியம்புகிறது போர்க் குற்றங்கள் தொடர்பான சிறப்பு வல்லுநர் ஸ்ரீபன் ராப்பின் பிந்திய அறிக்கை.

அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமாவின் ஆட்சியில், போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான சிறப்பு அறிக்கையாளராக அந்த நாட்டில் பணியாற்றியவர் ஸ்ரீபன் ராப். தனது பதவிக் காலத்தில் அவர் யாழ்ப்பாணம் வரைக்கும் வந்து நிலமைகளை நேரில் பார்த்துச் சென்ற ஒருவர். கள யதார்த்தம் அவருக்கும் புரியும்.

தனது அறிக்கையில் அவர் மூன்று முக்கிய விடயங்களைக் குறிப்பிட்டிருக்கிறார். முதலாவது, பொறுப்புக்கூறலை நடைமுறைப்படுத்துவதற்கான தனது அர்ப்பணிப்பை குறிப்பிடத்தக்க கால அட்டவணை மற்றும் தெளிவான இலக்குகள் மூலம் கொழும்பு வெளிப்படுத்த வேண்டும். இரண்டாவது, சிறப்பு வழக்குத் தொடுநர் அலுவலகத்தை உடனடியாக உருவாக்கவேண்டும். அதாவது, கலப்பு நீதிமன்றம் அமைக்கப்படுவது பின்னராக இருந்தாலும்கூட அதற்கிடையில் வழக்குத் தொடுநர் அலுவலகத்தை அமைத்து சாட்சியங்களைப் பதிவு செய்வதுடன் ஆதாரங்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். அதற்காக வழக்குத் தொடுநர் அலுவலகம் தனது பணியை இப்போதே ஆரம்பிக்க முடியும். மூன்றாவது, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் பாதுகாப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டும். அதுவும் உலகத் தரத்துக்கான சட்டங்களாக அவை இருக்கவேண்டும்.

தமிழர் தரப்பு இதில் முதலாவதை மட்டுமே தனது கடும் நிபந்தனையாக முன்வைத்திருந்தது. ராப் அதனையும் தாண்டிச் சென்று நீதியை நிலைநாட்டுவதற்கு, நிலைமாறு கால நீதிக்கான பொறிமுறையை ஏற்படுத்துவதற்கு உண்மையில் செய்ய வேண்டியவைகளைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

ஜெனிவாவில் தற்போதுள்ள சூழலில் அவரது பரிந்துரைகள் தீர்மானத்தில் உள்ளடக்கப்படுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனாலும், இலங்கையில் நடந்த குற்றங்கள் தொடர்பில் இந்த உலகம் உண்மையாகவே மனச்சாட்சிப்படி நடந்துகொள்கிறது என்றால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அதன் நோக்கத்துக்காகவே அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்றால், தீர்மானத்தில் இந்தப் பரிந்துரைகளையும் உள்ளடக்க வேண்டும்.



# நாவற்குழி வீடமைப்புத் திட்டப் பணிகள் துரிதப்படுத்தப்படுமா?

## குடியிருந்த வீடுகளையும் அழித்துவிட்டு சிரமத்தோடு காலம் தள்ளும் குடியிருப்பாளர்கள்

ந.லோகதயாளன்

“தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள்காலம் மந்தைகள் போன்று, மாட்டுத் தொழுவத்தை ஒத்த கொட்டகைகளிலாவது ஓரளவு நிம்மதியாக வாழ்ந்து வந்த நாம், அதிகாரிகளின் வெற்று வாக்குறுதியை நம்பியதால் ஒதுங்கியிருந்த கொட்டகைகளையும் இழந்து தவிக்கிறோம். எமது இந்த அவல நிலையைப் போக்க அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும் என்பதே இன்று எம் அனைவரினதும்பிரார்த்தனையாகவுள்ளது.”

யாழ்ப்பாணம் நாவற்குழியில் கடந்த 5 ஆண்டுகளாக வாழும் 200 தமிழ் குடும்பங்களுக்கும் 50 சிங்களக் குடும்பங்களுக்கும் நிரந்தவீடுகள் அமைத்து தருமாறு கோரியபோதிலும், அதில் 50 சிங்கள குடும்பத்தவர்களுக்கு மட்டும் நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்க முயன்றதனால் மக்கள் போராட முனைந்தனர். இதனையடுத்து மொத்தமான 250 குடும்பங்களுக்கும் நிரந்தர வீடுகள் அமைத்துத் தருவதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக வாக்குறுதியளிக்கப்பட்டது. இவ்வாறு அளிக்கப்பட்ட வாக்குறுதியை நம்பித் தாம் வாழ்ந்த தற்காலிக வீடுகளை உடைத்தே நிரந்தர வீடுகளுக்கான அத்திபாரம் அமைக்க நிலத்தை ஒழுங்குபடுத்தி வழங்கினர் அந்த மக்கள். ஆனால் இன்று அவர்களது தற்காலிக வீடும் இல்லை. நிரந்தர வீட்டுக்கான முயற்சி முன்னெடுக்கப்படுவதாகவும் தெரியவில்லை.

இவை தொடர்பில் நாவற்குழி வீட்டுத் திட்டத்தில் வசிப்போர் மனம் வருந்தி வெளியிட்ட மன ஆதங்கங்களை அடுத்து உண்மை நிலையைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் ஊடகவியலாளர்கள் தரப்பொன்று அப்பகுதிக்கு நேரில் சென்று அவதானித்தபோது அப்பகுதி மக்கள் பலர் தமது கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து கொண்டனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட இரண்டு பிள்ளைகளின் தாயாரும், நிரந்தர வீட்டுக்கான அத்திபாரக் கல் நாட்டப்பட்ட வீட்டின் உரிமையாளருமான திருமதி. யோகேஸ்வரன் சியாமளாதேவி. (வயது 38) என்பவர்:



“இந்தப் பிரதேசத்தில் கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் தற்காலிக வீடுகளை அமைத்து வாழ்ந்து வந்தோம். அவை ஒவ்வொன்றும் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியானவை. இந்த நிலையில் நீண்டகாலத்தின் பின்னர் எமக்கு நிரந்தர வீடுகள் அமைத்து தருவதாகத் தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் கூறினர். பெறுமதியும் 5 லட்சம் ரூபா எனக் கூறினர். 5 லட்சம் ரூபா பெறுமதியான வசதிான வீடு கிடைக்கிறதென நம்பி, நாம் சிரமப்பட்டுக் கட்டிய ஒரு லட்சம் ரூபா பெறுமதியான வீட்டையும் நாமே இடித்தழித்து விட்டுத் தவிக்கின்றோம். இவ்வாறு காலம் கடத்துவார்கள் எனத் தெரிந்திருந்தால் எமது வீட்டை உடைப்பதற்கே சம்மதம் தெரிவித்திருக்கமாட்டோம்



எனக்கவலைப்பட்டார்.

இதேபோன்று கைப்பிள்ளையுடன் தமது தற்காலிகக் கொட்டில் வீட்டின் முற்றத்தில் நின்ற ராபிக் துர்க்கா (வயது-28) என்னும் இரு பிள்ளைகளின்தாயார்தெரிவிக்கையில்; எனது கணவர் கூலிவேலைக்கே செல்பவர். இந்த நிலையில் வீடமைப்பு அதிகார சபையினரது வாக்குறுதியை நம்பி, நாம் குடியிருந்த வீட்டையும் உடைத்துவிட்டு, கொழுத்தும் வெய்யிலில் நான்கு தகரத்தின் கீழ் மணலில் சமைக்கவும் முடியாமல் சாப்பிடவும் முடியாமல் தவிப்பது மட்டுமன்றி, இரவில் நிம்மதியாகப் படுத்துறங்கக் கூட முடியாத நிலையில் இரண்டு சிறு பிள்ளைகளுடன் தினமும் கண்ணீருடன் வாழும் நிலமையை எமக்கு ஏற்படுத்தியுள்ளனர் எமது அதிகாரிகள்.

எமது நோக்கம், எவரையும் குறை கூறுவது அல்ல. எமது தேவையையும், எமக்கு ஏற்படுத்தப்பட்ட இக்கட்டையும்வெளியில்கூறிஎமக்கானபாதுகாப்பான இல்லிடத்தைப் பெறுவது மட்டுமேஎமது நோக்கம் என்றார்.

இவ்வாறு அந்தப் பகுதியைப் பார்வையிட்டுச் சென்ற சமயம் இன்னுமோர் மாறுபட்ட தன்மை கொண்ட வீடொன்றை அவதானித்தோம். வீட்டின்கிணற்றோரம்நின்றிருந்ததம்பதியினரில் கணவர் எம்மைக் கண்டதும் தனது ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்தார்.

அதன் பின்பு குடும்பத் தலைவி எம்மைநோக்கிவந்து, 'அவர் சுகவீனமானவர் நீங்கள் வாருங்கோ' என எம்மை அழைத்துச் சென்று தமது இருப்பிடத்தின் நிலையை நேரில் காண்பித்த அற்புதராயா டொரக்மேரி (வயது-50) என்னும் அந்தப் பெண்மணி தனது நிலமையை விபரிக்கையில்,

"மனநோயாளியான எனது கணவருடனும் நான்கு பிள்ளைகளுடனும் வாழ்கின்றேன். இதில் மூவர் பெண் பிள்ளைகள். மூவருமே பெரியவர்கள். இருந்த வீட்டையும் உடைத்துவிட்டமையால்இன்றுபெண்பிள்ளைகளை வீட்டில் வைத்திருக்க முடியாத அவல நிலமையில் உள்ளேன். அதனால் இரு பெண் பிள்ளைகளும் இரவில் அடுத்த வீட்டில் படுத்துறங்கும் அவலமே இடம்பெறுகின்றது. நல்லவேளை, அடுத்த வீட்டுக்காரர்கள் தமது வீட்டை உடைக்காமல் வைத்திருந்தமையினால் இந்த உதவி கிட்டுகின்றது. இந்த இடத்தில் இரவில் மழை பெய்யும்போது எல்லாம் எழுந்து நிற்க வேண்டிய நிலமையே காணப்படுகின்றது.

இந்தப் பிரச்சினைகளுக்கும் அப்பால் இந்த அதிகாரிகள் இனியாவது வீட்டை அமைத்துத் தருவார்களா? அல்லது தரவே மாட்டார்களா என்பதனையாவது உறுதிபடத் தெரிவித்தால், நாம் வேறு ஏதாவது வழியொன்றைத் தேடிக்கொள்ள முடியும். இவ்வாறான பாதுகாப்பற்ற வாழ்க்கை வேறு எவருக்கும் அமையவேகூடாது என்றார்.

இவை அனைத்தையும் தாண்டிச் சென்றபோது, எமது கண்ணில் தென்பட்ட ஒரு பெண்மணியின் நிலமை நெஞ்சை உருக்கியது. வின்சன் மாகிரேட் அல்லது வனிதா என்னும் 50 வயதையுடைய அந்தப் பெண்மணி ஒரு முன்னாள் போராளி. 1996ம் ஆண்டு இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு 9 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டதன் காரணமாக ஒரு கை, ஒரு கால் மற்றும் ஒரு கண் என அவயவங்கள் பாதிப்புற்ற நிலையில் இரு பிள்ளைகளுடன் வாழும் அவரது நிலமை குறித்துத் தெரிந்து கொள்ளும் நோக்கில் அவரிடம் பேச்சுக் கொடுத்தோம்.

இவ்வாறு கால் இயலாத நிலமையில், இருப்பிடமும் இல்லை. இருந்து எழும்ப முடியாத எனக்கு, ஒரு கழிப்பறை வசதிகூட இல்லை. இந்த கழிப்பறைவசதியையாவது செய்துதாருங்கள் என சாவகச்சேரி பிரதேச செயலாளரின் காலில் வீழ்ந்து அழுதேன்.

அதற்கும் அவரது மனம் இரங்கவில்லை. இப்போது எனக்கு உள்ள நிலைவாழ்வதா அல்லது சாவதா என்பதே. வாக்களிக்கும்படி கேட்க வரும் போது மட்டும், சகலரும் எம்மை கும்பிட்டு வருகின்றனர். ஆனால் இன்று நாம் கும்பிடாத அரசியல்வாதிகளே கிடையாது. ஆனால் எவருமே இது வரை எமக்க உதவ எண்ணவில்லை. ஒரு சிலர் மட்டும் ஊடகங்களுக்கு முகம் காட்டுவதற்காக வந்து போகின்றனர் என்றார்.

இவை தொடர்பில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் ரவீந்திரனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,


இந்தப் பிரதேச வீட்டுத்திட்டத்திற்காக அனைத்துப்பணிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு தற்போது நிதியும் கிடைத்துள்ளது. இதனால் இவர்களுக்கான கல், மணலுக்கான ஏற்பாடுகளைக் கவனித்து வருகின்றோம்.


அத்தோடு இவர்களுக்கான சிமெந்தும் அடுத்த வாரம் கொழும்பில் இருந்து எடுத்து வரப்படவுள்ளது. இதனால்விரைவில்வீடுகளைஅமைத்து வழங்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது- என்றார்.

குறித்த விடயம் தொடர்பில் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

குறித்த வீட்டுத்திட்டம் தொடர்பில் தற்போது நாமும் கவனம் செலுத்துவதோடு, உடனடியாக அவற்றை அமைத்து வழங்குமாறு அறிவுறுத்தியுள்ளோம். அவர்களுக்கான மூலப் பொருள்களை தடையின்றிப் பெற்றுக்கொடுக்கஎமதுதரப்புநடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது.

அவசர முடிவினால், அவர்கள் வாழ்ந்து வந்த இருப்பிடத்தையும் அழித்துவிட்டு, காரணத்தை தேடுவது பொருத்தமற்றதே. அதனால் உடனடியாகவே குறித்த திட்டம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என்றார்.





# வாசகர் திருமுகம்

## வருமுன் காக்க முனைவோம்

எத்தகைய கஷ்டத்தையும் வருமுன் காக்க முனைவது புத்திசாலித்தனமானது; கடும் சிரமமின்றிப் பயனைத் தரக் கூடியது. எமக்குத் தீங்கு பயக்கவல்லவற்றைத் தவிர்த்து எச்சரிக்கை உணர்வுடன் செயற்பட்டால் கஷ்டங்களை, சிரமங்களை முடிந்த அளவுக்குக் குறைத்துக் கொள்ள எம்மால் இயலும்.

சமூகத்தின் ஒரு அங்கமான நாம் ஒவ்வொருவரும், சமூக நல நோக்குச் சிந்தனையுடனும் செயற்பட வேண்டியுள்ளது. ஆயினும் பாதிப்பு ஏற்படும் போது மட்டும் அதிலிருந்து விடுபட அக்கறை காட்டும் நாம், குறுகிய காலத்துக்குள் அந்த அக்கறையைக் கைவிட்டு மனம் போன போக்கில் செயற்பட விழைகிறோம்.

சுற்றுச் சூழல் சுகாதாரம் பேணல், பாதீனியப் பரவலை ஒழித்தல், பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனைகளைத் தவிர்த்தல் போன்ற செயற்பாடுகளில் பொறுப்பான தரப்பினர்கள் எவ்வளவுதான் விழிப்புணர்வை எம்மத்தியில் ஊட்ட கடும் முயற்சி மேற்கொண்டாலும், நாம் அவை குறித்து அலட்சியப் போக்குடனேயே செயற்பட முனைகிறோம்.

அண்மைக்காலமாக எமது மக்களை அச்சுறுத்தி வரும் டெங்கு நோய்ப் பரவல் குறித்து, அதனது பரவல் வீரியம் பெற்று சமூகமட்டத்தில் உயிரிழப்புக்களை ஏற்படுத்த ஆரம்பித்துள்ள இன்றைய காலகட்டம் வரை எம்மில் பெரும்பாலானோர் அதனால் ஏற்படத்தக்க ஆபத்துக் குறித்து அக்கறை காட்டவில்லை. அது எம்மைப் பாதிக்கும் முன்னர் வருமுன் காக்கும் முன்னெச்சரிக்கைச் செயற்பாடுகளில் அக்கறை செலுத்தத் தவறியுள்ளோம். இன்று அதன் தாக்கம் உயர்வடைந்துள்ள நிலை கண்டு அஞ்சி நடுங்கி வருகிறோம்.

இந்த வேளையிலாவது சுகாதாரப் பகுதியினர் மேற்கொள்ளும் டெங்கு நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு சமூகத்தின் பொது நலன் கருதி நாமும் முழு ஒத்துழைப்பு வழங்கிச் செயற்பட முன்வர வேண்டியது இன்றைய காலத்தின் முக்கிய தேவையாக ஆகியுள்ளது.

எமது இந்தப் பொறுப்பை உணர்ந்து டெங்கு நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செயற்படும் சுகாதாரத் துறையினருக்கு நாமும் முழு ஒத்துழைப்பு வழங்கி இந்த ஆபத்திலிருந்து எம்மையும் எமது சமூகத்தையும் பாதுகாக்கும் வகையில் செயற்பட முன்வருவோமே!

ப.கணேஸ்வரன்
கோப்பாய்

# நயன்தாராவின் இடத்தில் தமன்னா

சினிமாவில் பேசப்படும் நடிகையாகிவிட்ட நயன்தாரா தொடர்ந்து கதாநாயகிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் படங்களில் நடிக்கத் தொடங்கியிருக்கிறார்.

அப்படி நயன்தாரா நடித்து வரும் படங்களில் ஒன்று தான் 'கொலையுதிர்காலம்'. இந்தப் படத்தை 'பில்லா2', 'உன்னைப்போல் ஒருவன்' ஆகிய படங்களை இயக்கிய சக்ரி டோலட்டி இயக்குகிறார். இந்தப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாகச் சென்றுகொண்டிருக்கும் நிலையில், இந்தப் படத்தை இந்தியிலும் வெளியிடவிருக்கின்றனர்.

இந்தி வெளியீட்டை சக்ரி டோலட்டியே இயக்கவிருக்கிறார். ஆனால், தமிழில் நயன்தாரா நடித்த வேடத்தில் தமன்னா நடிக்க ஒப்பந்தமாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.



மேலும், அந்தப் படத்தின் வில்லனாக பிரபுதேவா நடிக்கப்போவதாகவும் செய்திகள் வெளியானது. பிரபுதேவா அண்மைக்காலமாகஇயக்கும்பணியை விட்டுவிட்டு நடிகர், தயாரிப்பாளர் என களமிறமிங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




அடையாள அட்டை தேவையில்லை வங்கி அட்டை தேவையில்லை தினமும் எத்தனை முறைவேண்டுமானாலும் பணம் போடலாம், எடுக்கலாம்...
சேவை கட்டணங்கள் கிடையாது



இனி நம்ம வங்கி இது தான்
விடுமுறை என்பதே கிடையாது

முப்பதாயிரம் ரூபா கட்டணத்தை வாங்கியிட்டு
கேட்பானுக பாருங்க ஒரு கேள்வி



உங்க புள்ளை ஏன் சரியா
படிக்கலைன்ன...? ங்கொய்யால

பைக்ல வேகமா போயிட்டு இருக்கும் போது...
யாருண்ணே தெரியாத ஒருத்தர்
முடக்கில பொலிஸ் நிக்குது மெதுவா போ
சொல்லுறாங்க பாருங்க...




அவர் தாங்க கடவுள்...!

**கோழியின் கிறுக்கல்!!**
'இது உண்மையாக இருந்துவிடக்கூடாது' என்றும், 'இது பொய்யாக இருக்ககூடாது' என்ற தருணத்தையும் அனைவரும் கண்டிப்பாக கடந்திருப்போம்!
11 122 132

பிச்சைக்காரன் :பணம் சம்பாதிக்க ஆயிரம் வழிகள் என்ற புத்தகத்தை எழுதியது நான் தான்..!
ஒருத்தன்: பிறகு ஏன் பிச்சை எடுக்கிறாய்..?
பிச்சைக்காரன் : அந்த ஆயிரம் வழிகளில் இதுதான் முதல் வழி...



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** குடும்பசிரமத்தைப்பிறரிடம்சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சிதேவைப்படும். லாபம்சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம்.

**இடபம்:** ஆர்வமின்றி பணியில் ஈடுபட நேரலாம். குடும்பத்தினரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியா பாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் செலவுக்கு பணமின்றி திண்டாடுவர்.

**மிதுனம்:** வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சியால் லாபம் உயரும். சேமிக்க வாய்ப்புண்டு. பணியாளர்களுக்கு சலுகைகிடைக்கும். ஆரோக்கியம்மேம்படும்.

**கடகம்:** வாழ்வில்இனியஅனுபவம்காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில்அபரிமிதமான வளர்ச்சி உருவாகும். லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**சிங்கம்:** நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபாரத்தில்எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் சுதந்திர உணர்வுடன் பணியாற்றுவர். வாகனப்பயணத்தில் மிதவேகம்நல்லது.

**கன்னி:** மனதில் இனம் புரியாத குழப்பம் உருவாகலாம். குடும்பத்தினரின் ஆலோசனை நல்வழி காட்டும். தொழில், வியாபாரத்தில்லாபம்ஓரளவுகிடைக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செலவு செய்வர்.

**துலாம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில்வியாபாரத்தில் இருந்த போட்டிபெருமளவில்குறையும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். பணியாளர்கள் பாராட்டு வெகுமதி பெறுவர்.

**விருச்சிகம்:** பேசுவதில்நிதானம்பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். நிலுவைப்பணிகளை விரைந்து முடிப்பது நல்லது.

**தனுசு:** நேர்மையுடன் செயற்பட்டு வருவீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். மனைவிவிரும்பியபொருளை வாங்கித் தருவீர்கள்.

**மகரம்:** திட்டமிட்டு பணியாற்றி வெற்றி காண்பீர்கள். தொழில் வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்தசலுகைகிடைக்கப்பெறுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**கும்பம்:** பேச்சால்மற்றவரைகவர்ந்திழுப்பீர்கள். எதிரி இடம் மாறி போகும் சூழல் உருவாகும். தொழில், வியாபாரத்தில்தாராளபணவரவு கிடைக்கும். பெற்றோர் உடல்நிலை சீராகும்.

**மீனம்:** சமூகத்தில் அந்தஸ்து உயரும். முக்கியஸ்தரின் உதவி தேடி வரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | | | | 7 | | |
| 5 | | | 4 | 6 | | 1 | | |
| | | | | 2 | | | 4 | |
| | 4 | | 3 | | | | 9 | 1 |
| 6 | | | | | | | | 8 |
| 2 | 9 | | | | 8 | | 7 | |
| | 1 | | | 9 | | | | |
| | | 4 | | 8 | 3 | | | 5 |
| | | 6 | | | | | 2 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 1 | 4 | 9 | 7 | 8 | 6 | 2 |
| 9 | 6 | 4 | 5 | 2 | 8 | 7 | 1 | 3 |
| 7 | 2 | 8 | 1 | 3 | 6 | 4 | 5 | 9 |
| 8 | 9 | 7 | 3 | 5 | 4 | 1 | 2 | 6 |
| 3 | 1 | 5 | 6 | 7 | 2 | 9 | 4 | 8 |
| 6 | 4 | 2 | 9 | 8 | 1 | 3 | 7 | 5 |
| 1 | 7 | 9 | 8 | 6 | 5 | 2 | 3 | 4 |
| 4 | 5 | 3 | 2 | 1 | 9 | 6 | 8 | 7 |
| 2 | 8 | 6 | 7 | 4 | 3 | 5 | 9 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

உடல் வெப்பத்தைப் தவிர்க்கும் முறையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான ரீசேர்ட்கள் தற்பொழுது விற்பனையிலுள்ளன. தலையை மூடிய வகையிலும் அணிந்து கொள்ளலாம். இவை ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து ஆயிரத்து 700 ரூபாவரை விற்பனை செய்யப்படுகின்றன.

## இது புதுசு





# 2017 நீங்கள் பிறந்த கிழமை உங்களுக்கு எப்படி?


## புதன்

இந்தக் கிழமையில் பிறந்தவர்கள் நல்ல அறிவாளிகளாகத் திகழ்வார்கள். இயந்திரம் திருத்துதல், வைத்தியம், சோதிடம், துப்பறியும் கலை, ஓவியம் ஆகியவற்றில் திறமைசாலிகளாக விளங்குவர். இரகசியம் காப்பதில் வல்லவர். மற்றவர்களின் மனதில் உள்ளதைத் துல்லியமாக அறிந்து அதற்கேற்பசெயற்படுவார்கள். பலதுறைகளில்தேர்ச்சிபெற்றவர்கள். மருத்துவர், நீதிபதி, பொறியியலாளர், எழுத்தாளர் என்று உயர்ந்த நிலையில் வாழ்வார்கள்.

**நல்லன அருளும் திகதிகள்:**
5, 14, 23 ஆகிய திகதிகள் புதிய முயற்சிகளைத் துவங்கினால் வெற்றி கிடைக்கும்.

**ஏற்றமிகு வயது காலங்கள்:**
23, 32, 41, 50, 59, 68 ஆகிய வயதுகளில் நல்ல முன்னேற்றம் உண்டு.
வளம் தரும் கிழமை: வியாழன்

**பரிகார வழிபாடு:**
புதன்கிழமை அதிகாலையில் எழுந்து நீராடி துளசி மற்றும் மருக்கொழுந்தால் மகா விஷ்ணுவை வழிபடலாம். மேலும் விஷ்ணு சகஸ்ரநாமம், கிருஷ்ணாஷ்டகம் பாராயணம் செய்வதும் சிறப்பு. பாசிப்பயறு சுண்டல் செய்து நைவேத்தியம் செய்தல் நலம்.






## வரலாற்றில் இன்றைய தினம்

### 21.03.2017

630 -பேரரசர் ஹேர்குலிஸ் கிறிஸ்தவர்களின் புனித எச்சங்களில் ஒன்றானஉண்மையானசிலுவையை ஜெருசலேத்திடம் கையளித்தார்.
1804- நெப்போலியனின் நடத்தைக் கோவை பிரான்ஸின்சிவில்சட்டமாகபின்பற்றத்தொடங்கப்பட்டது.
1844 -பாஹாய் நாள்காட்டி தொடங்கப்பட்டது. இதற்கமைய இன்றைய தினம் பாஹாய் புதுவருடமாக, ஆண்டின் முதல் நாளாக உறுப்பினர்களால் கொண்டாடப்படுகின்றது.
1913 -டேற்றோன்ஒகியோவெள்ளப்பெருக்கில்360 பேர் உயிரிழந்ததுடன் 20,000வரையான வீடுகள் அழிவடைந்தன.
1919-ரஷ்யா ஒக்ரோபர்புரட்சியின்பின்னர் ஐரோப்பியாவில் முதல் கம்யூனிஸ்ட் அரசாக ஹங்கேரியன் சோவியக் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டது.
1925-ரென்னசியில்மனிதகூர்ப்புக்கொள்கையை கற்பிப்பதற்கு தடை செய்யும் பட்லர் சட்டம் கொண்டுவரப்பட்டது.
1933- நாஸிகளின் முதல் வதை முகாமான டாச்சு நிர்மாணம் நிறைவடைந்தது.
1935 - ஈரானின் ஷா றெஷா ஷா பெலாவி பன்னாட்டு சமூகத்திடம் பேர்சியாவை அதனது சொந்தப்பெயரான ஈரான் என அழைக்குமாறு முறைப்படி கேட்டுக் கொண்டார்.
1945 -இரண்டாம் உலகப்போர்; பர்மாவின் மண்டலேயைபிரித்தானியதுருப்புக்கள்விடுத்தனர்.
1960 -தென் ஆபிரிக்காவில் பொலிஸார் நிராயுதபாணிகளானதென்ஆபிரிக்ககறுப்பின ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது மேற்கொண்ட கண்மூடித்தனமானதுப்பாக்கித்தாக்குதலில்69பேர் உயிரிழந்ததுடன்180 பேர் காயமடைந்தனர்.
1965-டாக்டர் மார்டீன் லூதர் கிங் அலபாமாவில் செல்மாவிலிருந்துமொன்கோமரிவரை3200 மக்களுடன்தனதுமூன்றாவதும்நிறைவுமான சிவில்உரிமைப்பேரணியைத்தொடங்கினார்.
1970-சான்ஸ் பிரான்சிஸ்கோ மேயர் யோசப் அலியோற்றாவால் முதலாவது புவிதின தீர்மானம் வெளியிடப்பட்டது.
1980 -ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியனின் போருக்குஎதிர்ப்புத்தெரிவித்து மொஸ்கோவில் நடைபெற்ற1980கோடைகாலஒலிம்பிக்போட்டியைப் பகிஷ்கரிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் அறிவித்தார்.
1990-75 ஆண்டுகால தென்னாபிரிக்க ஆட்சியில் இருந்து நமீபியா சுதந்திரம் பெற்றது.
1994 -ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பான பட்டலம் நடைமுறைக்கு வந்தது.
2000-இரண்டாம் ஜோன் போல் பாப்பரசர் இஸ்ரேலுக்குப் பயணம் மேற்கொண்டார். இஸ்ரேலுக்கு பாப்பரசர் ஒருவர் மேற்கொண்ட முதலாவது பயணம் இதுவாகும்.
2002- உள்ளூராட்சித் தேர்தல்; ஆளுங்கட்சி வரலாற்றுப் பெருவெற்றி, ஐக்கிய தேசிய முன்னணி 222 சபைகளில் 217 சபைகள் வெற்றி.
2006 -சமூகஊடகமான ருவிற்றர் (கீச்சகம்) தொடங்கப்பட்டது.
2007 - ஏ -9 பாதையை த் திறக்க ஐ.நா. சமாதானக் குழுவின் பிரசன்னத்தில் வழி செய்ய செயலாளர் நாயகம் பான் கீ மூன் கோரிக்கை.
2009-இலங்கையில்போரில்இறந்தபொதுமக்கள் எண்ணிக்கை விவரம்: ஐ.நா ஆவணம் வெளியிடப்பட்டது.
2009 -ஒக்லாந்து கலிபோர்னியாவில் நான்கு பொலிஸ்அதிகாரிகள்சுட்டுக்கொல்லப்பட்டதுடன் மேலும் ஒருவர் காயமடைந்தார்.
2016-மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வு: முதலமைச்சர்கள் முன்னிலையில் ஜனாதிபதி உறுதி.
2016-50 வருடங்களின் பின் அமெரிக்க அதிபர் கியூபா பயணம்.

## நாளை

### பங்குனி-09

புதன்கிழமை -22.03.2017
திதி: நவமி மு.ப.10.23
நட்சத்திரம்: பூராடம் பி.ப.12.15
சுபநேரம்:04.47-06.17 வரை
ராகுகாலம்:12.17-01.47 வரை



## சகோதரர்களுக்கு இடையிலான சண்டைகளை தீர்ப்பது எப்படி

சகோதரர்களிடையே சண்டை வரும்போது, உடனுக்குடன் பெற்றோர் அதில் தலையிடக் கூடாது; அவர்களே ஒரு முடிவுக்கு வர நேரம் கொடுக்க வேண்டும். அப்போதுதான், அவர்களுக்கு எப்படிப் பேசுவது, பிரச்சினையை எவ்வாறு அணுகி சமாளிப்பது, விட்டுக்கொடுப்பது போன்ற குணங்களும், திறன்களும் வளரும். பெற்றோருக்கு பிள்ளைகளின் விடயங்களில் எப்போது தலையிட வேண்டும். எப்போது தள்ளியிருக்க வேண்டும் என்பது தெரிந்திருக்க வேண்டும்..

சகோதரர்கள் இருக்கும்போது, எப்போதும் ஒரு பிள்ளையை மட்டுமே முன்னிறுத்திப்பாராட்டுவதுநல்லதல்ல. 'அவன் அம்மா செல்லம், இவள் அப்பா செல்லம்' எனச் சொல்வதும் சரியான அணுகுமுறை அல்ல.

ஒரு பொருளுக்காக பிள்ளைகள் கத்தி ஆர்ப்பாட்டம் செய்யும் போது, அவர்களுக்குவார்த்தைகளால்தங்கள்தேவைகளைப்பேசக்கற்றுக்கொடுப்பதுமிகவும் அவசியம். பெற்றோர்அவர்களின்பிரச்சினையில்குறுக்கிடும்போதுஎவருடைய பக்கமும் சாயாமல், இருவர் மீதும் கோபம்கொள்ளாமல் அவர்களுக்கு என்ன வேண்டும் மற்றும் அது ஏன் வேண்டும் என்பதை, இருவரையும் சரியான வார்த்தைகளால் சொல்லச் சொல்லிக் கேட்க வேண்டும். பின்னர் இருவருக்கும் சரியாகத்தோன்றும் முடிவை அவர்களையே யோசிக்கச் சொல்லும் முறையால், அவர்களின் சிந்தனைத்திறன் அதிகரிக்கும்.

சண்டைக்குப் பின்னரும், 'அதற்கு நீதான் காரணம், 'நான்தான் காரணம்' என அவர்கள் ஒருவர்மீது ஒருவர் பழிபோடாமல், பிரச்சினையை ஒரேயடியாக முடித்துவிட்டு வெளிவரச் செய்ய வேண்டும். சண்டை அளவுக்கு மீறிவிட்டால், இருவரையும் சிலநேரம் பிரித்துவிட்டு சிறிதுநேரத்தின் பின்னர் திரும்பவும் சந்திக்க வைப்பது நல்லது; இது அடிதடி, காயங்கள் ஏற்படாமல் தடுத்துவிடும்.

கோபத்தைக் கையாளும் முறையைப் பிள்ளைகளும் பெரும்பாலும் பெற்றோரிடம் தான் கற்றுக் கொள்கின்றனர். எனவே, கோபமாக இருக்கும்போது பெற்றோர், தவறான வார்த்தைகளைப் பிரயோகிப்பது, கதவை அடித்துச்சாத்துவது, பொருளை வீசுவது, சுவரில் முட்டிக் கொள்வது போன்ற விடயங்களில் ஈடுபடாமல், தெளிவாகப் பேசித் தீர்த்துக் கொண்டால் பிள்ளைகளும் அப்படியே செய்வார்கள்.

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2856 திகதி: 20.03.2017

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 42 64 66 75 A

போனஸ் இல. புதன்கிழமை ஜக்பொட்: 2 ரூ. 52,610,052/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ஜாதா நிற டிக்கட்டுக்கள் 22 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

## SUPER BALL சுப்பர் போல்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 630

சீட்டிழுப்பு திகதி 20.03.2017 திங்கட்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 46 47 62 64 I

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54, 795, 203/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

பச்சை நிற டிக்கட்டுக்கள் 23.03.2017 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 1350 சீட்டிழுப்பு திகதி 2017.03.20

வெற்றி இலக்கங்கள்: 21 24 37 55 S

அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 19,848,387/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## பண்ணை உதவியாளர்கள் தேவை

கிளிநொச்சி வட்டகச்சியில் இயங்கும் பண்ணை ஒன்றிற்கு உதவியாளர்கள் தேவை. மேற்படி பண்ணைக்கு மாடு வளர்ப்பில் அனுபவமுள்ள 40 வயதிற்கு மேற்பட்ட ஆண் உதவியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்குமிட வசதி, சம்பளம் 22, 000 இற்கு மேல். தகுதிக்கேற்ப மேலதிக வேதனம் வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு - 076 918 6603

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



பிறப்பு 18.04.1958

இறப்பு 05.02.2017

கடந்த 05.02.2017 சிவபதமடைந்த

**அமரர் பொன்னம்பலம் அமிர்தலிங்கம்**

(அதிபர் - யா/ நடேஸ்வராக்கல்லூரி காங்கேசன்துறை)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (21.03.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சுதுமலை மத்தி,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

(முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்)

## வாள்வெட்டுக்...

மேற்பட்ட குடும்பங்கள், நேற்று இரவு பருத்தித்துறை நீதிமன்றுக்கு முன்பாகவுள்ள இந்து ஆலயத்தில் தங்கியிருந்தனர். பொலிஸாரின் உத்தரவாதத்தையடுத்து நேற்றுப் பின்னிரவு அவர்கள் தமது வீடுகளுக்குத் திரும்பினர். வடமராட்சி, அல்வாய் பகுதியில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்ட எவரும் பொலிஸாரால் நேற்றிரவு வரை கைதுசெய்யப்படவில்லை. இந்த நிலையில் மீண்டும் ஒரு வாள் வெட்டு சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

இந்த வாள் வெட்டு சம்பவங்களால் வடமராட்சி, அல்வாய் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

எந்த நேரம் என்ன நடக்கும் என்பது தெரியாது என்று தெரிவித்த வடமராட்சி பகுதியைச் சேர்ந்த 10க்கும் மேற்பட்ட குடும்பங்கள், நேற்று மாலை பருத்தித்துறை பொலிஸ் நிலையம் சென்றனர். வாள்களுடன் திரிபவர்களைக் கைதுசெய்யுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர். அத்தோடு, கும்பல் கைதுசெய்யப்படும் வரை தமக்கு பாதுகாப்பு இல்லை என்று தெரிவித்த அவர்கள் பொலிஸ் நிலையத்தில் இருந்து பருத்தித்துறை நீதிமன்றுக்கு முன்பாக உள்ள ஆலயம் ஒன்றில் தஞ்சம் புகுந்தனர். எனினும் இரவு 9. 30 மணிக்கு கோவிலுக்கு பருத்தித்துறைப் பொலிஸார் வந்தனர்.

மக்களுடைய பாதுகாப்புக்கு உத்தரவாதம் தருவதாகவும், மக்களை வீட்டுக்குச் செல்லுமாறும் பொலிஸார் கோரினர். அவர்களின் உத்தரவாதத்தை ஏற்க மக்கள் மறுத்தனர். பொலிஸாரின் கடும் முயற்சியால் மக்கள் வீடுகளுக்குத் திரும்பினர்.

"வாள் வெட்டுச்சம்பவங்கள் மோசமாகிவிட்டன. இதுவரை பொலிஸார் யாரையும் கைது செய்யவில்லை. வாள் வெட்டுச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்தன் பின்னரே மீண்டும் ஒரு வாள் வெட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது. எனவே எங்களுக்கும் அவ்வாறு இடம்பெறமாட்டாது என்று கூறமுடியாது. எமக்கு பாதுகாப்பு வேண்டும். அதனால்தான் ஆலயத்தில் தஞ்சம் புகுந்தோம். இப்போது பொலிஸார் உத்தரவாதம் அளித்துள்ளனர். எமக்கு ஏதாவது நடந்தால் அது பொலிஸாரையே சாரும்" என்று அந்த மக்கள் தெரிவித்தனர். (வ-21.26)

## வவுனியா...

பொலிஸார் தெரிவித்தனர்.

மதவாச்சி - பூனாவைப் பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கல்குனாமடு பிரதேசத்தை சேர்ந்த அபல் தாரக்க சஞ்சீவ விமல சேன (வயது -33) என்பவரே உயிரிழந்தார்.

"ரம்பாவ பகுதியிலிருந்து வவுனியா நோக்கி அரிசி மூடைகளை ஏற்றிப் பயணித்த குறித்த படி வாகனம் மதவாச்சி பூனாவை பகுதியில் உள்ள மரம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். வாகனமும் பெரும் சேதத்துக்குள்ளாகியது. வாகனத்தின் சாரதி நித்திரை கொண்டதன் காரணமாக விபத்து இடம்பெற்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. சாரதியின் உடலம் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன" என்று மதவாச்சிப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(வ-21)

## வடக்கின் முன்னணி நட்சத்திர ஹொட்டலிற்கு பின்வரும் பணியாளர்கள் வேண்டப்படுகின்றனர்

- முகாமையாளர் (Managers)
- தோட்டப்பராமரிப்பாளர்
- மின்சார, குழாய் அமைவு பராமரிப்பு உதவியாளர்
- Guest Relation officers
- சமையல் உதவியாளர்
- Room Attendant

Hotel துறையில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் இருத்தல் வேண்டும்.

தொடர்புகளுக்கு -
077 9817617/ 077 330 6985

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 03.09.1944 உதிர்வு 19.02.2017

கடந்த 19.02.2017 சிவபதமடைந்த எமது அன்புத்தெய்வம்

அமரர்
**சிதம்பரப்பிள்ளை நவரத்தினம்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (21.03.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

( இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

ஐயா கடையடி,
கண்டி வீதி, மீசாலை.

குடும்பத்தினர்.

### தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் பிரபல வர்த்தக நிலையம் ஒன்றுக்கு வேலையாள்கள் உடன் தேவை. (யாழ். நகரினை அண்டியவர்கள் விரும்பத்தக்கது) 0214923724

### வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடனும். ஆனந்தன் மதனா 15/3, 3 ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்திலுள்ள வீடு வாடகைக்குண்டு தொடர்புகளுக்கு, 0776044227, 0770491513

### வேலையாள் தேவை

யாழ். பிரதேசத்தில் அமைந்துள்ள தையல் கடை ஒன்றுக்கு தையல் வேலைகள் தெரிந்த பெண் வேலையாள்கள் தேவை. தொடர்புகளுக்கு, 0766960753, தபால்கட்டை சந்தி. அரியாலை.

### ஆசிரியர் தேவை

பிரபல தனியார் பாலர் பாடசாலைக்கு மானிப்பாய், சங்கானை, கோப்பாய், சுன்னாகம் ஆகிய இடங்களில் கடமையாற்றக்கூடிய ஆசிரியர்கள் தேவை.

077 468 2951/ 077 700 9653

### மணமகள் தேவை

லண்டனில் படித்து பட்டம் பெற்று யாழ்ப்பாணத்தில் தனியார் நிறுவனம் நடத்தி வரும் உரிமையாளருக்கு சிவந்த அழகிய மெல்லிய மணமகள் தேவை. பிறந்த திகதி 05.06.1987 உத்தரம் 1 ஆம் பாதம் கிரகபாவம் 18 3/4.

தரகர்கள் தேவையில்லை.

தொடர்பு 077 613 9149

### ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

# IELTS

- Latest training materials. ( Book 11 )
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.

## IELTS Life Skills

திருமணம் செய்து நிரந்தர விசாவில் UK செல்பவர்களுக்கானது, புதிய நடைமுறைக்கு அமைவாக இலகுவான முறையில் UK அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை

British Council'S IELTS Registration Centre

Spoken English

www.itdmi.com/english Hotline 0777 17 35 17

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | நெல்லியடி Tel.: 021-226 2470 | சாவகச்சேரி Tel.: 021-227 0773 | சுன்னாகம் Tel.: 021-224 1970 | கிளிநொச்சி Tel.: 021-228 5655

## என்றும் மறவாத நினைவலைகள்

22 ஆம் ஆண்டு · 7 ஆம் ஆண்டு · 8 ஆம் ஆண்டு · 6 ஆம் ஆண்டு



அமரர் **ஏரம்பு சோதிலிங்கம்** (தலைவர்-மதிஒளி ச.ச. நிலையம், பண்டிதர் நூல்நிலையம், இணக்கசபை உறுப்பினர், மண்டைதீவு)

அமரர் **மங்கையற்கரசி சோதிலிங்கம்**

அமரர் **சோதிலிங்கம் பஞ்சலிங்கம்**

அமரர் **சோதிலிங்கம் இலட்சுமிகாந்தன்** ஆசிரியர், [B.A, J.P(Whole Island)]

அன்போடு அறிவையும் ஊட்டி எம்மை
ஆளாக்கிய அன்புத் தெய்வங்களே!
பாசத்திற்கு இலக்கணமாய் இலங்கிய சகோதரர்களே!
என்றும் நிலைத்திருக்கும் உம் நினைவுகள்
எம் இதயங்களிலே.

குடும்பத்தினர்.
27/1, கருவேலடி லேன்,
கொக்குவில்.

# தனுஷ் வழக்கில் திடீர் திருப்பம்

நடிகர் தனுஷின் அங்க அடையாளங்கள் லேசர் சிகிச்சை மூலம் அழிக்கப்பட்டுள்ளன என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவரை தங்கள் மகன் என்று உரிமை கோரும் பெற்றோர் தரப்பு வழக்கறிஞர் தெரிவித்தார்.

நடிகர் தனுஷ் தங்களுடைய மகன் என்று சொந்தம் கொண்டாடுவதோடு, அவர் தங்களுக்கு பராமரிப்புப் தொகை வழங்க வேண்டும் என்று கதிரேசன் மற்றும் மீனாட்சி தம்பதியர் தொடுத்திருந்த வழக்கு தொடர்புடைய விசாரணை சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நேற்று நடைபெற்றது.

செய்தியாளர்களிடம் பேசிய கதிரேசன்மீனாட்சி தம்பதியர் தரப்பு வழக்கறிஞர் டைட்டஸ்,

கதிரேசன்மீனாட்சி தம்பதியர் தரப்பிலான ஆதாரங்களில் கூறியுள்ள அங்க அடையாளங்கள் தனுஷின் உடலில் இல்லை என்றும், அந்த அங்க அடையாளங்களை லேசர் சிகிச்சை மூலம் நீக்கியிருப்பது மருத்துவ ஆய்வில் தெரிய வந்துள்ளது.

மேலும் மருத்துவ அறிக்கையின் நகல் வழங்கப்பட்டுள்ளது. தனுஷை சொந்தம் கொண்டாடுகிற மதுரை மேலூரைச் சேர்ந்த ஆர். கதிரேசன் மற்றும் கே. மீனாட்சி தம்பதியர், அவர் கல்வி பயின்றதாக கூறுகின்ற மேலூர் அரசு மாணவர் மேல் நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் வழங் கியதாக கூறுகின்ற பள்ளி மாற்றுச் சான்றிதழை முக்கிய ஆதாரமாக நீதிமன்றத்திடம் வழங்கி இருக்கின்றனர்.

அந்த சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருக்கும் அங்க அடையாளங்களான மச்சங்கள் சரியானவையா என்று சோதித்து அறிவதற்காக தனுஷ் கடந்த பெப்ரவரி மாதம் 28ஆம் திகதியன்று நீதிமன்றத்தில் நேரில் முன்னிலையாக வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டிருந்தார். அதன்படி அந்த குறிப்பிட்ட தினத்தில், மதுரை உயர் நீதிமன்றத்தில் நடிகர் தனுஷ் முன்னிலையானார்.

அவரது உடல் அடையாளங்களாக பள்ளி மாற்றுச் சான்றிதழில் வழங்கப்பட்டுள்ள மச்சங்களை சரிபார்க்க தனுஷ், அரசு மருத்துவர்களால் ஆய்வு செய்யப்பட்டார். அந்த மருத்துவ ஆய்வு அறிக்கை பின்னர் மார்ச் மாதம் 2ஆம் திகதியன்று நடைபெற்ற நீதிமன்ற விசாரணையின் போது மருத்துவர்களால் தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ந்து அந்த வழக்கின் விசாரணை நேற்று நடைபெற்றபோது , மருத்துவ அறிக்கையின் விவரங்கள் வெளியாகியுள்ளன. மருத்துவ அறிக் கையின் விவரங்கள், நடிகர் தனுஷ் தங்களுடைய மகன் என்று சொந்தம் கொண்டாடும் கதிரேசன் மீனாட்சி தம்பதியருக்கு ஆதரவானதாக உள்ளது" என்று அவர்கள் தரப்பு வழக்கறிஞர் டைட்டஸ் தெரிவித்தார்.

(முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்)

### கேள்விக்கு...

வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இந்த ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் வெளிநாட்டுக்கு மேற்கொண்ட பயணங்கள் எத்தனை? பயணமும் என்ன என்ன நோக்கத்துக்காக மேற்கொள்ளப்பட்டன? பயணத்தின்போதும் வெளிநாடுகளில் தங்கியிருந்த காலம் எவ்வளவு? பயணத்துக்கு ஏற்பட்ட செலவு விவரங்கள் என்பனவற்றைத் தருமாறு கோரி வடக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அமைச்சராக ப.சத்தியலிங்கம் பதவியேற்றது முதல் இதுவரையில் 10 வரையான வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார் என்றபோதும் இரு பயணங்கள் தொடர்பான விவரங்கள் மட்டுமே தரப்பட்டுள்ளன. அமைச்சர் எத்தனை பயணங்கள் மேற்கொண்டார், அதில் எத்தனை உத்தியோக பூர்வமானவை, எத்தனை தனிப்பட்டவை என்கிற விவரங்கள் ஏதுமின்றி. இரு பயணங்களின் விவரங்கள் மட்டும்தரப்பட்டுள்ளன. ஏனையவற்றின் விவரங்கள் தரப்படாததற்கான காரணம்கூடக் குறிப்பிடப்படவில்லை. கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் தர முடியாதாயின் அதற்கான காரணத்தைக் குறிப்பிடவேண்டும் என்று தகவல் அறியும் உரிமைச் சட்டம் கூறுகின்ற போதும் அமைச்சரின் ஏனைய பயணங்களின் விவரங்கள் ஏன் தரப்படவில்லை என்பதற்குக் காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

2016ஆம் ஆண்டு மலேசியாவுக்குச் சென்றமை தொடர்பிலும், 2017ஆம் ஆண்டு கனடாவுக்குச் சென்றமை தொடர்பிலும் மட்டுமே தகவல்கள் தரப்பட்டுள்ளன. (உ,5)

### நாடு கடந்த...

இந்த மோதல் காரணமாக, சரத் வீரசேகர ஏற்பாடு செய்திருந்த பக்கநிகழ்வு இறுதியில் அவராலேயே கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (வ-5)

## மரண அறிவித்தல்

### திருமதி இலட்சுமி பாலசுந்தரம்

சித்தம்பாதி, கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமி பாலசுந்தரம் (20.03.2017) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுந்தரத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான பத்மநாதன், அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, சோமசுந்தரம் மற்றும் சாந்தம்மா, கலைஞானசுந்தரம் காலஞ்சென்ற அருளம்மா ஆகியோரின் அன்புத்தாயும் இராமலிங்கத்தின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வெல்லங்கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சித்தம்பாதி,
கரணவாய் தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர். 077 1912 585

## மரண அறிவித்தல்

### திருமதி நாகேஸ்வரி (மலர்) இராமசேது



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 16.08.1942 | 18.03.2017 |

அல்வாயைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி (மலர்) இராமசேது கடந்த (18.03.2017) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பருவதம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான நாராயணப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் இராமசேதுவின் (சிற்பக் கலைஞர்) அன்பு மனைவியும் இராசமணியின் மைத்துனியும் அழகம்மா காலஞ் சென்ற தங்கம்மா மற்றும் அன்னம்மா, நவரத்தினம், ஆனந்தம் ஆகியோரின் சகோதரியும் காலஞ் சென்ற அசோக்குமார் மற்றும் ரதிவதனா (பிரான்ஸ்), உதயகுமார் (லண்டன்), வசந்தகுமார், ஜெயரதி (கனடா), ரஜினா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் பாசமிகு தாயும் கலைச்செல்வி (சுவிஸ்), சடாட்சரலிங்கம் (பிரான்ஸ்), புனிதவதி (லண்டன்), துர்க்கா, சுரேஸ்குமார் (கனடா), ரமேஸ் ஆகியோரின் அன்புமாமியும் நிறோஜன், பிரசாந், சுமன், சமித்திரா, வித்யா, அஸ்வினி,அனுஷ்கா,அஸ்விந்,டிலோஜனா, தேனுஜன், ஜினோசன், தனுஜா, மதுசா, அபிரா, அஸ்வின், ஆகாஷ், கிருஜா, ரக்ஷன், அபிஷயா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.03.2017) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உதயமஹால்
செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு.
077 220 9615

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை கேசவலிங்கம்



யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கேசவலிங்கம் நேற்று (20.03.2017) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சத்தியபாமா, இரத்தினம்மா (பவி) ஆகியோரின் அன்புக்கணவரும் துஷ்யந்தன் (Swiss), ஸ்ரீஜனனி (ஆசிரியை, மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி), கோபிநாத் (BCAS), ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயபதிதரன் (நூலக உதவியாளர், நல்லூர்) இன் அன்பு மாமனும் நிதுஷனா வின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2017) செவ்வாய்க்கிழமை பி.ப 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தல் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

தகவல்
குடும்பத்தினர்.

### திருமதி மங்கையற்கரசி நாராயணசாமி



நாவலர் வீதி, பெருமாள் கோவிலடியை சேர்ந்த திருமதி மங்கையற்கரசி நாராயணசாமி நேற்று (20.03.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான R.T சின்னத்துரை - மீனாட்சிஅம்பாள் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற V.N.C நாராயணசாமியின் அன்புமனைவியும் காலஞ்சென்ற திலகராணி மகாதேவாவின் சகோதரியும் துஷாந்தினியின் அன்புத்தாயும் கிருஷ்ணராஜாவின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

255, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மகள், மருமகன்

### ஆறுமுகம் வேலாயுதம்



காரைநகர், நாவற்கண்டியைப் பிறப்பிடமாகவும் 3 ஆம் ஒழுங்கை, கலாசாலை வீதி, திருநெல்வேலியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வேலாயுதம் நேற்று (20/03/2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - பரிமளம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கனகசபை - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஞானேஸ்வரியின் அன்புக்கணவரும் தயாபரன் (பொறியியளாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்பு), ரஜதகௌரி (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), Dr.ஐங்கரன் (கொழும்பு, தேசிய வைத்தியசாலை), சிவதாரணி (போதனாசிரியர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, யாழ்ப்பாணம்), Dr. சுதாகரன் (கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை, றாகம), ஆனைமுகன் (படவரைஞர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், முன்னாள் கௌரவ தவிசாளர், காரைநகர் பிரதேசசபை) ஆகியோரின் அன்புத்தந்தையும் குகாயினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), மோதிலால் (இலங்கை போக்குவரத்துசபை, கோண்டாவில்), தர்ஷனா (ஆசிரியர், பூவரசங்குளம் மகாவித்தியாலயம்), ஜெயரூபன் (கால்நடை வைத்திய அலுவலகம், சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்புமாமாவும் நர்த்தனா, அக் ஷனா, சிவகஜனி, துளசிகன், சுபஸ்தியா, அபிஷன், டிவாகர், கவிராம் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பார்வதிப்பிள்ளை, இராசலட்சுமி, பரஞ்சோதி செல்லமுத்து, மகேஸ்வரி, இராமநாதன், லோகநாதன் மற்றும் பாலசுப்ரமணியம் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நகுலேஸ்வரி, யோகேஸ்வரி, குலேந்திரன் (றிதி ஸ்ரோர்ஸ், பண்டத்தரிப்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21/03/2017) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைநகர், சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3 ஆம் ஒழுங்கை,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

தகவல்
குடும்பத்தினர்.
077 778 0882

(AJA/CS/2492)

## கூட்டு அரசுக்குள்...

றுள்ள அமைச்சர் சம்பிக்க ரணவக்க இது தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில்,

இலங்கை அரசு இழைத்துள்ள இராஜதந்திரத் தவறாகும். ஜெனிவாத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவதற்கான முடிவை எடுப்பதற்கு முன்னர், அரசில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் கருத்துக்கள் கேட்கப்படவில்லை. இதற்கு எதிராக ஜாதிக ஹெல உறுமய தொடர்ந்து குரல் கொடுக்கும். பரிந்துரைகளை இலகுவாக நடைமுறைப்படுத்த முடியாது. அரசு வாக்குறுதி அளிக்கக் கூடாது.

உதாரணமாக, கலப்பு நீதிமன்றத்தை நடைமுறைப்படுத்த முடியாது. உலகின் ஏனைய எந்த நாட்டிலும் இல்லாத முன்னுதாரணத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்கு, பன்னாட்டுச் சமூகம் முயற்சிக்கக் கூடாது என்றார்.

இதேவேளை, இந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த வர்ணகுலசூரிய தெரிவித்ததாவது:

2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் இலங்கை அரசு மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதில் எடுத்துள்ள அனைத்து முயற்சிகளும் வெற்றி கண்டுள்ளன. நாம் முன்னோக்கிப் பயணிக்க மேலும் இரண்டு வருடங்கள் கால அவகாசம் வழங்குவது கட்டாயமானதாகும்.

மனித உரிமைகள் விவகாரத்தில் அரசு சிறந்த முன்நோக்கிய பயணத்தை மேற்கொண்டுள்ளது. இதனை மனித உரிமைகள் சபை உட்பட உறுப்பு நாடுகள் ஏற்றுக்கொண்டு இலங்கைக்குக் கால அவகாசம் வழங்க வேண்டும். இலங்கையில் முற்றிலும் உள்ளகப் பொறிமுறையிலான விசாரணையே இடம்பெற வேண்டும்.

கலப்பு நீதிமன்றம் என்ற வார்த்தை ஐ.நா. தீர்மானத்தில் இருந்து நீக்கப்பட வேண்டும். அதற்கு இலங்கை அரசு புதிய திருத்தங்களை உள்ளடக்கிய தீர்மானத்தை முன்மொழிந்து நிறைவேற்றவேண்டும். மீண்டும் கலப்பு நீதிமன்றம் என்ற சொல்லுடன் தீர்மானத்தை நிறைவேற்ற முற்பட்டால் இலங்கை அரசு அதற்கு இணை அனுசரணை வழங்கக் கூடாது என்பதே எமது நிலைப்பாடு என்றார். (த-5)

## போர்க்...

தலைவர் மைத்திரிபால சிறிசேனவை நேற்று முற்பகல் அவரது இல்லத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் நீண்டகாலமாக இருந்துவரும் உறவுகளை இதன்போது நினைவுகூர்ந்த அரச தலைவர் மைத்திரி, இலங்கையின் இறைமைக்கும் தேசிய பாதுகாப்புக்கும் சீனாவிடமிருந்து கிடைக்கும் உதவிகளுக்குத் பாராட்டுத் தெரிவித்தார்.

நீண்டகாலமாக இலங்கையின் பாதுகாப்புப் படையினருக்குச் சீன அரசு வழங்கிவரும் பயிற்சிச் சந்தர்ப்பங்கள் தொடர்பில் நன்றி தெரிவித்த அரச தலைவர் மைத்திரி, உள்நாட்டுப் போரின்போது சீனா வழங்கிய ஒத்துழைப்புகளுக்குப் பாராட்டும் தெரிவித்தார்.

இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்குத் தேவையான பயிற்சிகளைத் தொடர்ந்தும் சீன அரசு வழங்கும் எனத் தான் நம்புவதாகவும் சீன பாதுகாப்பு அமைச்சரிடம் மைத்திரி குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வான்குவாங், “அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையின் கீழ் இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் மக்கள் நலன்பேணல் பலமான நிலையில் உள்ளது. இது சீன அரசுக்கு மகிழ்ச்சியளிக்கின்றது" என்றார். அத்துடன், சீன அரச தலைவரின் சார்பில் வாழ்த்துகளையும் தெரிவித்துகொண்டார்.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 60 வருடங்கள் கடந்துள்ள நிலையில் இந்த உறவுகளை மேலும் பலப்படுத்துவது தனது நாட்டின் நோக்கமாகும் என்றும் சீனப் பாதுகாப்பு அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-5)

## ஹர்ச...

நாளை மறுநாள் வியாழக்கிழமை இலங்கை தொடர்பான தீர்மானம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளது. இந்த நிலையில், தீர்மானம் நிறைவேற்றப்படும்போது, இலங்கைக் குழுவுக்குப் பிரதி அயலுறவுத்துறை அமைச்சர் ஹர்ச டி சில்வாவை தலைமை ஏற்குமாறு, அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர கேட்டுக் கொண்டுள்ளார் என்று கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னதாக, ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத ஆரியசிங்கவே, தலைமை தாங்குவார் என்று கூறப்பட்டது. இவ்வாறானதொரு நிலையிலேயே பிரதி அயலுறவுத்துறை அமைச்சர் ஹர்ச டி சில்வாவை ஜெனிவா செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-5)

## ஜெனிவாவில்...

தது. அ.தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் மைத்திரேயன்,

இலங்கையில் திட்டமிட்டு நடத்தப்பட்ட இனப்படுகொலையில் 1.5 இலட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால், இதுவரை அங்கு நம்பகமான விசாரணை நடத்தப்படவில்லை. தவறு செய்த ஒரு நபர்கூட தண்டிக்கப்படவில்லை. இலங்கைக்கு மேலும் 2 ஆண்டு அவகாசம் வழங்கும் தீர்மானம் மீது ஜெனிவாவில் வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் சில நாடுகள் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானம் தமிழர்களுக்கு அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. நாட்டின் மிகவும் சக்தி வாய்ந்த தலைவராகத் தலைமை அமைச்சர் மோடி விளங்குகிறார். உண்மையில், அவர் உலகின் மிகவும் சக்தி வாய்ந்த தலைவரும் ஆவார். மோடியால் கூடத் தமிழர்களுக்கு நீதி வழங்க முடியாது என்றால், வேறு யாராலும் வழங்க முடியாது. எனவே, ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் கொண்டு வரப்படும் தீர்மானத்துக்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும் என்றார். (த-5)

## பிரபா...

அச்சுறுத்தலாக அமைவதால் வடக்கில் இருந்து இராணுவத்தை மாத்திரமல்ல இராணுவ முகாம்களையும் அகற்றக் கூடாது.

இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய தெரிவித்தது.

ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த வர்ணகுலசூரிய மேலும் கூறிய தாவது:

பிரபாகரன் இறுதிப் போரின்போது எமது இராணுவத்தின் தாக்குதலில் இறந்துவிட்டதாக நாம் அறிந்தோம். என்றாலும், பிரபாகரன் உயிரிழக்கவில்லை. அவர் உயிரோடுதான் இருக்கின்றார் என்று தமிழக அரசியல் தலைவர் பழ.நெடுமாறன் மற்றும் வடக்கு மாகாண அமைச்சர் ப.டெனிஸ்வரன் உள்ளிட்டோர் கூறிவருகின்றனர்.

அவர்களின் கருத்து தேசிய பாதுகாப்புக்குச் சவால் விடும் வகையில் அமைந்துள்ளது. எனவே, ஒருபோதும் வடக்கில் இருந்து இராணுவத்தையும், இராணுவ முகாம்களையும் அகற்றக் கூடாது என்றார். (த-5)

## நீதிமன்றையும்...

னிடம் முறையிடப்பட்டுள்ளது. வாடி அமைப்பதற்கு நீதிமன்றம் தடை விதிக்கவில்லை என்றும் மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கொக்கிளாய்ப் பகுதியில் தென்னிலங்கை மீனவர்கள் கரைவலைத் தொழில் புரியும் பிரதேசத்துக்கு அண்மையில் உள்ளூர் மீனவர்கள் வாடி அமைப்பதற்கான நிலம் பிரதேச செயலாளரால் வழங்கப்பட்டிருந்தது. அந்தப் பகுதிக்கு தமக்கு ஒதுக்கப்பட்ட நிலப்பரப்புக்குள் அடங்குவதாக தென்னிலங்கை மீனவர், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். அந்த நிலப்பரப்பில் உள்ளூர் மீனவர்கள் வாடி அமைப்பதை தடை செய்யுமாறு திணைக்களம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தது.

இந்த வழக்கு கடந்த 15ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது பிரதேச செயலாளரால் நில அளவைத் திணைக்களம் ஊடாக அளவீடு செய்யப்பட்ட வரைபடமும் மன்றில் முன்வைக்கப்பட்டது.

தென்னிலங்கை மீனவர்களுக்கு கரைவலைப்பாடு தொழிலுக்காக வழங்கப்பட்ட பிரதேசத்திலிருந்து 371மீற்றர் தொலைவிலேயே உள்ளூர் மீனவர்களின் வாடி அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டு ஆவணம் ஒன்றும் மன்றில் முன்வைக்கப்பட்டது.

அவற்றை ஆராய்ந்த நீதிபதி, இந்த ஆவணத்தின் பிரகாரம் தென்பகுதி மீனவர்களுக்கான கரைவலைப்பாடு பிரதேசத்துக்குள் உள்ளூர் மீனவர்களின் வாடி இல்லை என்று உறுதியாகின்றது. இதுதொடர்பில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளின் கருத்தை நீதிமன்றம் கேட்டது. அது தொடர்பில் ஆராய்ந்து அடுத்த தவணையில் அறிக்கை சமர்ப்பிப்பதாக அதிகாரிகள் மன்றில் தெரிவித்தனர். வழக்கு எதிர்வரும் 3ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

“நீதிமன்றம் தடை விதிக்காத காரணத்தால் உள்ளூர் மீனவர்கள் 12பேரின் படகுகளுக்கான காப்புறுதி செய்யப்பட்டது. அனுமதியை பெறுவதற்கான ஏற்பாட்டுடன் கடற்றொழிலுக்காக படகுகள் இறக்கப்பட்டன . இரு நாட்கள் தொழிலில் ஈடுபட்ட சமயம் குறித்த படகுகளுக்கான அனுமதியை வழங்க மறுக்கும் திணைக்களம், அந்தப் பகுதியில் உள்ள படகுகளையும் கைப்பற்றவே முற்படுகின்றனர்" என்று மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

“முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில், நீரியல் வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் தென்னிலங்கை மீனவர்களுக்குச் சார்பாக செயல்படுகிறார் என்று வெளிப்படையாகவே தெரிகின்றது. எமது படகுகளுக்கான அனுமதியைப் பெறுவதற்கு ஆவன செய்து தருமாறு கோருகின்றோம்" என்று கொக்கிளாய் சென் அன்ரனிஸ் மீனவர் சங்கத்தால் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் மனுக் கையளிக்கப்பட்டது. (வ-101)

## துணிவிருந்தால்...

இவ்வாறு காணாமற்போனோரின் உறவினர்கள் கோபாவேசத்துடன், முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவிடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

'காணாமற்போனவர்கள் உயிருடன் இல்லை. போரின் இறுதியில் சரணடைந்ததை நேரில் பார்த்தவர்கள் எவரும் இல்லை. கிராமத்தில் உள்ள தமிழ் மக்களுக்கு நாட்டின் அரச தலைவரின் பெயரே தெரியாது. அப்படியிருக்கையில் இந்த இராணுவ அதிகாரியிடம் தான் கையளித்தோம் என்று எப்படிச் சொல்வார்கள்' இவ்வாறு முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்திருந்தார். இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமற்போனோரின் உறவினர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

'எங்கள் மனதை நோகடித்து விரைவில் எங்களைச் சாகடிப்பதற்காகவே பிள்ளைகள் உயிருடன் இல்லை என்று பொறுப்பற்றதனமாகச் சொல்கின்றனர். போரின்போது பலர் உயிரிழந்தது எங்களுக்குத் தெரியும். அவர்களின் பெற்றோர் சமூகத்தில் இருக்கின்றனர். இராணுவக் கட்டுப்பாட்டுக்கு வந்த பின்னர் இராணுவத்தினரிடம் நாங்கள் ஒப்படைத்த பிள்ளைகளைத்தான் கேட்கின்றோம். சோதனைச் சாவடியில் வைத்து இராணுவத்தினர் கைது செய்த பிள்ளைகளைத்தான் கேட்கின்றோம். காயமடைந்து கப்பலில் ஏற்றிச் செல்லப்பட்டுக் காணாமற்போனவர்களைப் பற்றித்தான் கேட்கின்றோம். இவர்கள் எல்லோரையும் கொலை செய்துவிட்டீர்களா ? முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய இவ்வாறு தெரிவித்த பின்னரும் எங்கள் மக்கள் பிரதிநிதிகள் மௌனமாக இருக்கக் கூடாது' என்று முல்லைத்தீவில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் குறிப்பிட்டனர்.

'எங்களை இரகசிய முகாம்களைப் பார்வையிட அனுமதியுங்கள். நாங்கள் எங்கள் பிள்ளைகளைக் கூட்டி வருகின்றோம். ஓமந்தைச் சோதனைச் சாவடியில் வைத்து பிள்ளைகளை இராணுவத்தினர் பிடித்தனர். அப்படிப் பிடிக்கப்பட்டவர்கள் எங்கே ? அவர்கள் எப்படி இறந்து போனார்கள் ? விசாரணையின் பின்னர் விடுவதாகக் கூறித்தானே எங்கள் பிள்ளைகளைக் கூட்டிச் சென்றார்கள். இப்போது இறந்து போனார்கள் என்று எப்படி இவர்களால் சொல்ல முடிகின்றது ? நாங்கள் எங்கள் பிள்ளைகளைப் பிணமாக அவர்களிடம் ஒப்படைக்கவில்லை. இந்தக் கதைகளைக் கோத்தபாய முடிந்தால் எங்கள் முன்பாக வந்து சொல்லட்டும். நாம் எமது பிள்ளைகளை எப்போது ? எத்தனை மணிக்கு ? எங்கே ? எவரிடம் ? ஒப்படைத்தோம் என்ற விலாவாரியான விவரத்தைக் கோத்தபாயவுக்கு வழங்கத் தயாராக இருக்கின்றோம்' என்று வவுனியாவில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.

'கோத்தபாய தடுமாற்றத்தில் இருக்கின்றார். அதனால்தான் இப்படி உளறிக் கொண்டிருக்கின்றார். எங்களுக்கு நாட்டின் அரச தலைவரின் பெயரும் தெரியும். எங்கள் பிள்ளைகளை ஒப்படைத்த இராணுவ அதிகாரி தொடக்கம் சாதாரண சிப்பாய் வரையிலானவர்களின் பெயரும் தெரியும். நாம் ஒன்றும் கையளிக்காத பிள்ளைகளைப் பற்றியோ சரணடையாத பிள்ளைகளைப் பற்றியோ கேட்கவில்லையே. அரசு அறிவித்ததன் அடிப்படையில் இராணுவத்தினரிடம் ஒப்படைத்த எங்கள் பிள்ளைகளைப் பற்றித்தானே கேட்கின்றோம். எங்கள் பிள்ளைகள் தடுப்பில் வைத்திருக்கும் படங்கள் கூட வெளியாகியிருந்தன' என்று கிளிநொச்சியில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குறிப்பிட்டனர். (த-5-6-7)

## சூரிய...

தெரிவித்தனர். மூத்த ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை மற்றும் ஏனைய ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரண மற்றும் அவரின் கீழ் செயற்பட்ட குழுவினராலேயே மேற்கொள்ளப்பட்டன' எனவும் அவர்கள் தகவல் வெளியிட்டனர்.

இந்த வழக்கு கல்கிசை நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. இதன்போதே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இந்தத் தகவல்களைத் தெரிவித்தனர்.

லசந்த விக்ரம துங்கவின் சடலம் தோண்டியெடுக்கப்பட்ட பின்னர் மேற்கொண்ட பரிசோதனையின்போது இது உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

லசந்தவின் கொலை மட்டுமன்றி, ஊடகவியலாளர்களான உபாலி தென்னக்கோன், கீத் நொயார் ஆகியோர் மீதான தாக்குதல்களிலும், மேலும் சில ஊடகவியலார்கள் மீதான தாக்குதல் மற்றும் பல்வேறு துன்புறுத்தல் சம்பவங்களுடனும் இந்தக் குழு தொடர்புபட்டிருந்தது. இந்தக் குழு அனைத்து அழைப்புக்களுக்கும் ஐந்து சிம் அட்டைகளைப் பயன்படுத்தியுள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் வாக்குமூலமும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அப்போது, கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளுக்குப் பொறுப்பாக இருந்தவர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் அஜித் பெரேரா எனவும், அவர் உரிய முறையில் கடமைகளுக்குச் சமுகமளிக்கவில்லை எனவும் அந்த வாக்குமூலத்தில் பொன்சேகா குறிப்பிட்டுள்ளதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கூறியுள்ளனர். (த-4)

## இலங்கை அணி...

தல நடத்தப்பட்ட வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட குவரி யாசீன் கொல்லப்பட்டார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2009ஆம் ஆண்டு இலங்கை அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடிய போது, லாகூரில் வைத்து வீரர்கள் பயணித்த பேருந்து மீது ஆயுததாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இலங்கை வீரர்கள் எவரும் உயிரிழக்கவில்லை. சிலர் படுகாயமடைந்தனர். இதற்குப் பின்னர் பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ள ஏனைய அணிகள் பின்னடிப்புச் செய்கின்றன. இந்தச் சம்பவத்தின் பின்னர் குவரி யாசீன் என்பவர் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார். **(தொடர்புடைய செய்திகள் பக்கம் 14-15)** (வ-ம)

## இலங்கை...

பிராந்தியத்துக்கான முதன்மைப் பிரதி உதவிச் செயலர் வில்லியம் ஈ ரொட்டுக்கு அளித்துள்ளார்.

வில்லியம் ரொட்டை, இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் வொசிங்டனில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். அதற்குப் பின்னர், அவர் அயலுறவுத்துறை அமைச்சுக்கு இரகசியக் குறிப்பு ஒன்றை அனுப்பினார்.

எந்தவொரு முக்கியமான கொள்கை மாற்றம் தொடர்பாகவும், ட்ரம்ப் நிர்வாகம் முடிவுகளை எடுப்பதற்கு இன்னமும் காலம் தேவை என்று அதில் அவர் குறிப்பிட்டுள்ளார் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (த-5)

## ஆய கலைகள் அறுபத்து நான்கு

(நேற்றைய தொடர்ச்சி)

இன்று நாம் பாடசாலைக் கல்வி முதல் பல்கலைக் கழக பட்டக் கல்விகள் ஈறாக பல வகையான கல்வித் துறைகளைப் பயின்று வருகின்றோம். இதே போன்று நம் முன்னோரில் கற்றறிந்த சான்றோர் பல்வகையான கல்வித் துறைகளை மிகுந்த துண்ணறிவோடு வகுத்து வைத்துள்ளார்கள். அவற்றின் எண்ணிக்கை அறுபத்து நான்காகும். அவற்றை ஆய கலைகள் அறுபத்து நான்கு (நுன்கு ஆராய்ந்து அறியப்பட்ட கலைகள்) என்ற சொற்பதத்தால் வழங்கி வருகிறார்கள். ஆயகலைகள் கற்க வேண்டிய கலைகளாக பழந்தமிழ் இலக்கியங்களில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டும் உள்ளன. காலத்தால் முந்தியவை இவை. தமிழ்க் கலைகள் என்றும் கூறப்படுகின்றன. இக்கலைகள் கற்பதை வித்தை பயிலுதல் என்றும் சொல்வர். இக்கலைகளின் தெய்வமாக கலைவாணியைத் துதிக்கிறார்கள் இந்துக்கள்.

26. அஸ்திரப் பயிற்சி (வில்வித்தை சாஸ்திரம்)
27. கனக பரீட்சை (பொன் மாற்றுக் காணும் நூல்)
28. ரதப் பரீட்சை (மகாரத – அதிரத சாஸ்திரம்)
29. கஜப் பரீட்சை (யானைத் தேர்வு நூல்)
30. அஸ்வ பரீட்சை (குதிரைத் தேர்வு நூல்)
31. ரத்தின பரீட்சை (நவரத்தின தரத் தேர்வு நூல்)
32. பூமி பரீட்சை (மண் வளத் தேர்வு)
33. சங்கிராம இலக்கணம் (போர் முறை விதி)
34. மல் யுத்தம் (மற்போர்க் கலை)
35. ஆகர்சணம் (அழைத்தல் அணுகுதல்)
36. உச்சாடனம் (அகற்றல்)
37. வித்வேசணம் (பகை மூட்டல்)
38. மதன சாஸ்திரம் (கொக்கோகம்) மன்மதக்கலை
39. மோகனம் (மயக்குதல்)
40. வசீகரணம் (வசியப்படுத்துதல்)
41. இரச வாதம் (பிற உலோகங்களைத் தங்கமாக மாற்றுதல்)
42. கந்தருவ வாதம் (கந்தர்வர்களைப் பற்றிய ரகசியம்)
43. பைபீல வாதம் (விலங்கு மொழியறிவு)
44. கவுத்து வாதம் (துயரத்தை இன்பமாக மாற்றுதல்)
45. தாது வாதம் (நாடி நூல்)
46. காருடம் (மந்திரத்தால் விஷமகற்றுதல்)
47. நஸ்டப் பிரச்சினம் (ஜோதிடத்தால் இழப்புக் கூறுதல்)
48. முட்டி சாஸ்திரம் ( ஜோதிடத்தால் மறைந்ததைக் கூறுதல்)
49. ஆகாயப் பிரவேசம் (விண்ணில் பறத்தல்)
50. ஆகாயக் கமனம் (வானில் மறைந்து உலாவுதல்)
51. பரகாயப் பிரவேசம் (கூடு விட்டுக் கூடு பாய்தல்)
52. அதிருசியம் (தன்னை மறைத்தல்)
53. இந்திர ஜாலம் (ஜாலவித்தை)
54. மகேந்திர ஜாலம் (அதிசயம் காட்டுதல்)
55. அக்னி ஸ்தம்பனம் (நெருப்பைக் கட்டுதல்)
56. ஜல ஸ்தம்பனம் (நீர் மேல் நடத்தல்)
57. வாயு ஸ்தம்பமை (காற்றுப்பிடித்தல்)
58. திருஷ்டி ஸ்தம்பனம் (கண் கட்டுதல்)
59. வாக்கு ஸ்தம்பனம் (வாயைக் கட்டுதல்)
60. கன்னஸ்தம்பனம் (இந்திரியம் கட்டுதல்)
61. சுக்கில ஸ்தம்பனம் (மறைப்பதை மறைத்தல்)
62. கட்கஸ்தம்பம் (வாள் சுழற்சி)
63. அவஸ்கதைப் பிரயோகம் (ஆன்மாவை அடக்கல்)
64. கீதம் (இசைக்கலை)



## பறவைக்கு வந்த பகுத்தறிவு

பள்ளிவாசல் ஒன்றின் மாடத்தின் மேல் புறா ஒன்று தன் குஞ்சுகளுடன் வசித்த வந்தது. திடீரென ஒருநாள் பள்ளிவாசலின் மேற்பகுதி புதுப்பித்தலுக்கென இடிக்கப்பட்டது. மேற்பகுதி இடிக்கப்படும் விவரம் அறிந்த புறா தன் குஞ்சுகளுடன் அந்த இடத்தை விட்டு வெளியேறி ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தின் கோபுர உச்சியில் குடியேறியது.

சில நாள்கள் சென்றிருக்கும். அந்தத் தேவாலயத்துக்கு வர்ணம் பூசுவதற்காக அதன் கோபுரப் பகுதியைச் சுத்தம் செய்யும் வேலை ஆரம்பமானது. சுத்தம் செய்தல் தனக்கும் தன் குஞ்சுகளுக்கும் பாதுகாப்பில்லை என்று எண்ணிய புறா மீண்டும் பாதுகாப்பான இடம் தேடி பறந்து சென்றது.

சிறிது தூரம் சென்றதும் உயர்ந்த பழைமையான சிவன் கோயிலின் கோபுரம் ஒன்றைக் கண்டது. இந்தக் கோபுரம் மிகவும் பாதுகாப்பானது என்று கருதி அதில் குடியேறியது.

கொஞ்ச நாள்கள் கழிந்தன. ஒருநாள் கோயில் சூழல் கூச்சலும் சத்தமுமாக இருந்தது. இதனைக் கேட்டு குஞ்சுப் புறாக்கள் பயந்தன. அவை தாயை நோக்கி "அம்மா கீழே ஒரே கூச்சலாக இருக்கிறதே" என்றன. தாய்ப் புறா கோபுரத்தில் இருந்து கீழே எட்டிப் பார்த்து விட்டு, "அது வேறொன்றும் இல்லை. இந்தப் பாழாய்ப் போனமனிதர்கள் மதங்களின் பெயரால் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். நாம் முதலில் பள்ளிவாசல், பின்னர் தேவாலயம், இப்போது கோயில் என்று இருந்து வருகிறோம். நாம் எங்கிருந்தாலும் எம்மைப் புறா என்றுதான் மனிதர்கள் அழைக்கிறார்கள். ஆனால் அதே மனிதர்கள் தாம் மட்டும் கோயிலில் இருந்தால் இந்து என்றும், தேவாலயத்தில் இருந்தால் கிறிஸ்தவன் என்றும், பள்ளிவாசலில் இருந்தால் இஸ்லாமியன் என்றும் சொல்லிக் கொள்கிறார்கள்" என்றது தாய்ப்புறா. "அம்மா ஏன் இவர்கள் தம்மை மனிதர்கள் என்று சொல்லிக் கொள்வதில்லை" என்று கேட்டது. ஒரு குஞ்சு "அதுதான் புரியவில்லை. அவர்கள் தாங்கள் மனிதர்கள் என்பதை மறந்துவிட்டு மதம், சாதி, இனம் என்ற பெயர்களால் சண்டையிட்டு அமைதியின்றி வாழ்கிறார்கள். பறவைக் காய்ச்சல் நோய் தமக்கு வந்து விட்டதாகக் கருதி பறவை இனங்களைத் தீயிட்டு பொசுக்குவார்கள். ஆனால் இவர்களிடம் மதம், இனம், சாதி, நிறங்களுக்கான கலவரங்கள் என்னும் மனிதக் காய்ச்சலுக்கான வைரசுக் கிருமிகள் நிறையவே பரவியுள்ளன.


இந்த வைரஸ்கள் பறவைகளாகிய எங்களைத் தாக்கக் கூடாது. தாக்கினால் எம் பறவை இனம் முற்றாக அழிந்துவிடும். ஆதலால் நாம் இனி இங்கிருக்கக் கூடாது. வேறிடம் தேடுவோம். எனக் கூறி குங்சுகளுடன் கோயிலை விட்டு பறந்து சென்றது தாய்ப்புறா.

**'துஷ்டரைக் கண்டால் தூர விலகு'**
**ஒன்றே குலம், ஒருவனே தேவன்.**

## தெரிந்து கொள்வோம்

1. உலகின் சகல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்ட நூல்–பைபிள் (பரிசுத்த வேதாகமம்)
2. 'எகிப்தின் மாதா' என அழைக்கப்படுவது – நைல்நதி
3. 'சீனாவின் சோகம்' என அழைக்கப்படுவது – கொவாங்கோ நதி
4. கிரிகெட்பந்தடிக்கும்மட்டைசெய்யப்படும் மரம் – விலோ
5. பப்பிரஸ் என்பது – நைல் நதி ஓரங்களில் வளரும் ஒரு வகைப் புல். புராதன எகிப்தியர் இப்புல்லிலேயே எழுதினர். 'பேப்பர்' என்ற பதம் 'பப்பிரஸ்' இல் இருந்து மருவியதாகும்.
6. கங்காரு மிருகங்கள் காணப்படும் நாடு – ஆஸ்திரேலியா
7. தபால் முத்திரைகளில் அந்த நாட்டின் பெயர் அச்சிடப்படுவதில்லை. அந்த நாடு – இங்கிலாந்து
8. சமுத்திரத்திலுள்ளகப்பலின்கொடிதலை கீழாகப்பறக்கவிடப்பட்டிருந்தால்அதன் நோக்கம். ஆபத்தில் சிக்கி உதவியை நாடுகிறது என்பதாகும்.
9. கண்கள் இரண்டும் கட்டப்பட்டு கையில் தராசுடன் காணப்படும் பெண்ணின் உருவம் குறிப்பது நீதி.
10. ➤சமபகல்இராக்காலங்கள்இடம்பெறும் நாள்கள்.
   ➤ஆண்டின்இருமுறைமத்தியகோட்டில் சூரியன்உச்சம்கொடுக்கும்காலங்கள்.
   ▲ *மார்ச் 21 (இன்று), செப்ரெம்பர் 23*

## புள்ளிகளை இணைத்து படம் வரைவோம்





## எனது அம்மா

1. எனது அம்மா மிகவும் அன்பு உள்ளம் கொண்டவர்.
2. எனது அம்மா சிறந்த குடும்பப் பெண்ணாவார்.
3. அவர் குடும்ப அங்கத்தவரோடு மிகவும் அன்பாகப் பழகுவார்.
4. பிள்ளைகளாகிய நாம் காலையில் எழுந்து காலைக் கடன்கள் முடிப்பதற்கு உதவுவார்.
5. நாள் தோறும் நேரந் தவறாது நாம் பாடசாலை செல்வதற்கு உதவுவார்.
6. எமக்குபாசத்தோடுஅறிவுரைகள்வழங்குவார்.
7. எமது அம்மா அனைவரோடும் கனிவாகப் பேசுவார்.
8. அம்மாவின்அறிவுரைகள்பயனுள்ளவையாக இருக்கும்.
9. அம்மாநாம்விரும்பியஉணவுகளைச்சுவையாக சமைத்து வழங்குவார்.
10. வீட்டை சுத்தமாக வைத்திருப்பார்.
11. ஒவ்வொரு நாளும் எமது வீட்டுப் பாடங்களில் எமக்கு உதவி செய்வார்.
12. நாம் எழுதியவைகளைத் திருத்தியும் தருவார்.
13. மாலையில் எம்மோடு சேர்ந்து பூப்பந்தாடுவார்.
14. வீட்டுத் தோட்ட பயிர்களுக்கு நீர்பாய்ச்சுவார்.
15. சமய அனுட்டானங்களை நாம் பின்பற்றத் தூண்டுவார்.
16. அப்பாவின் வரவுக்கேற்ப செலவு செய்து குடும்பத்தை மகிழ்ச்சியாக நல்ல முறையில் கொண்டுநடத்துவார்.
17. வீட்டுக்கு வரும் உறவினர், நண்பர், விருந்தினர்களை அன்போடு உபசரிப்பார்.
18. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பார்கள்.
19. தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை; தந்தைசொல் மிக்க மந்திரமில்லை என்றும் சொல்வர்கள்.
20. தாய் தந்தையரின் முக்கியத்துவத்தை பிள்ளைகள் உணரும் படியே இந்த முது மொழிகள் உலகில் வழங்கி வருகின்றன.



## நல்ல பாம்பு

பாம்பு இனங்களில்நாகத்தையேநல்லபாம்புஎன்பார்கள். உண்மையில்இதுநல்லபாம்புதான். மற்றைய பாம்புகளை அடித்தாலோ அடிக்க முயற்சித்தாலோ உடனே அவை சீறி வந்துதீண்டிவிடும். ஆனால்நல்லபாம்புஒன்றுமட்டும்தான்"என்அருகில்வராதேதீண்டி விடுவேன்'எனபடமெடுத்துஎச்சரிக்கைசெய்யும். தொடர்ந்துதன்னைத்தாக்கவருபவரை நோக்கிஓரிருமுறைசீறிபயமுறுத்தும். இந்தஎச்சரிக்கைகளையெல்லாம்பொருட்படுத்தாமல்அதைத்தாக்கினால்தான்அதுநம்மைத்தீண்டும்மற்றும்வேளைகளில்அதுநம்மைப் பார்த்தாலே "உங்களுக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை" என்றவாறு ஓட்டம் பிடிக்கும். இதை நல்ல பாம்பு என்று சொல்வதற்கு வேறோர் காரணமும் உண்டு. தமிழில் சொற்கள் வழங்கும்முறைமையில்இயல்புவழக்கு, தகுதிவழக்குஎனஇருமுறைமைகள்உள்ளன. தகுதிவழக்கில்அமங்கலமானசிலசொற்களைபிரயோகிக்கும்போதுஅவற்றைமங்கலமாக சொல்வது வழமை. உ+ம் - இறந்து விட்டார் என்பதை காலமானார் அல்லது இறைவனடி சேர்ந்தார் என மங்கலமாகக் கூறுவர். இதன்படிநாக பாம்பு, நச்சு பாம்பு என்று சொல்வதில் உள்ள அமங்கலத்தை நீக்கி நல்ல பாம்பு என வழங்குவதும் வழக்காயிற்று.

மேலும் நல்ல பாம்பை அடித்து அது சாகாமல் தப்பி விட்டால் அடித்தவரைத் தேடித் திரும்பி வந்து பழி வாங்கும் என்பதெல்லாம் வெறும் கற்பனைக் கதைகளே. பாம்பின் உடலில்சிறுகாயம்ஏற்படினும்பாம்பு வேகமாக நகர முடியாத நிலை ஏற்படும். மேலும் அப்படி ஏற்படும் சிறுகாயங்களில் கூட எறும்பு போன்ற சிறு உயிரினங்கள் மொய்த்து காயத்தைப் பெரிதாக்க, பாம்பு நோயாளியாகி இறந்து விடும். பாம்புக்கு காதுகள் கிடையாது. அவற்றுக்கு காது என்பது அதிர்வுகளே! எதிரி ஓடி வருவதை நில அதிர்பு மூலம் உணர்ந்தே அது சட்டென்று ஓடி மறைந்து விடுகிறது. அப்படியே இரை வருவதையும் உணர்ந்து சட்டென்றுபதுங்கிஅதைக்கௌவிக்கொள்கிறது. மகுடிகேட்டு பாம்பு ஆடுகிறது என்பதும் தப்பான கருத்து. பாம்புக்கு கண் பார்வை உள்ளது அது மகுடியின் அசைவைப் பார்த்து அதற்கேற்ப தலையை அங்கும் இங்கும்அசைக்கிறது. மகுடியின்இடத்தில்சிறுகம்பைச்சுழற்றினாலும்கூடபாம்புதலையை அசைக்கும். இது எமது பார்வைக்கு ஆடுவது போலத் தோன்றும்.



## வவு. பி.செயலகம் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், மார்ச் 21
வவுனியா மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் வவுனியா பிரதேச செயலக அணி சம்பியனானது.

வவுனியா சிறுவர்பூங்கா மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் செட்டிகுளம் பிரதேச செயலக அணியை எதிர்த்து வவுனியா பிரதேச செயலக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தது வவுனியா பிரதேச செயலக அணி. ஆட்டத்தின் 22 ஆவது நிமிடத்தில் நடுவரின் தீர்ப்பை எதிர்த்து மைதானத்தை விட்டு வெளியேறியது செட்டிகுளம் பிரதேச செயலகம். இதனையடுத்து வவுனியா பிரதேச செயலகத்துக்கு ஏற்பாட்டாளர்களால் வெற்றி வழங்கப்பட்டது. (ம-23)

## சென். யூட் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 21
முல்லைத்தீவு கால்பந்தாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஏ பிரிவு கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் முல்லைத்தீவு சென். யூட் அணி கிண்ணம் வென்றது.

இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் முல்லை சென். யூட் அணியை எதிர்த்து இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. முல்லை சென். யூட் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. சிறந்த கோல் காப்பாளராக இரணைப்பாலை சென். அன்ரனிஸ் அணியின் அனோஜிதன், ஆட்ட நாயகனாக முல்லை சென். யூட் அணியின் தலைவர் மிலேனியஸ் தொடராட்ட நாயனாக இரணைப்பாலை சென். அன்ரனிஸ் அணியின் நிலோசன் ஆகியோர் தெரிவாகினர். (ம-23)






# பொற்பதி இந்து சம்பியனானது சிறிமுருகனை போராடி வீழ்த்தி

யாழ்ப்பாணம், மார்ச் 21
ஞானபாஸ்கரோதய வெற்றிக்கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில் பொற்பதி இந்து அணி சம்பியனானது.

ஞானபாஸ்கரோதய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பொற்பதி இந்து விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வதிரி சிறிமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற வதிரி சிறிமுருகன் அணி களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பொற்பதி இந்து விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக றொசான் 38 ஓட்டங்களையும், ருக்ஸ்மன் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வதிரி சிறிமுருகன் அணியின் சார்பில் சதீஸ்குமார் 2 இலக்குகளையும், உமேசுதன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

71 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வதிரி சிறிமுருகன் அணி, 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 56 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அதிகபட்சமாக பிரணவன் 34 ஓட்டங்களையும் உமேசுதன் 12 ஓட்டங்களையும் பெற்றனர். இதனையடுத்து 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றது பொற்பதி இந்து அணி. பந்துவீச்சில் பொற்பதி இந்து அணியின் தீபன், அஜந்தன் இருவரும் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். சிறந்த பந்துவீச்சாளராக பொற்பதி இந்து அணியின் தீபன், ஆட்டநாயகன் மற்றும் சிறந்த துடுப்பாட்ட வீரனாக அதே அணியின் றொசான், தொடராட்டநாயகனாக வதிரி சிறிமுருகன் அணியின் அனுதர்சன் ஆகியோர் தெரிவாகினர். நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனின் பிரதிநிதியாக உதயன் நிறுவனத்தின் பொதுமுகாமையாளர் என். ரட்ணசிங்கம் கலந்துகொண்டார். (ம-23)



சிறந்த பந்து வீச்சாளர் தீபன்



ஆட்டநாயகன் றொசான்



தொடர் ஆட்டநாயகன் அனுதர்சன்

## வல்வை, றேஞ்சர்ஸ் அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், மார்ச் 21
வடமராட்சி, பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் வல்வை, கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணிகள் வென்றன.

றெயின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக பி அணி மோதியது. இரண்டு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா 3 கோல்களைப் பதிவு செய்ததனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட முடிவில் வல்வை அணி வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் ஏ அணியை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக ஏ அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## வவு. பி.செயலகம் கால்பந்தாட்டத்தில் சாதித்தது

யாழ்ப்பாணம், மார்ச் 21
வவுனியா மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் வவுனியா பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது.

வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் செட்டிகுளம் பிரதேச செயலக அணியை எதிர்த்து வவுனியா பிரதேச செயலக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்கள் நிறைவில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:1 என்ற கோல் கணக்கில் வவுனியா பிரதேச செயலக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## யங்ஸ்ரார் அசத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 21
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன் யூட் கசன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் யங்ஸ்ரார் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

யங்ஸ்ராரின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டமொன்றில் அல் இக்பால் அணியை எதிர்த்து யங்ஸ்ரார் அணி மோதியது. 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது யங்ஸ்ரார். (ம-23)

# மண்டைதீவு கிரிக்கெட் மைதான விவகாரம் வடக்குமாகாண சபையிடமே அடுத்த கட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 21
வடக்கு மாகாணத்தில் பன்னாட்டுத்தர மைதானம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்லக்கூடிய பேச்சு இலங்கை கிரிக்கெட் சபைக்கும் வடக்கு மாகாண சபைக்கும் இடையில் நடைபெற்று வருகின்றது.

வடக்கு மாகாணத்தில் மண்டைதீவு பன்னாட்டுக் கிரிக்கெட் மைதானமொன்று அமையக்கூடிய இடமாக அடையாளப் படுத்தப்பட்டதை அடுத்து இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால கடந்த ஜனவரி மாதம் 23 ஆம் திகதி அடையாளமிடப்பட்ட இடத்தை நேரில் பார்வையிட்டார். [illegible] ஏக்கர் விஸ்தீரணமுடையது. மேலதிகமாக 15 ஏக்கர் தமக்கு வேண்டும் என்று இலங்கை கிரிக்கெட் சபையின் சார்பில் வடக்கு மாகாண சபையிடம் பேசு நடத்தப்பட்டது. மேலதிக இட ஒதுக்கீடு தொடர்பில் வடக்கு மாகாண சபை தற்போது பரிசீலித்து வருகிறது. அவ்வாறு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டால் மைதானக் கட்டுமானங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

மைதானக் கட்டுமானங்கள் 4 வருடங்களில் முழுமையடையும். 400 மில்லியன் ரூபா இதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று இலங்கை கிரிக்கெட் சபையின் உபதலைவர் மதிவாணன் உதயனுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் குறிப்பிட்டார். (ம-23)



(கோப்புப்படம்)

# முக்கிய ஆட்டம் நாளை

அயர்லாந்து - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் நான்காவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

முடிவடைந்த முதல் மூன்று ஆட்டங்களில் முதலிரு ஆட்டங்களில் ஆப்கானிஸ்தான் வெற்றிபெற்றது.

மூன்றாவது ஆட்டத்திலும் வெற்றிபெற்றால் தொடரைக் கைப்பற்றலாம் என்ற நிலை இருந்தது. ஆனால் அந்த ஆட்டத்தில் வெற்றிபெற்று தொடரில் தனது இருப்பைத் தக்கவைத்தது அயர்லாந்து. இந்த நிலையில் மூன்றாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

நாளைய ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் வெற்றி பெற்றால் அந்த அணி கிண்ணம் வெல்வது உறுதியாகும். அதேநேரம்



அயர்லாந்து வெற்றி பெற்றால் தொடர் 2:2 என்ற நிலைக்குத் தள்ளப்படும். இதனால் இறுதியாட்டத்தில் வெற்றிபெறும் அணியே சம்பியன் என்ற நிலை தோற்றம்பெறும். மொத்தத்தில் தொடரைத் தீர்மானிக்கவல்ல ஆட்டமாக நாளைய ஆட்டம் மாறியுள்ளது. (ம)



# எடுபடவில்லை அஸ்வினின் சுழல் இந்தியாவை சமன்செய்தது ஆஸி.

ஆட்டத்தின் இறுதி நாளான நேற்று அஸ்வினின் சுழல் எடுபடாமல்போக இந்திய அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தை சரிவில் இருந்து மீண்டுவந்து சமநிலையில் முடிந்தது ஆஸ்திரேலிய அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 451 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அணித் தலைவர் சிமித் ஆட்டமிழக்காமல் 178 ஓட்டங்களையும், மக்ஸ்வெல் 104 ஓட்டங்களையும், ரென்சொவ் 44 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜடேயா 5 இலக்குகளையும், யாதவ் 3 இலக்குகளையும், அஸ்வின் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்தியா 603-9 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக புஜாரா 202 ஓட்டங்களையும், சகா 117 ஓட்டங்களையும், விஜய் 82 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கும்மின்ஸ் 4 இலக்குகளையும், கெபி 3 இலக்குகளையம், லையன், கசில்வூட் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

152 ஓட்டங்கள் முன்னிலையுடன் பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி நேற்று முன்தின நான்காம் நாள் முடிவில் 23-2 என்ற நிலையில் இருந்தது. இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்த்து ஆட்டத்தை சமநிலையில் முடிக்கப் போராட வேண்டும் என்ற நெருக்கடியில் ஆஸ்திரேலியாவும் 8 இலக்குகளைக் கைப்பற்ற வேண்டும் என்ற முனைப்பில் இந்தியாவும் களமிறங்கின.

நேற்றைய நாளின் உணவு இடைவேளைக்கு முதல் சிமித், ரென்சொவ் இருவரும் வீழ்த்தப்பட்டனர். இந்தியாவின் கை ஓங்குகிறது என்று எதிர்பார்க்கையில் ஷோன் மார்ஷ், ஹான்ட்ஸ்கொம் இணைந்து மிகவும் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி நீண்ட நேரம் நிலைத்தனர். இரண்டாவது செசனில் இலக்குகள் சரியவில்லை. 53 ஓட்டங்களுடன் மார்ஷ் ஆட்டமிழந்தாலும் தொடர்ந்தும் நிலைத்துநின்று ஆட்டத்தை சமன்செய்தார் ஹான்ட்ஸ்கொம்.

இரட்டைச் சதம் விளாசிய புஜாரா ஆட்ட நாயகனாகத் தெரிவா னார். (ம)

# சதம் கடந்ததில் சகா மகிழ்ச்சி

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நேற்று நிறைவடைந்த டெஸ்ட் ஆட்டத்தில் சதம் கடந்தமை முழுத் திருப்தியைத் தருகிறது என்று இந்திய இலக்குக் காப்பாளர் சகா தெரிவித்தார்.

ஆட்டத்தின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"காயத்தில் இருந்து மீண்டு வந்த பின்னர் நான் ஒரு சில அரைச்சதங்களைப் பதிவுசெய்ய போதிலும், சதம் கடக்கவில்லை. ஆஸ்திரேலியாவுக்கு எதிராகக் கிடைத்த இந்தச் சதம் மிகவும் திருப்தி தருகிறது. அடுத்த ஆட்டங்களிலும் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை உள்ளது" என சகா மேலும் தெரிவித்தார். (ம)

# சென்றலைட்ஸ் அணி அபாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

ஜொனியன்ஸ், சென்றலைட்ஸ் வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில் சென்றலைட்ஸ் அணி சம்பியனானது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி 23.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பிருந்தாபன் 25 ஓட்டங்களையும், றஜீத்தன் 14 ஓட்டங்களையும், கானமிர்தன் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணியின் சார்பில் அலன்குமார் 4 இலக்குகளையும், ஜெரிக்துசான் 2 இலக்குகளையும், வதுனன், மயூரன், ஜோம்ஸ் ஜான்சன், அலன்ராஜ் நால்வரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

127 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 37.4 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அலன்குமார் 26 ஓட்டங்களைப் பெற்றார்.

சிறந்த துடுப்பாட்ட வீரனாக ஜொனியன்ஸ் அணியின் பிருந்தாபன், சிறந்த களத்தடுப்பளராக சென்றலைட்ஸ் அணியின் நிரோசன், சிறந்த பந்துவீச்சாளராக சென்றலைட்ஸ் அணியின் அலன்குமார், ஆட்டநாயகனாக சென்றலைட்ஸ் அணியின் ஜெரிக்துசான் ஆகியோர் தெரிவாகினர். (ம-23)




# பெடரர் சம்பியன்

அமெரிக்காவில் நடைபெற்றுவந்த பி.என்.பி. ரென்னிஸ் தொடரில் மகுடம் சூடினார் சுவிற்சர்லாந்தின் நட்சத்திர வீரரான றோயர் பெடரர்.

கலிபோர்ணியாவில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் 9 ஆம் இடத்திலுள்ள வீரரான பெடரரை எதிர்த்து 3 ஆம் இடத்திலுள்ள பிறிதொரு சுவிட்சர்லாந்த வீரரான வாவ்ரிங்கா மோதினார்.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 6:4, 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் சம்பியனானார் பெடரர். பி.என்.பி. தொடரை பெடரர் கைப்பற்றுவது நடப்பு வருடத்துடன் ஐந்தாவது தடவை.

முன்னதாக முடிவடைந்த ஆஸ்திரேலியத் தொடரிலும் பெடரரே வெற்றிபெற்றார். இந்த வெற்றியுடன் அவர் தரப்படுத்தலில் மேலும் முன்னேற்றமடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)



# சைவத் தமிழ் வித்தி. சம்பியன்



யாழ்ப்பாணம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான எல்லேயில் பெண்கள் பிரிவில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி கிண்ணம் வென்றது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணியை எதிர்த்து வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய அணி நிர்ணயிக்கப்பட்ட 40 பந்துகளில் ஓர் ஓட்டத்தைப் பெற்றது. அந்த ஓட்டத்தை ஜீவிதா பெற்றுக் கொடுத்தார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி 15 பந்துகளில் இரண்டு இலக்குகளை மாத்திரம் இழந்து இரண்டு ஓட்டங்களைப் பெற்று கிண்ணம் வென்றது. அதிகபட்சமாக கீர்த்திகா, தனுசா தலா ஓர் ஓட்டத்தைப் பெற்று வெற்றிக்கு வித்திட்டனார். (ம-422)



# எலினா வெஸ்னினா கிண்ணம் வென்றார்

அமெரிக்காவில் நடைபெற்றுவந்த பி.என்.பி. ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் எலினா வெஸ்னினா சம்பியனானார்.

கலிபோர்னியாவில் நடைபெற்றுவந்த இந்தத் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் நேற்று நடைபெற்றது. எலினாவெஸ்னினாவைஎதிர்த்துஸ்வெட்லானா மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவதுசெற்றை5:7என்றஅடிப்படையில் இழந்தார்வெஸ்னினா. அடுத்தசெற்றிலும்தோல்வியடைந்தால்கிண்ணக்கனவுதவிடுபொடியாகும்என்றநிலையில் அடுத்த இரு செற்களையும் முறையே 7:5, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெஸ்னினா கிண்ணம் வென்றார்.

இந்தத் தொடர் ஆரம்பமாகும் முன்னர் வெஸ்னினா 24 ஆவது இடத்தில் இருந்தார். பி.என்.பி. தொடரில் மகுடம் சூடியதன் மூலம் அடுத்ததாக வெளியாகவுள்ள தரப்படுத்தலில் 15 இடங்களுக்குள் வரக்கூடிய வாய்ப்பு வெஸ்னினாவுக்கு ஏற்பட்டுள்ளது. (ம)

கனடாவில் நிரந்தர குடியேறல் வேலைவாய்ப்பு கல்வி கருத்தரங்கு
இனிமேலும் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல வேண்டாமே!
குறைந்த கட்டணத்துடன் சட்டபூர்வமாக குடும்பத்துடன் கனடாவில் குடியேறலாம்
நாள்-26-03-2017
ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணி
முற்பதிவு அவசியம்
V2 Travels
0768226236
49 A சப்பல் லேன்
யாழ்ப்பாணம்

வேலைவாய்ப்பு
கொக்குவிலில் உள்ள சுவடி நிறுவகத்தின் பணிமனையில் பணியாற்றுவதற்கு 18 - 26 வயதிற்கு உட்பட்ட பெண் பயிலுனர்கள் உடன் தேவை.
தொடர்பு -
076 838 4466, 077 809 6266

# மீண்டுவந்தோம்; கோக்லி பெருமிதம்

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நேற்று முடிவுக்கு வந்த மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றது அபாரமானது என்று தெரிவித்தார் இந்திய அணித்தலைவர் கோக்லி.

இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் இந்தியாதோற்றது. ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடி 451 ஓட்டங்களைக் குவித்த பின்னர் இந்தியா அதை எட்டிப்பிடிக்கும்என்றுஎவரும்நினைக்கவில்லை. கோக்லியும் அவ்வாறே தனதுகருத்துக்களைப்பகிர்ந்துள்ளார். நாணயச் சுழற்சியில் தோற்றதால் எமக்கு அதிகளவான நெருக்கடிகள் இருந்தன. எமது துடுப்பாட்ட வீரர்கள் குறிப்பாகபுஜாரார்அந்தநெருக்கடிகளை இல்லாமல் செய்து விட்டார். அவரது ஆட்டம் மிகச் சிறந்த முறையில் இருந்தது. எமது முன்வரிசையின் பெரும் பலம்அவர்எனக்கோக்லிமேலும்தெரிவித்தார்.

ஆட்டநாயகன் விருது வென்ற புஜாரா, ஆஸ்திரேலியாவுக்கு எதிராகப் பெறப்பட்டஇரட்டைச்சதத்தை எனது வாழ்நாளின் சிறந்த ஆட்மாகக் கருதுகிறேன். அடுத்ததாக தர்மசாலாவில் நடைபெறவுள்ள ஆட்டத்திலும் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்த முனைப்புக் காட்டுவேன் என்று தெரிவித்தார். (ம)





# தமிழ்நாடு கிண்ணம் வென்றது

இந்திய மாநிலங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட விஜய் ஹசாரே தொடரில் தமிழ்நாடு அணி கிண்ணம் வென்றது.

நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் தமிழ்நாட்டை எதிர்த்து பெங்கால் மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்றுத் துடுப்பெடுத்தா டத் தீர்மானித்தது தமிழ்நாடு. அந்த அணி 47.2 பந்துப் பரிமாற்றங்களில் 217 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக டினேஸ் கார்திக் 112 ஓட்டங்களைக் குவித்தார். இந்திரஜித் 32 ஓட்டங்களையும், சந்தர் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சமி 4 இலக்குகளையும், டின்டா 3 இலக்குகளையும், கனேசிக் செத் ஓர் இலக்கையும்கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய பெங்கால் 45.5 பந்துப் பரிமாற்றங்களில் 180 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. இதனால் 37 ஓட்டங்களால்வெற்றிபெற்று கிண்ணம் வென்றது தமிழ்நாடு. ஆட்டநாயகனாக டினேஸ் கார்திக் தெரிவானார். (ம)

# நடுவர் காட்டிய தடுமாற்றம்

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் நேற்று நிறைவடைந்த ஆட்டத்தில் மைதான நடுவர் கிறிஸ் கபனி வெளிப்படுத்தியதடுமாற்றம்சமூகவலைத்தளங்களில்வைரலாகப் பரவி வருகிறது.

இந்திய வீரர் புஜரா 142 ஓட்டங்களைப் பெற்று விளையாடிக் கொண்டிருந்த போது, ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஹசில்வூட்பந்துவீசினார். பவுன்சராகச்சென்றபந்தைபுஜாரா அடித்தாடமுற்பட்டார். பந்துதுடுப்புமட்டையில்படாமல்மேலாகச்சென்றது. ஆஸ்திரேலியவீரர்கள்எவரும்ஆட்டமிழப்புக்கு முறையிடவில்லை. ஆனால்நடவர்கிறிஸ்அவசரப்பட்டுவிரலைத் தூக்கிவிட்டார். பின்னர் அவர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டுதொப்பியைசரிசெய்வதுபோல்சமாளித்துவிட்டார். எனினும்வலைத்தளவாசிகள்அவரைவிடுவதாகவில்லை. (ம)

# திறப்பு விழா இல்லாமல் பாவனைக்கு விடப்பட்டது பருத்தித்துறை மூர்க்கக் கடற்கரை சிறுவர் முற்றம்

பருத்தித்துறைமூர்க்கக்கடற்கரையில் அமைக்கப்பட்ட சிறுவர் விளையாட்டு முற்றம்திறப்புவிழா இல்லாமல் மக்கள் பாவனைக்கு வழங்கப்பட்டது.

39 இலட்சம் ரூபா செலவில் கடந்த ஆண்டில் இந்த சிறுவர் விளையாட்டு முற்றம் அமைக்கப்பட்டது. கடந்த ஜனவரி மாதமளவில் இதன் வேலைப்பாடுகள் பூர்த்திய டைந்தன. வடக்கு முதல்வர் சி.வி. விக்னேஸ்வரன் இதைத் திறந்துவைப்பார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் திறப்பு விழா நடைபெறுவது நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்டுவந்தது. இதற்கு பல தரப்பினரும் தமது விசனத்தைத் தெரிவித்து வந்தனர். இந்த நிலையில் இறுதியாக திறப்புவிழா இல்லாமலேயே இந்த சிறுவர் முற்றம் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளது. (ம-422)



பஸ் விற்பனைக்கு
WP NB.... தொடரிலக்க ,2012 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட மிக நல்ல நிலையில் உள்ளடாட்டா பஸ்வண்டி உடன் விற்பனைக்கு உண்டு.
சிலிண்டர் கொள்ளளவு :3784 cc
ஆசன எண்ணிக்கை :38+1
நீளம் :914 cm ,அகலம் :203 cm ,
உயரம் :285 cm
தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்
0714115004

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.